


அறைவு 02 இயம் 46 July 12 - 18, 2014
உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்
மலைமுரசு
MALAIMURASU
Registered as a newspaper in Sri Lanka
பக்கங்கள் : 16 விலை : 30.00 பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

## வர்ணத்தில் பர்தா



பர்தா தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு முடிவு காண வர்ண நிற பர்தாவை அணிவது தொடர்பாக சிறீலங்கா முஸ்லிம் கவுன்சில் விழிப்புணர்வு நடவடிக்கை 13

# எஞ்சிய எண்ணைக் குதங்களையும் கைப்பற்ற இந்தியா முயற்சி



திருகோணமலையில் சீனன்குடாப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள எண்ணைக் குதங்களைப் பெற்றுக்கொள்ள இந்தியா முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளது.

எனினும் இம் முன்மொழிவுகள் தொடர்பாக இலங்கையின் மத்திய வங்கி அமைதிகாப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரத்தானியராட்சிக்குட்பட்டிருந்த போது இந்த எண்ணைக் குதங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. தற்போது வர்த்தக நடவடிக்கைகளுக்காக இந்த எண்ணைக் குதங்களில் பதினைந்து எண்ணைக் குதங்களை இந்தியா தனது இந்தியன் ஓயில் கோப்பரேசன் மூலம் இலங்கைப் பெற்றோலியக் 13

## ஊடகவியலாளருக்கு உயிர் அச்சுறுத்தல்

(கதிரவன்)

திருகோணமலை குச்சவெளிப்பகுதி பிராந்திய ஊடகவியாலாளர் ஏ.எல்.றபாய்தீனிற்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை தலைமையகக் காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டில் குச்சவெளிப் பிரதேச சபைத் தவிசாளர் எம்.முபாறக்கினாலேயே தனக்கு இந்த மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் பத்திரிகையொன்றில் வெளியான செய்தியொன்றிக்காக செய்தியாளர் ஏ.எல்.றபாய்தீன்பாபுவை....... "மூன்று நாட்களுக்குள் என்னசெய்வேன் எனத் தெரியுமா?" என 13

# கையளிக்கப்படுபவர்களின் பெயர் விபரங்களை வெளியிடுங்கள்

## திருகோணமலைத் தமிழ்ச் சிவில் சமூகம் வேண்டுகோள்

அகதி அந்தஸ்த்துக்கோரிப் பயணித்து கடலில் கைதாகி சிறீலங்கா கடற்படையிடம் கையளிக்கப்படுபவர்களின் பெயர் விபரங்களை வெளியிடுமாறு திருகோணமலைத் தமிழ்ச் சிவில் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்வேண்டுகோளானது இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரை நோக்கி விடப்பட்டுள்ளது.

விபரங்கள் எவையும் வெளியிடப்படாமல் உயிருக்கு அஞ்சி ஓடிய மக்களை மீண்டும் சிறீலங்கா கடற்படையிடம் ஒப்படைக்கும் போது அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அவர்களின் உறவினர்கள் தெரிந்துகொள்ள முடியாது போய்விடும் என்பதாலேயே இந்த வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

இவ்வேண்டுகோளைத் தமிழ்ச் சிவில் சமூகத்தின் 13



# கடத்தப்பட்ட குழந்தை

# காவல்துறை நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்றதா?

திருகோணமலையில் கடத்திச் செல்லப்பட்ட 14 மாத ஆண்குழந்தை தற்போதுவரை கண்டுபிடிக்கப்படாத நிலையில் காவல்துறை இவ்விடயத்தில் நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்றதா என்ற கேள்வி அப்பகுதி மக்களிடையே பரவலாக எழுந்துள்ளது.

கடந்த 09ம் திகதி மதியம் 11.30 மணியளவில் அனுராதபுரம் சந்திப்பகுதியில் வைத்து மற்றொரு 15வயதுச் சிறுமியுடன் கடைக்குச் சென்று திரும்பும் வழியில் முச்சக்கரவண்டியில் வந்த இருவரால் குறித்த குழந்தை பறித்துச் செல்லப்பட்டுள்ளது.

பறித்துச் சென்ற இருவரையும் அப் பதினைந்து வயதுச் சிறுமி அடையாளம் காட்டியுள்ள நிலையில் அவர்கள் அன்றைய தினமே கைதாகி அதிலொருவர் மறுநாள் விடுவிக்கப் பட்டுள்ளதாகவும் குழந்தைக்கு நேர்ந்த கதி என்ன என்று இன்றுவரை(09) தெரியாதிருப்பதாகவும் கடத்திச் செல்லப்பட்ட குழந்தையின் தாயார் தெரிவித்தார்

மற்கொ முகம்மதியா நகர் பகுதியில் வசிக்கும் முகமட் பலீல், முகாரி பாத்திமா ஆகியோரின் 14 மாத ஆண்குழந்தையே கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

கடந்த 09ம் திகதி நடைபெற்ற இக் கடத்தல் சம்பவம் தொடர்பாக பெற்றோர் தகவல் தருகையில் தம்மை மிரட்டி



அடிபணிய வைக்கவே இக்கடத்தல் நடைபெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2012ம் ஆண்டு இவர்களது வீட்டாருக்கும் அயலிலுள்ள வீட்டாருக்கும் ஏற்பட்ட பிணக்கினை அடுத்து இவர்களது வீடு சிலரால் சூறையாடப்பட்டதாகவும் அந்நேரத்தில் அவ்வீட்டில் தங்கியிருந்த தமிழ் யுவதியொருவரை இழுத்துச் சென்று வன்கலவிக்கு உட்படுத்த முனைந்ததாகவும் அக்காலத்தில் வழக்குகள் பதிவாகியுள்ளன. இந்நடவடிக்கையில் ஈடுபட்ட 10 ஆண்கள் 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு

MALAIMURASU

இல 159ஏ, கடல்முக வீதி

திருகோணமலை

malaimurasu@hotmail.com 075-4252042


## ஊடகவியலாளரும் உயிர் அச்சுறுத்தலும்

ஊடகத்துறையைத் தேர்தெடுத்தவுடனேயே ஊடகவியலாளர்களை தற்கொடையாளர்களாக (நோக்கத்திற்காகத் தாமே மனமுவந்து தமது உயிரைக் கொடுப்பவர்கள்) உலகம் கருதத் தொடங்கிவிட்ட காலமொன்றில் நாம் பயணித்துக்கொண்டு இருக்கின்றோம்.

உலகிலேயே உண்மைக்காகப் போராடும் அதிசிறந்த துறையான ஊடகத்துறைக்கு குற்றஞ்செய்பவர்கள் அனைவரும் அஞ்ச வேண்டியவர்களாகவே இருக்கின்றார்கள்.

கத்தி எடுத்தவனுக்குக் கத்தியால் சாவு என்ற பழிமொழியைப் பொய்யாக்கும் துறை ஊடகத்துறைதான். இத்துறையிலிருப்பவனின் ஆயதம் பேனாவாக இருந்தாலும் அவன் அப்பேனாவால் கொல்லப்படுவதில்லை. அவன் கொல்ப்படுவது ஆயுதங்களால்தான். அதனால்தான் சிறந்த ஊடகவியலாளன் எப்போதுமே தனது பேனாவை ஒரு ஆயுதத்துடன் ஒப்பிடவே மாட்டான். ஏனெனில் நியாயத்திற்காகப் போராடும் அந்த எழுத்தாணி ஒரு மகாத்மாவே!

உலக அபிவிருத்திக் குறிகாட்டிகளில் ஒன்றாக ஊடக சுதந்திரம் உள்ளடக்கப் பட்டிருப்பது அதன் உன்னதத் தன்மைக்கு ஓர் உதாரணம் எனலாம். ஆனால் அதற்கும் மேம்பட்ட உதாரணமாக ஆயரக்கணக்கான தற்கொடையாளர்கள் அந்தத் துறைக்காகத் தமது இன்னுயிரை ஈந்திருப்பது தான் ஊடகத்தை உன்னதமாக்கியிருக்கின்றது.

உயிர்ப்பயமுள்ள ஊடகத்துறையை ஏன் அவ்வாறானவர்கள் தேர்ந்தெடுத்தார்கள் என்ற வினாவிற்கு வரும் பதில் வெறும் வருமானத்திற்காக அல்ல என்பதுதான். உண்மையில் இலங்கைத் தீவில் மாவட்டங்கள் தோறும் ஊடகப் பணியை செம்மையாய் நிறைவேற்றும் மனிதர்கள் நிறைந்த வருமானத்தை ஈட்டிக்கொள்வதில்லை என்ற உறைக்கும் உண்மையை பின்தள்ளிவிட்டு இந்தத் துறைக்குள் வருபவர்களின் எண்ணம் எல்லாம் சமூகத்திற்காக எதையாவது ஒன்றைச் செய்துவிடத் துடிக்கும் மனிதாபிமானம் தான்.

ஊடகத்துறையென்றாலே உயிர்ப்பயம் மிக்கது என்னும் கருத்திருப்பதால் அந்த உயிர் அச்சுறுத்தல் எழும் போதெல்லாம் அதனைக் கருத்திலெடுக்காமல் பணி செய்யும் கர்மவீரர்களான எத்தனையோ இலங்கையரை, ஆற்றல் மிக்கவர்களை நாம் இழந்துவிட்டோம்.

உயிர்ப்பயம் இருக்கின்றது என்பதற்காக அப்பயத்தை ஏற்படுத்துபவர்களை சமூகத்தின் முன் முகத்திரையைக் கிழித்து வெளிப்படுத்த நாம் தயாராகி விட்டோமா?

"அச்சத்தைத் தந்தவனுக்கே அதனைப் பரிசளி" என்ற தர்மம் எம் அனைவரையும் பாதுகாக்கும் என்பதால் நாம் அனைவரும் ஒன்றாகி சாதாரண மிரட்டலோ அல்லது உயிர்கொலைத் தாக்குதலோ அதனை ஒற்றுமைப்பட்டு எதிர்க்கவும் வேண்டிய கடமைப்பாடு எம் ஊடகவியலாளர் அனைவருக்கும் உண்டு.

அண்மையில் திருகோணமலையில் ஊடகவியலாளர் ஒருவருக்கு அரசியல்வாதி ஒருவரால் உயிர்கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகக் காவல்துறையில் முறையிடப்பட்டுள்ளது.

இவ்வச்சுறுத்தல் வெறுமனே ஒரு ஊடகவியலாளனுக்குமட்டும் விடப்பட்டதல்ல. ஒட்டுமொத்த ஊடகச் சுதந்திரத்திற்கும் எதிராக விடப்பட்டது.

இதனைத் தனிப்பட்ட விடயமாகச் சகித்துக்கொள்ள திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டால்..... நாளை உவ்வொருவரின் வீட்டிற்கும் அழைப்புக்கள் வரலாம்....

என்ன செய்யப்போகின்றது திருகோணமலை

## புனித மரியாள் கல்லூரியின் 150 ஆண்டுகள் நிறைவு பழைய மாணவிகளை ஒன்றுகூட அழைப்பு

புனித மரியாள் கல்லூரியின் 150வது வருட நிறைவை ஒட்டிய கொண்டாட்டங்கள் தொடர்பான ஜுபிலி நடைப்பயணம், பாடல் உருவாக்கம் மற்றும், பாடசாலையின் கடந்த கால பதிவுகளை நினைவு கூறுவது சம்பந்தமான விடயங்கள் தொடர்பாக் கலந்துரையாடுவதற்கு எதிர்வரும் 13.07.2014 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு பாடசாலையின் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயலாளர் திருமதி. ஸ்டெலா மரியநேசன் கேட்டுக்கொள்ளுகின்றார். தொடர்பு: 077-9586823 மின்னஞ்சல்: stmaryc@gmail.com

(ஜெய்)

## பளிங்குக் கடற்கரையில் வான்படையின் புதிய உணவகம்

பளிங்குக் கடற்கரையைத் தமதாக்கிக் கொண்டுள்ள இலங்கையின் வான்படையினர் அங்கு கடலுணவுகளை விற்கும் புதிய உணவகம் ஒன்றைத் திறந்துள்ளனர்.


கடந்த 5ம் திகதி இவ்வுணவகம் வான்படைத் தளபதியின் வருகையுடன் ஆரம்பமாகியுள்ளது.

றலா என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ்வுணவகத்தை வான்படைத் தளபதி திறந்து வைத்துள்ளார்.

(ஸ்ரீ)



## வன்கலவிக்குள்ளான சிறுமி சந்தேகநபர் தடுப்பில்




திருகோணமலை கிண்ணியா சம்மாவஜ்ஜதீவு பகுதியிலுள்ள 12 வயது சிறுமியை கடத்தி சென்று துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக கூறப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தின் பின்னர் சந்தேகநபர் தலைமறைவாகியிருந்த நிலையில், கைது செய்யப்பட்டுள்ளதாகக் காவல்துறையினர் தெரிவித்தனர்.

12 வயதான சிறுமியை தம்பலகாமம் பகுதிக்கு கடத்தி சென்று கடந்த 03ஆம் திகதி வன்கலவிக்கு உட்படுத்தியுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டை அடுத்து, சிறுமி கடந்த 05ஆம் திகதி காவல்துறையினரால் மீட்கப்பட்டதுடன், சட்ட மருத்துவ அதிகாரியின் சான்றிதழை பெறுவதற்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது.

சம்பவம் தொடர்பில் கிண்ணியா காவல்துறையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வெடிக்காத கிபீர் குண்டு வெளிவந்தது

திருகோணமலை சலப்பையாறு பகுதியில் கிபீர் போர் வானூர்தியில் இருந்து எறியப்பட்டதாக கருதப்படும் வெடிக்காத குண்டொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

தனியார் நிறுவனம் ஒன்று தமது வளாகத்தை மேம்படுத்தும் நோக்கில் நிலத்தை அகழந்த போது குறித்த குண்டு கண்டுபிடிக்கப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இரண்டரை அடி சுற்றளவை கொண்ட குறித்த குண்டு சலப்பையாறு பகுதியில் உள்ள களப்பொன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ)

## வாகனங்களை வாடகைக்குக் கேட்கும் கிழக்கு மின்சாரசபை

கிழக்கு மாகாண மின்சாரசபையானது தனது அலுவலகங்களுக்கு வாகனங்களை (வான்) வாடகைக்குக் கேட்டுள்ளது.

அத்துடன் லொறி மற்றும் வதிவிட வீடுகளையும் கிழக்கில் தனது பாவனைக்காகக் கேட்டுள்ளது. கிழக்கின் மின்சாரசபைக்கு அவற்றை வருடாந்த வாடகைக்கு வழங்க விரும்புபவர்கள் தமது விருப்பறிவிப்புக்களை விதந்துரைக்கப்பட்ட படிவத்தில் நிரப்பிச் சமர்ப்பிக்க முடியும் என அவ்வறிவித்தல் தெரிவிக்கின்றது.

மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலைக் காரியாலயங்களில் இவ்விதந்துரைக்கப்பட்ட படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து எதிர்வரும் 23ம் திகதிக்கு முன்னர் பிரதிப் பொது முகாமையாளர், மின்சார சபை, திருகோணமலைக் காரியாலயத்திற்குக் கிடைக்கும் வண்ணம் அனுப்பப்பட வேண்டும் என அவ்வறிவித்தல் மேலும் விளம்பியுள்ளது.

(ஸ்ரீ)

## திவிநெகும அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி

கடந்த 07ம் திகதி திருகோணமலை மாவட்ட திவிநெகும அபிவிருத்தி அலுவலர்களுக்கான ஒருநாள் பயிற்சிப் பட்டறை மாவட்டச் செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இப் பயிற்சிப் பட்டறையில் திவிநெகும திணைக்களத்தின் நோக்கம் மற்றும் அபிவிருத்தி அலுவலர்களின் பொறுப்புக்கள் தொடர்பாகவும் விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

மாவட்டச் செயலாளர் ரி.ரி.ஆர்.டி சில்வா மற்றும் பொருளாதாரப் பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்துகொண்டு விளக்கங்களை அளித்திருந்தனர்.

(ஸ்ரீ)

## மரமா? விறகா ? வெட்டச் சென்றார்கள்

(ஹில்மி)

திருகோணமலை கிண்ணியா கண்டல்காட்டுப் பகுதியில் 06 பேர் இராணுவத்தினரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக 06 பேரும் கிண்ணியா காவல்துறைடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட தாம் தாக்கப்பட்டதாக விசாரணைகளின் போது சந்தேகநபர்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளதாக தெரிகின்றது.

விசாரணைகளின் பின்னர் ஆறு சந்தேகநபர்களும் காவல்துறையின் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## கிங்கோரிங்கோ அரிமா கழகத்தின் புதிய நிர்வாக சபை தேர்வு

(சதி)

கிங்கோரிங்கோ அரிமா கழகத்தின் 2014ம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை தேர்வாகியுள்ளது. அதன்படி தலைவராக தங்கராசா சதீசன் தெரிவானார். இவர் அண்மையில் சமாதான நீதவானாகப் பிரமானம் செய்ததும் குறிப்பிடத்தக்கது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புச் செய்திகள்:

## கிழக்கின் தொழில்முயற்சியாளருக்கு கொமர்சல் வங்கி பயிற்சி




கிழக்கின் தொழில் முயற்சியாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் கொமர்சல் வங்கி அவர்களது வர்த்தகத்திற்குத் தேவையான பெறுமதி மிக்க தகவல்களை வழங்கும் பட்டறையொன்றை நடாத்தி முடித்துள்ளது.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 120 தொழில்முயற்சியாளர்களே இத்திட்டத்தின் பயனை அனுபவித்துள்ளனர்.

மத்தியவங்கியுடன் இணைந்து கொமர்சல் வங்கியின் கிழக்குப் பிராந்திய முகாமையாளரான திரு. கணேசனின் பங்களிப்புடன் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான தொழில் முயற்சியாண்மையின் விருத்தியும் நிதி அறிவும் என்ற கருப்பொருளில் இரண்டு பட்டறைகள் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ)

## களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையாருக்குப் பறவைக் காவடி



(உதயகாந்த்)

மட்டக்களப்பில் வரலாற்று சிறப்பு மிகு ஆலயங்களில் மூர்த்தி , தலம் , தீர்த்தம் யாவையும் ஒருங்கே அமையப் பெற்ற ஆலயங்களில் ஒன்றாகிய களுதாவளை சுயம்புலிங்க பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தின் இறுதிநாள் தீர்த்தோற்சவத்தினை முன்னிட்டு அன்றைய தினம் பக்தர்களால் நேர்த்தியாக பறவைக்காவடி எடுக்கப்பட்டது.

## மாவட்ட ஊடகவியலாளர் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பாக ஆராய்வு

(லியோன்) மட்டக்களப்பு மாவட்டத்தில் ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் கடந்த 07ம் திகதி மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மனநல வைத்திய நிபுணர் ஜுடி ரமேஸ் ஜெயக்குமாரினால் ஊடகமும் மனநலமும் தொடர்பில் , விளக்கவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

இந்த நிகழ்வினை மட்டக்களப்பு மாவட்ட செயலக தகவல் திணைக்கள அதிகாரி எல்.தேவஅதிரன் ஒழுங்குபடுத்தியிருந்ததுடன் இந்த கூட்டத்தில் மாவட்ட செயலக கணக்காளர் நேசராசாவும் கலந்துகொண்டார்.

இங்கு மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தியில் ஊடகவியலாளரின் பங்கு தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபரினால் கருத்துரைக்கப்பட்டது.

அத்துடன் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அரச திணைக்களங்களினால் பொதுமக்களுக்கு ஆற்றப்படும் சேவைகள் தொடர்பிலும் கருத்துகள் பரிமாறப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் நலனோம்பு விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் மாதம் ஒரு முறை ஊடகவியலாளர்களை அழைத்து மாவட்டத்தின் நிலைமைகள் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பில் கலந்துரையாடுவது எனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கடமையேற்ற பின்னர் நடைபெற்ற முதலாவது ஊடகவியலாளர் சந்திப்பு இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது.









# வெள்ளை மனிதர்களாகப் பயணிக்கும் மண்ணிற மனிதர்களின் கருத்துலகம்

**- சி. ஜெயசங்கர் -**

மனிதர்கள் நாகரிகமான வாழ்க்கை முறைகளை அமைத்துக்கொண்டு மாண்புடன் வாழ்வதும் மற்றவர்களின் வாழ்க்கை முறைகளை விளங்கிக்கொள்வதும் மதிப்பதும் கொண்டாடுவதும் மேன்மைக்குரியவை. இங்கு நாகரிகம் என்றால் என்ன ? எது நாகரிகம் என்று யார் சொல்கிறார்கள் ? ஏன் சொல்கிறார்கள்? என்பதை விளங்கிக் கொள்வது அடிப்படையானது.

ஏனெனில், ஆசியக் காட்டுமிராண்டிகளை நாகரிகப்படுத்தும் நோக்கிலேயே மேற்கு ஐரோப்பியர்கள் குறிப்பாக ஆங்கிலேயர்கள் லத்தீன் அமெரிக்கா ஆசிய, ஆபிரிக்க, உள்ளிட்ட காலணித்துவப்படுத்திய நாடுகளை நோக்கிய பயணங்களும் பணிகளும் அமைந்திருந்த என்பதாகவே உலக வரலாறு என்று நாங்கள் படித்துக் கொண்டிருக்கும் அவர்களது வரலாறுகளில் எழுதி வைத்தும் எழுதியும் கொண்டிருக்கிறார்கள்.

2000 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வந்து கொண்டிருக்கும் தமிழ்ச் சமூகங்கள் உட்பட்ட பல்வேறு சமூகங்களின் பல்வகைப்பட்ட அறிவு மரபுகளை மூடநம்பிக்கைகளாக கல்விவழி கற்றுத்தரப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதனை கேள்விக்குட்படுத்தும் அதிகார பூர்வ அமைப்புக்கள் எதனையும் உருவாக்கிய வரலாறும் எமது அறிவுச் சூழலில் காணப்பட்டதில்லை.

பிரான்ஸ் பனொன் குறிப்பிடுவது போல "கறுப்புத் தோலில் வெள்ளை மனிதர்களாக உலா வந்து கொண்டிருக் கின்றோம்.



காலனித்துவ கல்வி முறையை முன்மொழிந்த மக்கொலியின் சிந்தனைப் பிடியில் இருந்து எந்தளவிற்கு விடுபட்டு இருக்கின்றோம்? அல்லது இன்னும் இன்னும் எந்தளவிற்கு அந்த சிந்தனையுடன் புதைத்துக் கொண்டிருக்கின்றோம்? என்பது விளக்கத்திற்கும் விவாதத்திற்கும் உரியது.

வெளிப்படையான அதிகாரங்கள், ஆதிக்கங்களை எதிர்க்கும் எதிர்கொள்ளும் சமூகங்கள், அன்ரோலியோ கிராம்ஸ்சி குறிப்பிடும் தாங்களாகவே விரும்பி ஏற்கும் ஆதிக்கங்களால் கட்டுண்டுகிடப்பதை உணர்ந்து கொள்வதுமில்லை விளங்கிக் கொள்வதுமில்லை. மாறாக அவை பெருமிதங்களுக்குரிய கொண்டாட்டங்களாக ஆக்கப்பட்டிருக்கின்றன. எங்களது கல்வியும் அதன் அம்சங்களை போட்டிப் பரீட்சைகளும் அதுசார்ந்து சமூகங்களின் ஆரவாரங்களும் கொண்டாட்டங்களும் மேற்கூறிய நிலைப்பாட்டையே வெளிப்படுத்தி நிற்கின்றன.

ஏறத்தாழ இரண்டு தசாப்தகால முழுநேர கல்வித் தொழிலாளர்களாக இருந்து பல்வேறு துறைகளுக்கும் தெரிவாகி வரும் பல்கலைக்கழக மாணவர்கள் அமுதங்களாகக் கருதப்படுவார்கள் அத்தகைய சிறப்புத்தகுதி கொண்ட மாணவர்கள் வெள்ளைக்காரன் தான் நாங்கள் வசதி வாய்ப்பற்றவர்கள், கண்டுபிடிப்பான சோம்பேறிகள் அவர்கள் கண்டுபிடிக்கட்டும் நாங்கள் பயன்படுத்துவம் என்ற கருத்துடையவர்களாக வடிவமைக்கப்பட்டிருப்பதை தெளிவாகவே அவதானிக்க முடியும்.

இது தான் நாங்கள் விரும்பி ஏற்று அங்கலாய்ப்புடனும் ஆரவாரத்துடனும் முன்னெடுத்துக் கொண்டிருக்கும் கல்விமுறை எமது அறிவுக் கண்களுக்குப் புலப்படாமல் நிகழ்த்திக் கொண்டிருக்கும் நாடகமாகும்.

தற்பொழுது இந்தநிலை இன்னும் வக்கரித்து தொழிற்சந்தைக்கான பண்டங்களை உருவாக்குவதாக வடிவெடுத்திருக்கிறது. அத்துடன் கல்வி தனியார் மயப்பட்டு உத்தியோக பூர்வமாக வாணிக விடயமாக கல்வியின் முகம் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதற்கான சட்டங்களும் சட்டமூலங்கள் அறிஞர் குழாத்தின் ஆர்வப்பங்களிப்புடன் தயார் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த இடத்தில் தான் சமூகங்கள், சமூகப் பொறுப்புக்கள், சமூகப்பங்களிப்புக்கள், சமூக ஒருங்கிணைப்புக்கள், சமூக உருவாக்கங்கள், பற்றிச்சிந்திக்க வேண்டி இருக்கின்றது. மனிதர்கள் உழைப்பிற்கும் நுகர்வுக்கும் மட்டுமேயான பிண்டங்களா? அல்லது உழைப்பிற்கும் உருவாக்கங்களுக்கும், கொண்டாட்டங்களுக்கும் உரிய மாண்புடையோர்களா? என்பது முன்னால் உள்ள கேள்வியும் சவாலுமாகும்.

இந்த இடத்தில் தான் அடிப்படையான ஒரு கேள்வி எழுகிறது. விடுதலை பெறாத அகம் எந்தவகையிலான விடுதலையை புறத்தில் ஈட்டிக் கொள்ளும்?.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்’

- சாந்தி சச்சிதானந்தம் -

கடந்த மாதம் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சில பெண்கள் கொழும்பு வந்திருந்தனர். யாழ் புதினங்கள் என்ன என்று எதேச்சையாகக் கேட்டு விட்டேன். அவிழ்த்து விட்டார்களே ஒரு பெரிய முறைப்பாட்டுப் பட்டியலை.

வட மாகாணசபை இதுவரை ஒரு அபிவிருத்தித் திட்டத்தையுமே மேற்கொள்ளவில்லை என்பதே அவர்களது பெருங்குறையாக இருந்தது. இதற்கு மாறாக, இப்பொழுது அமைச்சர் திரு டக்ளஸ் தேவானந்தா கிராமங்களுக்குள் இறங்கி பணி செய்யத் தொடங்கியிருக்கிறாராம். மக்களைச் சந்தித்து பல வேலைத்திட்டங்களை செயற்படுத்தியிருக்கின்றாராம்.

இப்படியே சென்றால் அடுத்த தேர்தலில் என்னாகுமோ என்றும் அவர்கள் கவலைப்பட்டார்கள். உண்மைதான். ஒருபுறம் மக்கள் தம்மீது வைத்திருக்கும் எதிர்பார்ப்புக்களையும் மறுபுறம் தாம் செயற்படுவதற்கு போடப்பட்டிருக்கும் முட்டுக்கட்டைகளையும் ஒருசேர சமாளித்தலே வட மாகாணசபை எதிர்நோக்கும் மிகப்பெரிய சவாலாகும்.

ஆனால் சவால்களைச் சந்திப்பது எமக்கு முதல் தடவையல்லவே. பெறுதற்கரிய வளங்களையெல்லாம் திரட்டி, சகலரும் வியக்கும் வண்ணம் ஓர் ஆயுதப் போராட்டத்தினை 30 வருடங்களுக்கு மேலாக முன்னெடுத்து எதனையும் மிஞ்சும் சவால் அல்லவா? எனவே, ஆளுனர் இயங்க விடுகின்றாரில்லை என்னும் குறைபாட்டினைக் கூறிக் கொண்டிருப்பதை விட்டு காத்திரமான பல செயற்பாடுகளைச் செய்து முடிப்பதற்கு எம்மால் முடியும் தம்பி.

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பார்கள். மாகாணசபை என்கின்ற புல்லும் எங்கள் ஆயுதம் ஆகலாம், நாம் வல்லவனாக எம்மைத் தயார் செய்து கொண்டோமாகில். இங்குதான் பிரச்சினை ஆரம்பமாகின்றது.

எந்தச் சபையும் இயங்குவதற்கு அதன் நிதி மூலங்கள் உறுதிப்படுத்தப்படுவது அவசியமாகும். கடந்த செப்டம்பர் மாதம் பதவியேற்ற மாகாணசபை சமீபத்தில்தான் தனது நிதி வருமானத்திற்குரிய சட்ட மசோதாவினைத் தயாரித்து முடித்திருக்கின்றது.

இதற்கே இவ்வளவு காலம் எடுத்தால், வட மாகாணத்திலுள்ள பலவேறு தொழிற்றுறைகளின் மூலம் அது வருமானம் ஈட்டுவதற்கு அவ்வதற்குரிய சட்டங்கள் தயாரிக்கப்படவேண்டுமே ஒவ்வொரு செயற்திட்டத்திற்குரிய சட்டங்கள் இயற்றப் படவேண்டுமே. அதற்கெல்லாம் எவ்வளவு காலம் எடுக்கப்படுமோ.



இதனைப் பார்த்த பின்னர் நாம் இன்னமும் எம்மை வல்லவனாக மாற்றிக் கொள்ளவில்லையோ என்ற கிலேசம் எம் எல்லோருக்குமே தொற்றிக் கொள்ள ஆரம்பித்திருக்கின்றது.

மாகாணசபைத் தேர்தல் முடிந்த கையுடன் கொழும்பைச் சார்ந்த ஆய்வு நிறுவனங்களிலொன்றான இனத்துவத்துக்கான சர்வதேச கற்கை நிலையம் யாழ்ப்பாணத்தில் முதலமைச்சரின் தலைமையின் கீழ் ஓர் கருத்தரங்கினை ஒழுங்கு செய்திருந்தது. அக்கருத்தரங்கில் அரசியல்வாதிகள் தொடக்கம் கல்விமான்கள் ஈறாகக் கலந்து கொண்டிருந்தார்கள்.

வட மாகாணசபை எதிர்நோக்கக்கூடிய பலவேறு விதமான சவால்கள் இக்கருத்தரங்கில் விவாதிக்கப்பட்டன. முடிவில் அங்குள்ள சகலரினாலும் இச்சபைக்கு ஆலோசனை கூறவும் உதவியாக இயங்கவும் புத்திஜீவிகளடங்கிய ஓர் சிந்தனையாளர் குழு (Think Tank) உருவாக்கப்படவேண்டும் என்று ஏகோபித்த முறையில் தீர்மானமாயிற்று.

இவ்வகையான குழு பல்துறைகளிலும் மாகாணசபைக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவது மட்டுமல்லாமல் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் யுக்திகளையும் எடுத்துக்கொடுக்குமே. ஆனால் அதற்குப் பின்பு இது உருவாக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பெருங் குறைபாடாகும்.

திறமைகளை இனங்கண்டு அவர்களை இணைத்து அணிகளை உருவாக்குவது (team building) அவர்களுக்குக் கைவராத கலையாகும். இத்தகைய நிபுணத்துவம் பொருந்தியவர்கள் பின்னர் தமது கட்சியில் தமது நிலைகளை ஆட்டங்காணச் செய்து விடுவார்கள் என்கின்ற பயம் அவர்களுக்கு இருக்கின்றது போலும். இல்லாவிடில் முதலமைச் சருக்கும் பிற அமைச்சர்களுக்கும் பின்னால் இந்தக் குழு இற்றைக்கு செயற்பட்டிருக்க வேண்டும்.

13ம் திருத்தச் சட்டத்தின் 154 G பிரிவானது மாகாணசபை சட்டம் இயற்றக்கூடிய அபிவிருத்தித் துறைகளைக் கோடு காட்டுகின்றது. இத்துறைகள் 9வது அட்டவணையில் முதலாவது நிரலில் தரப்பட்டிருக்கின்றன. இவற்றில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் அபிவிருத்திக்கு முக்கியமான துறையாக இருப்பது உள்ளூராட்சியே. உள்ளூராட்சி மன்றங்களானவை மக்கள் பிரதிநிதிகளுடன் மக்களுடன் மக்களாக இயங்கும் மன்றங்களாகும்.

அவை பாதைகள், குடி தண்ணீர் வினியோகம், கைத்தொழிலுக்கான உதவி, மின்சார வினியோகம் என அத்தியாவசியமான அபிவிருத்தித் திட்டங்கள் பலவற்றை மக்களின் பங்கேற்புடன் செயற்படுத்தக்கூடியன. தற்சமயம் வடக்கிலுள்ள அனேக மன்றங்கள் அனுபவக் குறைவினால் தகுந்த முறையில் இயங்க முடியாமலுள்ளன. அவற்றை மேற்பார்வை செய்வதற்கு மாகாணசபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது.

தமது மாகாணத்தில் உள்ள மன்றங்கள் அனைத்தும் வினைத்திறனுடன் இயங்கும் வகையில் அவற்றிற்கான ஆற்றல்களை வழங்கினாலே போதும். மக்களுக்கான பல அபிவிருத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்படலாம். மத்திய அரசு நிதிகளும் இப்போது பலவிடங்களில் நடப்பது போன்று வருட முடிவில் திருப்பியனுப்பப்பட மாட்டா. இதற்காக, உள்ளூராட்சி ஆணையாளரின் அலுவலகத்துடன் இணைந்து பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அடுத்து முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது கல்வி அபிவிருத்தியாகும். அதிலும் பிள்ளைகளின் அறிவு விருத்திக்கு அத்திவாரமான ஆரம்பக் கல்வி மிகவும் கவனமாக வளர்க்கப்பட வேண்டிய துறையாகும். முன்பள்ளிகளை நிர்வகிக்கும் அதிகாரம் மாகாணசபைக்கு உண்டு. பொதுவாக முன்பள்ளிகள் யாவும் வெவ்வேறு சமூக நிறுவனங்களினாலே அவையொவ்வொன்றினுடைய ஆற்றலுக்கொப்ப ஓர் ஒழுங்குமுறையின்றி நடத்தப்படுகின்றன.

இவற்றையெல்லாம் ஒரு குடைக்குக் கீழ் கொண்டு வந்து ஆசிரியர்களுக்கான பயிற்சி மற்றும் அவர்களுக்கான உரிய வேதனங்கள் வழங்கப்பட வேண்டும். நல்ல வேதனங்கள் வழங்கப்படும் போது திறமையானவர்கள் இவ்வேலைக்கு ஈர்க்கப்படுவார்கள். கிழக்கு மாகாணசபை இப்பணியில் தற்போது செயற்பட்டுக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதே போன்று பாடசாலைகளில் ஆசிரியர் நியமனங்கள், மற்றும் நூலகங்களை விருத்தி செய்தல் யாவும் மாகாணசபையின் கைகளில் வழங்கப்பட்டிருக்கின்றன. இன்று பல கிராமப் பாடசாலைகளில் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. இக்குறையைத் தீர்ப்பதற்காக ஆசிரியர் விசேட பயிற்சித் திட்டங்களும் பின் தங்கிய பாடசாலைகளில் அவர்களுடைய நியமனங்களும் செயற்படுத்தப்படவேண்டும். மேலும் பாடசாலைகள் தோறும் நூலகங்கள் தாபிக்கப்பட்டு பிள்ளைகள் மத்தியில் வாசிப்பினை ஊக்குவிக்கும் இயக்கம் ஆரம்பிக்கப்படவேண்டும்.

மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடுத்து முக்கியமாகத் திகழ்வது கூட்டுறவுத் துறையாகும். அருகிப் போன தமது வளங்களைக் கூட்டாக இணைத்து புதிய தொழிற்றுறைகளில் அவர்கள் காலடி பதிக்க இது உதவுகின்றது.

சமூகத்தில் உற்பத்தியினைப் பெருக்குவதோடு வருமானத்தினை சமமான முறையில் பங்கீடு செய்ய உதவுகின்றது.

இதனைப் பற்றிய விழிப்புணர்வினை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவது, கூட்டுறவுச் சங்கங்கள் நேர்மையாக இயங்குவதற்கான மேற்பார்வைப் பொறிமுறைகளை ஸ்தாபிப்பது யாவும் மாகாணசபைகள் செய்யக்கூடியனவே. ஏற்கனவே நல்ல கூட்டுறவு இயக்கங்கள் மிகச் சிறப்பாக இயங்கிய மாகாணம். யுத்தத்தின் காரணமாக இப்பொழுதுதான் சீர்குலைந்து போயிருக்கின்றது. கூட்டுறவுத் துறையினை விருத்தி செய்வதால் மக்களின் வாழ்வாதாரத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

இத்துணை திட்டங்களையும் செயற்படுத்துவதற்கு வடமாகாணசபைக்கு நிதிகள் வழங்கப்படமாட்டாது என்பது ஏற்கனவே தெரிந்த விடயமாகும். அதற்கும் வழியிருக்கின்றது. மேற்கூறிய துறைகளில் இயங்கக்கூடிய அரசசாரா நிறுவனங்களுடன் கூட்டிணைவுகளை மாகாணசபை ஆரம்பிக்க வேண்டும். இத்தகைய நிறுவனங்களின் பிரதிநிதித்துவக் குழுவினை அமைத்துக்கொண்டு அதன் மூலமாக தேவையான திட்டங்களுக்கான நிதிமூலங்களை அவற்றைக் கொண்டே திரட்டலாம்.

அதே போன்றே அரசினால் தடை செய்யப்படாத புலம் பெயர் தமிழர்களின் அமைப்புக்களின் மூலம் உள்ளூர் அரசு சாரா நிறுவனங்களுக்கு நிதிகளைத் தருவித்து அவற்றின் மூலம் வேண்டிய திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும். ஐ.நா நிறுவனங்களை லொபி செய்வதன் மூலமும் பல உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இன்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்குக் கிடைக்கும் உதவிகளைத் தனிப்பட்ட முறையில் வினியோகிப்பது எமக்குத் தெரிந்தவொன்றே. விதவைகளுக்குக் கொடுக்கும் தையல் இயந்திரங்கள் எமது மக்களுக்கு அபிவிருத்தியினைக் கொண்டு தராது.

நிறுவன மயப்படுத்தலின் நன்மைகளை அவர்கள் இன்னமும் உணரவில்லையோ வெனத் தோன்றுகின்றது. எம்மை எதிர்நோக்கும் சவால்களினை நாம் நிறுவனமயப்படுத்தப்பட்டால் மட்டுமே கட்டமைப்பு ரீதியாக எதிர்கொள்ள முடியும். ஆனால், கூட்டமைப்பினருக்கு இதனை செயற்படுத்துவதற்குரிய ஆற்றல் இருக்கின்றதா?

அடி என்னடி உலகம் இதில் எத்தனை கலகம்.

நன்றி - புரட்சி

www.puradsi.news.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஐ.தே.க தலைமையிலான அணியே ஆட்சியைக் கைப்பற்றும்" - இம்ரான் மஹ்ரூப் -

**" கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் உடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் போதே அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் மீதான தனது நம்பிக்கையை இவ்வாறு வெளிப்படுத்தினார் எனச் செவ்வியாளர் திரு. மரியதாஸ் கூறினார். அச் செவ்வி தொடர்கின்றது....**

**உங்கள் தந்தை காலம் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் மகரூப் மூவின மக்களுடன் மிகவும் நெருக்கமாக நடந்து கொண்டார். ஆனால் உங்களிடம் அதைக் காணக்கிடைக்கவில்லையே.?**

நானும் அப்படித்தான் நடந்து வருகின்றேன். என்னுடைய மாகாணசபை நிதி ஒதுக்கீட்டை எடுத்துப் பார்த்தால் மூவின மக்களுக்காகவும் நான் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதை தெளிவாக தெரிந்து கொள்ளலாம். எதிர்காலத்தில் இதனை அதிகரிப்பதற்கான முயற்சிகளை எடுத்து வருகின்றேன்.

**காலம் சென்ற உங்கள் தந்தை ஐ.தே.க வின் சிரேஷ்ட உறுப்பினர். இருந்தும் உங்களுக்கு பாராளுமன்ற தேசியப்பட்டியலில் இடம் தந்திருக்கலாமல்லவா?**

மக்களின் ஆணையுடன் பாராளுமன்றம் செல்வதையே நான் விரும்புகிறேன். அதனால் தேசியப் பட்டியலைப் பற்றி நான் யோசிக்கவில்லை. எனது தந்தை காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் ஐ.தே.கட்சி முதன்மை ஸ்தானத்தில் இருந்தது. ஆனால் இன்று மாவட்டத்தில் பலவீனமடைந்து காணப்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகளில் தற்போது ஈடுபட்டு வருகின்றேன்.

**அம்பாறை மாவட்டத்தில் தயா கமகேவின் மனைவிக்கு சந்தர்ப்பம் வழங்கி இருந்த வேளையில் ஏன் உங்களுக்குத் தரக்கூடாது?**

நான் அது தொடர்பாக முயற்சி எடுத்திருந்தால் சந்தர்ப்பம் கிடைத்திருக்கலாம். மக்களின் ஆணையோடு பாராளுமன்றம் செல்ல வேண்டும் என்ற எண்ணமே எனக்கு இருக்கிறது. இன்ஷா அல்லாஹ் (இறைவன் நாடினால்) அடுத்த தேர்தல் மூலம் பாராளுமன்றம் செல்வேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**நீங்கள் ஓர் இளைஞன். உங்களிடம் மக்கள் தொடர்பாடலில் சுறுசுறுப்பை காணவில்லை என உங்களுக்கு நெருக்கமானவர்களின் விமர்சனத்திற்கு நீங்கள் அளிக்கும் பதில் என்ன?**

எனது தந்தை அரசியலில் இருக்கும் போது நான் சிறுவன். அதனால் அவரது அரசியல் அனுபவத்தைப் பெறும் சந்தர்ப்பம் எனக்கு கிடைக்கவில்லை. எனினும் மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்டதற்குப் பின்னர் பல விடயங்களை படித்தும், கேட்டும், தெரிந்தும் கற்று வருகின்றேன். பல முன்னெடுப்புகளை செய்து வருகின்றேன். இதனால் மாகாணசபைத் தேர்தல் காலத்தில் இருந்த ஆதரவாளர்களை விட இபபோது கணிசமான அளவு ஆதரவாளர்களை அதிகரித்திருக்கிறேன். எனவே. இக் கூற்று எனது ஆதரவாளர்களிடம் இருந்து வந்திருக்க முடியாது.

**திருகோணமலை வான் படையினரின் காணி அபகரிப்பு தொடர்பாக நீங்கள் எடுத்த முயற்சியில் ஏதும் முன்னேற்றங்கள் உண்டா?**

அரசிடமிருந்து முன்னேற்றத்தைக் காணமுடியவில்லை. இதற்கு அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் உறுப்பினர்களும் காரணம். இது தொடர்பாக அவர்கள் எந்தவித முன்னெடுப்பையும் செய்ய வில்லை. நான் மாகாணசபையில் விசேட பிரேரணை ஒன்று கொண்டு வந்தபோது முதலமைச்சர் அதனை தடுத்து நிறுத்துவதில் கூடுதல் கரிசனை காட்டினார். இருந்தும் நான் அதனைக் கொண்டு வந்தேன். இந்தப் பிரச்சினையை மக்கள் மயப்படுத்தி ஆவணப் படுத்தியுள்ளேன் என்ற திருப்தி எனக்கு இருக்கிறது. இதனால் சில வெளிநாட்டு தூதரக அதிகாரிகள் என்னோடு இது தொடர்பாக பேசினார்கள். இது விடயத்தில் கிடைத்த வெற்றியாக இவற்றைக் கருதலாம்.

**ஆளும் கட்சிக்குள்ளே எதிர்க்கட்சி உருவாகியுள்ளதாக கூறப்பட்டுகிறதே. அப்படியானால் ஐ.தே.க எதிர்காலம் எப்படி இருக்கும்?**

ஆம். மக்கள் மட்டுமல்ல அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள், எம்.பிக்களும் இந்த அரசாங்கத்தில் அதிருப்தி அடைந்துள்ளனர். எனவே, ஆட்சி மாற்றத்துக்கான சாத்தியம் நிறைய உண்டு. இதன் போது ஐ.தே.க தலைமையிலான அணியே ஆட்சியைக் கைப்பற்றும்.

**இந்தக் கேள்விக்கு பதில் அளிப்பதால் உங்களை சங்கடத்திற்கு உள்ளாக்குவதாக கருத வேண்டாம். உண்மையில் நீங்கள் யாரின் அணி? ரணிலின் அணியா? சஜித்தின் அணியா?**

நான் ஐ.தே.க அணியைச் சேர்ந்தவன். ரணில் தலைவர். அந்த வகையில் தலைமைத்துவத்தை நேசிக்கிறேன். சஜித் எமது கட்சி உறுப்பினர் அந்த வகையில் நாங்கள் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள்.

**எந்தப் பிரச்சினையையும் சுமூகமான பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கலாமென கூறப்படுகின்றதே. ஆனால் உங்கள் கட்சி உட்பூசல்களை ஏன் தீர்க்க முடியாது.**

நல்ல கேள்வி இது. இப்போது ஐ.தே.க உறுப்பினர் அனைவரும் ஒரு கொடியின் கீழ் செயற்படும் வாய்ப்பு ஏற்பட்டு உள்ளது. இதன் பிரதிபலன் நாட்டில் விரைவில் தெரிய ஆரம்பிக்கும். இந்தப் பீதியில் அரசு இருப்பதால்தான் உரிய காலத்திற்கு முன்னர் தேர்தல் நடத்துவதைப் பற்றி யோசிக்கிறது.

**கிழக்கு மாகாண சபையூடாக உங்களால் மக்களுக்கு சேவை செய்யக் கூடியதாக உள்ளதா?**

வரைறுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் முடியுமான அளவு மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் எல்லா இனத்தவருக்கும் சென்றடையும் வகையில் சிறுசிறு அபிவிருத்தி பணிகள் செய்யக் கிடைத்துள்ளது. முக்கிய விடயங்கள் தொடர்பாக சபையில் பேசக் கிடைத்துள்ளது அது மட்டுமல்லாது மக்கள் என்னைப் பற்றி எதுவும் அறியாது என்து தந்தையின் மீது கொண்ட அபிமானத்தினாலேயே எனக்கு வாக்களித்தார்கள். அவர்களது ஆவலை நான் தற்போது பூர்த்தி செய்து வருகின்றேன். அவர்கள் எனக்கு தரும் உட்சாகம் மூலம் இதனை தெளிவாக அறிய முடிகின்றது. இதனை விட என்னை நான் மக்களுக்கு மத்தியில் அறிமுகப் படுத்திக் கொள்ள இந்த மாகாணசபை உறுப்பினர் பதவியை நல்ல முறையிலே பயன்படுத்தி வருகின்றேன்.

**அண்மையில் மாவட்ட அடிப்படையில் உங்களால் தெரிவு செய்யப்பட்ட ஐ.தே.க குழுவில் தமிழர்களும், சிங்களவர்களும் குறைவாக இருக்கிறார்களே ஏன் அது?**

ஐ.தே.கட்சியின் தற்போதைய வாக்கு வங்கியை மையமாக வைத்து அந்த தெரிவுகள் இடம்பெற்றன. அவை நிரந்தரமானவையல்ல. காலத்துக்கு காலம் மாற்றப்படக் கூடியவை. வாக்கு வங்கியில் மாற்றங்கள் ஏற்படும் போது அப்பதவிகளிலும் மாற்றம் ஏற்படும்.

**நீங்கள் உங்கள் இனத்தவருக்கே முதலிடம் அளித்து வருவதாக ஏனைய இனத்தவர்கள் கூறும் குற்றச்சாட்டு தொடர்பாக நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

நான் எனக்கு வாக்களித்த மக்களுக்கு முதலிடம் அளித்து வருகின்றேன். இதில் எந்த வித இனப்பாகுபாடும் இல்லை. இதனை விட தற்போது மூவினத்திலிருந்தும் புதிதாக பலர் என்னோடு இணைந்துள்ளார்கள். இவர்களது அபிலாசைகளையும் கவனத்தில் கொண்டு தான் செயற்பட்டு வருகின்றேன். எனது தந்தை எப்படி



மூவினத்தவரையும் அரவணைத்து செயற்பட்டாரோ அதே வழிதான் எனது வழியும்.

**முஸ்லிம் காங்கிரஸின் பிடிவாத நடவடிக்கை கிழக்கு மாகாண சபையில் ஏதும் மாற்றத்தைக் கொண்டு வருமா?**

நிச்சயமாக இல்லை. ஏனெனில் முஸ்லிம் காங்கிரஸிடம் இப்போது கொள்கை இல்லை. சமூக நலனை விட உறுப்பினர்களின் தனிப்பட்ட நலனுக்காகவே அக்கட்சி தற்போது செயற்பட்டு வருகின்றது. கிழக்கு மாகாண சபையிலே அரசுக்கு அக்கட்சி ஆதரவு கொடுக்கும் போது கரையோர மாவட்டம், அரச அதிபர் நியமனம், புதிய பிரதேச செயலகங்கள் தொடர்பாகவெல்லாம் ஏதோ ஒப்பந்தம் இருப்பதாகக் கூறப்பட்டது. ஆனால் இது வரை இது விடயத்தில் எந்தவித முன்னெடுப்புகளும் இடம்பெறவில்லை. இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரசுக்கும் அக்கறையில்லை. இந்நிலையில் மக்கள் நலனுக்காக அவர்கள் ஏதாவது முன்னெடுப்புகள் செய்வார்கள் என்று எதிர் பார்க்க முடியாது.

**கிழக்கு மாகாணசபை ஐ.தே.க உறுப்பினர்கள் பலர் கூட்டங்களுக்கு தொடர்ச்சியாக சமூகம் கொடுப்பதில்லை என்று கூறப்படுகின்றதே?**

இது தவறு. பெரும்பாலும் கூட்டங்களுக்கு சமூகம் தருகின்றார்கள். ஆக்கபூர்வமான பிரேரணைகளை முன் வைக்கிறார்கள். விவாதங்களிலே கலந்து கொண்டு நல்ல பல கருத்துக்களை முன் வைக்கிறார்கள். ஹன்சாட்டின் மூலம் இவற்றை தெரிந்து கொள்ள முடியும்.

நன்றி ... ...

## அதி உயர இளம் பெண்

துருக்கியை சேர்ந்த 17 வயது இளம்பெண் Rumeysa Gelgi, எனப்வர் 7.09 அடி உயரம் உள்ளார். Weaver Syndrome என்ற அரியவகை நோயின் காரணமாக அவர் அதிக உயரம்



அடைந்ததாக மருத்துவர்கள் கூறியுள்ளனர். இருப்பினும் தற்போது உலகில் வாழும் டீன் ஏஜ் பெண்களில் இவர்தான் அதிக உயரம் என்பது உறுதி செய்யப் பட்டுள்ளதால் அவருக்கு கின்னஸ் சாதனை சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

Rumeysa Gelgi, அவர்களுக்கு கடந்த வியாழன் அன்று கின்னஸ் அதிகாரிகள் உலகின் மிக உயரமான டீன் ஏஜ் பெண் என்ற சான்றிதழை அவருடைய இல்லத்திற்கு சென்று நேரில் வழங்கினர்.

## 32 வரு. பின் கண்டுபிடித்த உடல்

பிரான்ஸ் நாட்டில் கடந்த 1982ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1ஆம் தேதி மலையேறும் குழுவினர் அடங்கிய ஒரு குழு Mont Blanc என்ற மலையில் ஏறினர். அவர்களில் Patrice Hyvert என்பவர் திடீரென மலையில் காணாமல் போனார். அவரை தேடுவதற்காக மீட்புப்படையினர் ஹெலிகாப்டரில் பெரும் முயற்சி செய்தனர். ஆனால் குளிர்காலம் தொடங்கி கடும் பனி நிலவியதால் காணாமல் போன அவர்களின் உடலை கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்நிலையில் கடந்த வாரம் மலையேறும் பயிற்சியில் ஈடுப்பட்டிருந்த ஒரு குழுவினர் Mont Blanc உள்ள ஒரு இடத்தில் ஒரு பிணம் இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்து காவல்துறையினர்களுக்கு தகவல் கொடுத்தனர். காவல்துறையினர் விசாரணை செய்ததில் கடந்த 32 ஆண்டுகளுக்கு முன்னர் காணாமல் போன Patrice Hyvert அவர்களின் உடல்தான் அது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.



## 5 வார குழந்தை கொலை

Mark Sandland என்ற நபருக்கு கடந்த ஐந்து வாரங்களுக்கு முன்பு ஒரு பெண் குழந்தை பிறந்தது. சம்பவத்தன்று குழந்தையின் தாயார் தேர்வு எழுத பல்கலைக்கழகம் சென்றுள்ளார். குழந்தையுடன் தனியாக இருந்த தந்தை, கம்ப்யூட்டரில் வீடியோகேம் விளையாடி கொண்டிருந்தார். அப்போது அவருடைய ஐந்து வார குழந்தை, அவருடைய காலின் அருகே வந்து அவரை அழைத்துக்கொண்டிருந்தது. வீடியோகேம் விளையாடும் மும்முரத்தில் இருந்த அவர் குழந்தை தொல்லை கொடுத்ததால் ஆத்திரமடைந்து திடீரென காலால் குழந்தையை எட்டி உதைத்துள்ளார்.

இதனால் குழந்தை சில அடி தூரம் தள்ளி விழுந்தது. குழந்தையின் தலையில் பலத்த காயமடைந்ததால் மூர்ச்சையற்று இருந்த குழந்தை மயக்கம் அடைந்தது. நான்கு நாட்கள் தீவிர சிகிச்சை பயனளிக்காது குழந்தை இறந்தது. இதையடுத்து தந்தைக்கு பத்து வருட சிறைத்தண்டனை வழங்கி நேற்று தீர்ப்பு அளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன மாற்றம்

சிறுகதை

வரதனும் மீனாட்சியும் கட்டிடத் தொழிலாளர்கள். சித்தாளாக வேலைக்குச் சேர்ந்த மீனாட்சி அங்கு வேலை செய்த வரதனுடன் சிநேகம் ஏற்பட்டு ஊர் அறிய மைலம் கோயிலில் திருமணம் நடந்தது. மாதத்தின் முதல்தேதி தவிர மற்ற எல்லா நாட்களிலும் இருவருக்கும் வேலை கிடைத்தது.

விழுப்புரம் கன்னியாகுளம் சாலையில் விடிவதற்குள் கூட்டம் கூடிவிடும். அங்கு நிற்பவர்கள் அனைவருமே கட்டிடத் தொழிலாளர்கள்தான். ஒப்பந்தக்காரர்களும், தனியாகக் கட்டிடம் எடுத்து செய்பவர்களும் தங்களுக்குத் தேவையான ஆட்களை இங்கிருந்துதான் அழைத்துச் செல்வார்கள். வரதனும், மீனாட்சியும் அப்படி அங்கு போய் நின்றதில்லை. ஒரு மேஸ்திரியிடம் அடைந்து வேலை செய்து வந்தார்கள்.

பெண்ணுக்கு வாழ்க்கை என்பது ஆடை போன்றது. சாப்பாடு மட்டுமல்ல வாழ்க்கை. நெஞ்சுக்கும் உடம்புக்கும் நிம்மதி வேண்டும். அந்த நிம்மதி மீனாட்சிக்கும் கிடைத்தது. வரதன் கடுமையான உழைப்பாளி. அவன் திருத்தமான வேலையைப் பார்த்து சுந்தரமூர்த்தி மேஸ்திரி அவனுக்கு தவறாமல் வேலை கொடுத்தார். வரதனும் மீனாட்சியும் அவர் ஒப்பந்தம் செய்து வரும் கட்டிடத்தில் வேலை செய்துவந்தனர். வரதனுக்கு கொலுத்து வேலை மட்டுமல்ல, இரும்பு வளைத்து, சென்டிரிங் வேலையையும் அற்புதமாய் செய்வான். அதனால் சுந்தரமூர்த்தி அவனைக் பயன்படுத்திக்கொண்டார். வரதனால் மீனாட்சிக்கும் வேலை கிடைத்தது. இருவரும் வாராவாரம் சம்பளம் பெற்றுக்கொள்வார்கள்.

தனியே கட்டிடம் எடுத்து வேலை செய்ய வேண்டும் என்று வரதனுக்கு ஆசை துளிர்த்தது. தன்னை வளர்த்து ஆளாக்கிய கொலுத்து வேலையின் பிதா சுந்தரமூர்த்தி அவர்களின் ஆசியோடு ஒரு கட்டிடம் மொத்த ஒப்பந்தமாக பேசி வரதன் வேலையைத் தொடங்கினான். அவ்வப்பொழுது அவரிடம் வந்து ஆலோசனை கேட்பான்.

வரதனின் கீழ் ஒன்பது பேர் வேலை செய்தனர். அதில் தியாகு என்பவனும் ஒருவன். அவன் வரதனின் வலது கரம் போல் தொழிலுக்குத் துணையாக இருந்தான். கட்டுமானப் பொருட்களை வீணாக்காமல் வேலை செய்வதில் நிபுணன். வரதன் ஐந்தே மாதத்தில் கட்டிடத்தை முடித்துவிட்டு தன் குருவை அழைத்து வந்து காட்டினான். அவர் மிகவும் பாராட்டினார். தன்னால் உருவாக்கப்பட்ட ஒருவன் உயர்வதைக் கண்டு மிகவும் மகிழ்ந்தார். வாழ்த்தினார்.

அடுத்து ஒரு கட்டிடம் வேலை செய்தான். இரண்டு அடுக்கு மாடி வீடு. இதுவும் மொத்தமாகப் பேசி



ஒப்பந்தம் செய்தான். கட்டிடம் துரிதமாகவே நடந்தது. இக்கட்டிடம் கட்டிக் கொண்டிருக்கும் போது உடன் வேலை செய்த தியாகுவின் மனைவி பிரசவத்தில் இறந்து போனாள். அதனால் தியாகு ஒரு மாதம் வேலைக்கு வரவில்லை. குறித்த மாதத்தைவிட ஓரிரு மாதங்கள் கழித்து கட்டிடத்தை முடித்துக் கொடுத்தான்.

நன்னாட்டில் சொந்தமாக வீடு கட்டினான். மகன் பிரபுவை உள்ளூர் பள்ளிக்கூடத்திலேயே சேர்த்தான். அவர்கள் வாழ்க்கை தெளிந்த நீரோடையாகத் திகழ்ந்தது. இரண்டு கட்டிடங்கள் எடுத்து செய்த அனுபவத்தில் இரண்டு அடுக்கு மாடிக் கட்டிடம் ஒன்றை எடுத்து செய்தான். ஒரு மாடி கட்டிடம் முடிந்து இரண்டாவது மாடி கட்டிக் கொண்டிருந்த போது ஜல்லி, சிமெண்ட், செங்கல், கம்பி எல்லாமே திடீரென்று உயர்ந்தது. ஆட்களும் கூலி அதிகம் கேட்டனர். தொழிலில் போட்டி ஏற்பட்டது. கட்டிடம் முடிக்கும் போது தான் பேசிய தொகையை விட அதிகம் செலவானது. இதனால் நன்னாட்டிலிருந்த நிலத்தை விற்க வேண்டியதாயிற்று.

விலை உயர்வால் ஏற்பட்ட இழப்பில் ஒரு பகுதியைக் கட்டிட உரிமையாளரிடம் கேட்டு நிலமையை புள்ளி விவரத்தோடு கூறினான். ஆனால் அவர் ஒப்புக்கொள்ளவில்லை. இதனால் வரதன் மனமுடைந்தான். வேலை செய்த தொழிலாளர்களுக்கு சம்பள பாக்கி நின்றது. எவ்வாறோ கஷ்டப்பட்டு தொழிலாளர்களுக்கு சம்பளத்தை முழுமையாக கொடுத்தான்.

வரதன் மீண்டும் கட்டிடம் எடுத்து வேலை செய்ய விரும்பவில்லை. அதனால் மீண்டும் சுந்தரமூர்த்தி கம்பெனியில் வரதனும் மீனாட்சியும் வேலை செய்ய வந்தார்கள். அவர் அரவணைத்துக் கொண்டார். இரண்டு ஆண்டுகளாக மற்றவர்களை வேலை வாங்கி வந்த வரதன் வேலை செய்த போது மிகவும் துன்பமாக இருந்தது. மகன் பிரபு இரண்டாம் வகுப்பு படித்து முடித்தான்.

மன உளைச்சலால் அடிக்கடி வேலையில் ஊக்கமில்லாமல் இருந்ததை சுந்தரமூர்த்தி கவனித்தார். நீண்ட நாட்கள் தன் கம்பெனியில் வேலை செய்து வந்த வரதனை கண்டித்து வேலை வாங்க முடியாமல் இருந்தார். ஒரு நாள் இரண்டாம் மாடிக் கட்டிடம் சாரம் கட்டிக் கொண்டிருந்தான் வரதன். கால் வழுக்கி அங்கிருந்து கீழே விழுந்து தலையில் பலத்த அடிபட்டு மயக்கமடைந்தான். அவசர அவசரமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான்.

ஆனால் வரதனுக்கு நினைவு திரும்பாமலேயே உயிர் பிரிந்தது., மீனாட்சி மின்சாரத்தால் தாக்குண்டவள் போல் அதிர்ந்து போனாள். சவ அடக்கத்திற்கான செலவுகளை சுந்தரமூர்த்தியே கொடுத்தார். அரசு ஏற்படுத்திய திட்டத்தில் வரதன் சேரலாம் சேரலாம் என்று இருந்து விட்டான். அரசு இழப்பீட்டுத் தொகையும் கிடைக்க வழி இல்லாமல் போனது. மீனாட்சிக்கு இரண்டாயிரம் ரூபாய் கருணை அடிப்படையில் சுந்தரமூர்த்தி கொடுத்தார்.

மீனாட்சி இருபத்தி ஆறு வயதிலேயே கைம்பெண்ணானாள். மகன் பிரபு மட்டுமே அவளுக்குத் துணை. வரதன் அவனுக்கு விட்டுச்சென்றது நன்னாட்டில் உள்ள வீடு மட்டுமே. தன் வாழ்வு இப்படி ஆனதே என்று கரைந்து உருகினாள். அதைவிட மற்றவர்கள் காட்டும் அனுதாபம் அவளுக்கு வேதனையாக இருந்தது. புயலில் சுழலும் இலையாய் துவண்டு போனாள்.

மீனாட்சி சுந்தரமூர்த்தி கம்பெனியிலேயே வேலை செய்து வந்தாள். மகன் பிரபு நான்காம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தான். வரதனிடம் வேலை செய்த பலரும் சுந்தரமூர்த்தி கம்பெனியில் சேர்ந்து வேலை செய்தார்கள். மீனாட்சிக்கு வாரச் சம்பளமே கொடுத்தார். வேலை இல்லாத நாட்களில் மார்பிள், டைல்ஸ், தரைகளை சுத்தம் செய்யும் வேலைக்குப் போவாள். வருவாய் இரண்டுபேர் வயிற்றையும் கழுவியது.

முதல் தேதி வந்தால் பிரபுவுக்கு கொண்டாட்டம். மீனாட்சிக்கு விடுமுறை அன்று மகனுக்கு எண்ணெய் தேய்த்து விடுவாள். பள்ளிக்கூட சத்துணவுக்கு அனுப்பாமல் வகையாகச் சமைத்து மகனோடு மகிழ்ச்சியாய் சாப்பிடுவாள். மீனாட்சி மற்ற நாட்களில் காலையில் சென்றால் மாலை தான் வருவாள். கொலுத்து வேலையை விட டைல்ஸ் பதிக்கும்வேலை எளிதாகவும் வருவாய் அதிகமாகவும் இருந்ததால் மீனாட்சி அதையே செய்யத் தொடங்கினாள். அதை தியாகு என்பவன் நடத்திவந்தான். இவன் சுந்தரமூர்த்தியிடமும், வரதனிடமும் வேலை செய்தவன் தான்.

தியாகுவும் மீனாட்சியும் இணைந்து வேலை செய்து வந்தனர். இருவர் மனதிலும் சலனம் ஏற்பட்டது. ஒருநாள் வேலை செய்தவர்கள் போய்விட்டார்கள். தியாகுவும் மீனாட்சியும் மாடியில் "டைல்ஸ்" சுத்தம் செய்து கொண்டிருந்தார்கள். மனப் போராட்டத்தில் இருவருமே தவித்தனர். தியாகு தன் எண்ணத்தை வெளியிட்டான்.

"எனக்கு தாரம் இல்லை. அவள் செத்து இரண்டாண்டுகள் ஓடிவிட்டன. குழந்தை ஏதும் இல்லை. உன் மகன் பிரபுவை என் பிள்ளையாகவே ஏற்றுக் கொள்கிறேன். என்னை நீ திருமணம் செய்துகொண்டால் என் உயிர் உள்ளவரை உங்களைக் காப்பாற்றுவேன்..." என்றான் தியாகு

பத்து ஆண்டுகளாக கற்புடன் வாழ்ந்த மீனாட்சிக்கு சோதனை ஏற்பட்டது. தற்காப்பு இல்லாதத் தனிமையும், வறுமையும் அவளை மிரட்டியது.

மற்றொரு நாள் வேலை செய்யும்போது, தியாகு மீனாட்சியிடம் "எனக்கு எவளாவது கிடைப்பாள்... ஆனால் உன்னைப் போல் ஆகுமா? உன் அடக்கமும்... உழைப்பும் எனக்கு பிடித்துள்ளது. பிரபுவை நன்றாகப் படிக்க வைப்பேன்... அண்ணன் சுந்தரமூர்த்திகிட்டேயும் சொன்னேன். மீனாட்சியும் நீயும் இணையலாம் தப்பு இல்லைன்னு சொன்னார்" என்றான் தியாகு.

என் பையன் பிரபு உங்களை ஏற்றுக்கொள்வானா? அதான் எனக்கு பயமா இருக்குது. தினமும் வீட்டில் தனியா பயந்து பயந்து வாழ்வதைவிட உங்களோடு இருப்பதில் எனக்கு நிம்மதி ஏற்படும் என்றாள்.

இளமை வேட்கை இருவர்ரயும் ஈர்த்தது. உள்ளங்களில் போராட்டம்... ஆதரவு இன்றிக் காற்றில் அலைந்த கொடிக்கு பற்றுதலாக ஒரு கொம்பு கிடைத்ததுபோல் தியாகுவின் நட்புக்கு பச்சைக் கொடி காட்டினாள் மீனாட்சி. நன்னாட்டைவிட்டு விழுப்புரம் பூந்தோட்டம் பகுதியில் குடிபெயர்ந்தாள் மீனாட்சி. பிரபுவை பூந்தோட்டப் பகுதியில் உள்ள பள்ளியில் ஐந்தாம் வகுப்பு சேர்த்தாள். எல்லாமே தியாகுவின் ஏற்பாடுதான்.

காய்ந்த ஓலையில் தீப்பற்றிக்கொண்டது போல் ஆனது.

ஏதாவது செய்தி சொல்லுவதுபோல் அடிக்கடி மீனாட்சி வீட்டுக்கு தியாகு வந்தான். அவன் வீட்டினுள் வந்தால் பிரபு அச்சத்துடன் மிரண்டுபோவான். அவனிடம் நன்றாகப் படிக்கிறாயா? வீட்டுப்பாடம் எழுதிட்டியா? என்று கேட்பான். அவன் பதில் வார்த்தை வெளிவராமல் வாய்க்குள்ளேயே அடங்கிவிடும்.

ஒரு நாள் பிரபுவிடம். "பிரபு இவர் ரொம்ப நல்லவர். இவர் மொசைக் கம்பெனியிலதான் நான் வேலை செய்யிறேன், அப்பாவுக்குப் பிறகு இவர்தான் நமக்கு எல்லாம். இன்னும் ஒரு மாசத்திலே உன்னை திண்டிவனம் ஆஸ்டலில் சேர்த்துடுவாரு... நீ அங்கேயே பன்னிரண்டாவது வரைக்கும் படிக்கலாம். மாசா மாசம் உனக்கு பணம் அனுப்புவேன். முதல் தேதி வந்தா டாண்ணு திண்டிவனம் வந்துடுவேன். லீவு விட்டா விழுப்புரம் வந்துடலாம்" என்று மெல்ல சொன்னாள்.

மீனாட்சி அவனைப் பற்றியும் அவன் படிப்பு பற்றியும் கூறியதற்கு அவனிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை...

ஒரு நாள் ஒரு கட்டிடத்தில் வேலை நடந்து கொண்டிருந்தது. தியாகு மிஷின் இயக்கிக் கொண்டிருந்தான். மீனாட்சி தண்ணீர்விட்டு கழுவிக் கொண்டிருந்தாள். திடீரென்று வரதன் நினைவு வந்தது. "இதுபோல ஒரு மிஷின் வாங்கி நாம கட்டற கட்டிடத்துக்கு பாவிக்கணும் என மீனாட்சி" என்று வரதன் கூறியது காதில் ஒலிக்கச் செய்தது. அடுத்த அறைக்குச் சென்று அழுதாள். வரதன் இருந்தவரை எதிலும் அவளுக்குக் குறை வைத்ததில்லை. மீனாட்சி வரதனுக்கு துரோகம் செய்ய மனம் இடந்தராமல் தத்தளித்தது. ஆனால் தியாகுவின் அன்பு, பரிவு அவளை மயங்க வைத்தது.

மீனாட்சியைக் காணாமல் அடுத்த அறைக்கு வந்த தியாகு சன்னல் ஓரம் மீனாட்சி நின்றிருப்பதைக் கண்டு அருகில் சென்றான்.

"என்ன மீனாட்சி... இங்கே வந்து நிற்கிறே... "ஒண்ணுமில்லைங்க... நாம கல்யாணம் பண்ணிக்காமல் பழகனா என்னங்க?"



"தப்பு மீனாட்சி... தப்பு... பார்க்கிறவங்க இப்பவே யார் அவர்? என்ன உறவுன்னு கேட்கறாங்க... கணவன் - மனைவியாயிட்டா நமக்கு பயமில்லை... நான் சொல்றது புரியுதா. நீ என்னைக்கு சரீன்னு சொல்றியோ அன்னிக்கே திருவாமாத்தூர் கோயில்லே மாலை மாத்திட்டு தாலியும் கட்டிடறேன்."

இருதலை கொள்ளியாக வேதனைப்பட்டாள் மீனாட்சி.

ஒருநாள் கோடைகால இரவு. திண்ணையில் பிரபு தூங்கிக்கொண்டிருந்தான். மீனாட்சி ஒரு பக்கக் கதவைத் திறந்த நிலையில்... வாயிற்படியில் தலையை வைத்து படுத்திருந்தாள். தியாகு வந்தான். குனிந்து "மீனாட்சி" என்று கூப்பிட்டான். எழுந்தாள். திண்ணையை எட்டிப் பார்த்தாள்... பிரபு தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். கதவு சாத்தப்பட்டது.

விடியற்காலை. பிரபுவின் தூக்கம் கலைந்தது. வீட்டினுள் பேச்சரவம் கேட்டது. பிரபு எழுந்தான். கதவு துவாரம் வழியே பார்த்தான். அங்கே மீனாட்சியும், தியாகுவும் சிரித்து பேசிக் கொண்டிருந்தனர். இரத்தம் கொதித்தது.

"மீனாட்சி வர்ற வெள்ளிக்கிழமை நல்ல நாள். அன்னிக்கே கோயிலுக்குப் போயி கல்யாணம் செய்திட்டு வந்திடுவோம். எத்தனை நாளைக்கு இப்படி பயந்து பயந்து வந்து போவது..." என்றான் தியாகு. இந்த பேச்சு பிரபு காதில் கொதிக்கும் ஈயமாக விழுந்தது. வீட்டைவிட்டு வெளியே போனான்.

வெளியே வந்த மீனாட்சி மகனை திண்ணையில் காணாமல் திடுக்கிட்டாள். சுற்றும் முற்றும் தேடினாள். இல்லை. எப்போதாவது பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள பிள்ளையார் கோயிலுக்குப் போவான்.. அங்கு ஓடினாள். பிரபு உட்கார்ந்திருந்தான். ஓடிப்போய். "பிரபு" என்று விளித்து அணைத்துக் கொண்டாள்.

பிரபு... ஏண்டா இங்கு வந்து உட்கார்ந்திருக்கிற. எங்கெல்லாம் தேடுவது? உம் பிரபு... ஏண்டா அழறே... சொல்லுடா...

"அப்பாவை நினைத்துக் கொண்டேன்மா... என்று வாய்விட்டு அழுதான்... அவன் அருகில் உட்கார்ந்தாள்... பிரபு சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு அம்மா... நான் பெரியவனாகி உன்னை நான் காப்பத்தறேன் அம்மா... அந்த ஆளை நம் வீட்டில் சேர்க்காதே... எனக்கு பிடிக்கலே... நீங்க பேசிட்டு இருந்ததை எல்லாம் கேட்டேன்மா... அம்மா அது மாதிரியெல்லாம் வேண்டாம்மா... அப்பா மேல சத்தியமா சொல்றேன். நான் நம்ம ஊருக்கே போயி நம்ம கிணத்திலே விழுந்து செத்துப் போயிடுவேன்மா" என்று கோவென கதறினான் பிரபு.

தாயின் உள்ளம் ஓலமிட்டது. மகனுக்காக இந்தத் தியாகத்தை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். "பிரபு... இனிமே அந்த ஆள் வரமாட்டார். நாமும் நன்னாட்டுக்கே போய்விடலாம்." என்று மீனாட்சி அழவே.

"அம்மா நான் படிக்கிறதை நிறுத்திட்டு சித்தாள் வேலைக்கு நானும் வரேம்மா. நான் வேலை செய்து உன்னைக் காப்பாத்தறேன்."

"ஐயோ பிரபு... நீ என் பிள்ளை இல்லேடா என் தகப்பன்... நீ வேலைக்குப் போக வேண்டாம்டா... நல்லா படிக்கணும்... நாம இன்னிக்கே வீட்டை காலி செய்துவிட்டு நன்னாட்டுக்குப் போயிடலாம்... வா... வா வீட்டுக்குப் போகலாம்."

மகன் கரம் பற்றி வீட்டுக்கு அழைத்து வந்தாள். வீட்டை நெருங்கிய போது தியாகு திண்ணையில் உட்கார்ந்திருந்தான். இவர்களைப் பார்த்து "எங்கடா பிரபு போயிட்டே... அம்மாவை அலைய வச்சிட்டியா? இவ்வளவு காலையிலே எங்கே போனான் மீனாட்சி.."

பிரபுவும் மீனாட்சியும் பதில் பேசவில்லை... உள்ளே சென்ற மீனாட்சி பிரபுவை பல்விளக்கச் சொல்லிவிட்டு, தியாகுவின் பையை எடுத்துவந்து அவனிடம் கொடுத்துவிட்டு வாங்க... என்று கூறிவிட்டு தெருவில் நடந்தாள். ஒன்றும் புரியாமல் குழப்பத்துடன் அவன் பின்னாள் நடந்தான்.

மாரியம்மன் கோயில் திறந்திருந்தது. உள்ளே சென்றாள் மீனாட்சி. தியாகு அவள் அருகில் நின்றான். "தியாகு... ஏதோ நமக்கு புத்தி மழுங்கிப்போய் ஒருவர் மேல் ஒருவர் ஆசைப்பட்டோம். ஆனா என் மவன் பிரபுவுக்கு பிடிக்கலே. வாயைத் திறந்து சொல்லிட்டான்.

"மீனாட்சி... போகப்போக சரியாயிடும்... நாமதான் அவனை ஆஸ்டல்லே சேர்க்கப்போறோமே."

"இல்லைங்க... நீங்க வேற எந்த பொண்ணையாவது பார்த்து கல்யாணம் பண்ணிக்கங்க. இனிமே இங்கே வராதீங்க. இன்னிக்கே வீட்டை காலி செய்திட்டு நன்னாட்டுக்கு போறோம். என்னை மறந்துடுங்க தியாகு... என்னை மறந்துடுங்க..." என்று சொல்லிவிட்டு வாடகை வண்டியைத் தேடி வண்டி மேட்டுக்குச் சென்றாள் மீனாட்சி.

சரீர உறவு ரொம்ப சாதாரணம். அது ஆண் பெண் இடையே ஏற்படும் ஒரு வடிகால். கற்பு என்பது உடல் தொடர்பானது அன்று. அது உள்ளம் தொடர்பானது. அதை வெளிப்படுத்தியது ஒரு பிஞ்சி உள்ளம்.

நன்றி - உப்புநீர்ப் புன்னகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## தொடரும் தவிப்புக்கள்

இந்த வாழ்க்கையை
சங்கடங்களின்றி
நடத்த முடியவில்லை
விடியலின் ஆதியிலும்
இரவின் அந்தத்திலும்
அவை மீண்டு கொண்டு தான்
வருகின்றன

தேநீரில் இனிப்பு
குறையும் போதும்

சாயமிழந்த ஆடைகளை
அணியும் போதும்

நீரில்லா கழிவறையினுள்ளும்

பொருத்தமற்ற
உள்ளாடைகளோடும்



ஒழுங்காய் புணராத
குறிகள் நிறைந்த
இரவினுள்ளும்

ஒவ்வொரு சோதனைச்
சாவடியின்
அடையாள வகுப்பின் போதும்
சுற்றி வளைப்புக்குள்ளும்

சில வார்த்தைகளூடாக
சங்கடங்கள்
திரண்டு கொண்டுதான்
வருகின்றன

சில வேளைகளில்
பயங்கரமான சகஜமான
மௌனத்தினூடாக

நூல் : குறி இடல்
தில்லைநாதன் பவித்ரன்

## ஒரு வாழைப்பழம்

\- மாயன் -

அது மிக அழகானது
மரத்திலிருக்கும் போது ...
மெதுவாய் வாழை
வெளித்தள்ள
தேன் பூக்களை
வண்டுகளுக்காய்
சிதறடித்துப் பிறக்கும்
குழையின் - சிறு
விரல்களாய்க் காய்

பிஞ்சிற் கரும் பச்சையேறி —
ஏறிப் பெரிதாக ஆக
சூரிய ஒளிபட்டு
மினுங்கும் .. நீர்
இறைத்த மனிதரெல்லாம்
நின்று பார்த்து
மகிழ்ந்து மனம்குலாவிப்
போகப் - பின் நாளில்
நிறம் மாறும்.

குரங்கின் கண் படாமற்
காப்பாற்ற கூடையிட்டு
மறைக்கப்பட்டு — மஞ்சள்
மிகவேறிய ஓர் நாளில்
வெட்டி

வேறு இடம் போகும்
வாழைப் - பழம்
மணம் பரப்ப

உடையோன் - அவன் பெயரைப்
பின் பார்ப்போம்
அழுங்காமல் உரிப்பான்
ஆடை
அதன் ஆசை ஏதென்று
அறியாமல்

நக்கி — கடித்து, சுவைத்துச்
சிதையும் வாழை — அவன்
வெறியேறிய வாய்க்குள் ...

எறிந்த தோலிலிருந்து
மீண்டும் வாருரித்துத் தின்று
களைப்பாறுவான். வீணி வழிய
அவன்
பெயர்கள் பலவுண்டு
கணவன், பெரியப்பன்
மாமன், மச்சினன்
மறுவீட்டுக்காரன் - ஏன்
வாத்தியார்கள் கூட

ஊரான்
வாழை
திண்ண



வீணி
வழித்துக்
கிடப்பர்

தோழி ....

## சபதமெடுத்து வாழ்வோம்!

தோற்பன தொடர வேண்டாம்
துணைதனை பகைக்க வேண்டாம்
ஏற்பதை இகள வேண்டாம்
ஏழ்மையை பழிக்க வேண்டாம்!

கற்பதில் அசட்டை வேண்டாம்
கடமையில் ஊழல் வேண்டாம்
போற்பகை கொள்ள வேண்டாம்
பொய்பேசி வாழ வேண்டாம்!

மாற்றானை நம்ப வேண்டாம்
மாதா பிதாவை மறக்க வேண்டாம்
உற்றார் உறவு சுற்றத்தாரை
ஒரு போதும் ஒதுக்க வேண்டாம்!

குற்றங்கள் புரிய வேண்டாம்
கொலை வெறி கொல்ல
வேண்டாம்
சற்குணனாக வாழ இங்கு
சபதம் எடுத்துக் கொள்வோம்!

**சேனையூர் மூதூர் கிழக்கு**

# இருமரபுந்துய்ய எதிர்வீரசிங்க நல்லூபால வன்னிபத்தின் உயில்:

**பாகம் 02**



இருநூற்றாண்டு காலத்திற்கும் மேலாக செல்வாக்குப் பெற்றிருந்த வன்னிய பிரதானிகளும் வேளைக்காரர்களும் காலப்போக்கில் ஈழத்தின் பல பகுதிகளில் சுயாட்சி வன்னிப் பற்றுக்கள் தோன்றுவதற்கு வழிவகுத்தார்கள் எனலாம்.

சுயாட்சி அலகுகளும் அதன் சிற்றரசர்களது பெயர்களும் கீழே...
காமணி - காமணி, கும்பகாமம் - கும்பன்,
நந்திகாமம் - நந்திகன், காணுகாமம் – காணு
தம்பை – தம்ப(ன்), உண்ணம – உண்ணம(ன்)

ஆகிய அரசர்களை வென்றபின் பாதுகாப்பு நிறைந்த் விஜிதநகரம் நோக்கி அவன் படைகள் நகர்ந்ததைச் சொல்கிறது மகாவம்சம். இதன் பின்னரே துட்டகாமினி எல்லாளன் யுத்தம் இடம் பெறுகிறது. எல்லாளன் அனுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு இலங்கையை 44 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த தமிழரசன். இவனது நீதி தவறாத ஆட்சியைப் புகழ்ந்துரைக்கும் பாளி நூல்கள், எல்லாளன் தனது ஆட்சியில் பௌத்த மதத்திற்கு ஆதரவு அளித்த போதிலும், தவறான மார்க்கத்தினை (இந்து மதத்தினை) தழுவியவன் எனக் குறிப்பிடுகிறது.

கி.மு 3 ஆம் நூற்றாண்டிற்கும் (கி.மு 247) கி.மு 1 ஆம் நூற்றாண்டிற்கும் (கி.மு 29) இடைப்பட்ட 220 ஆண்டுகால அனுராதபுர அரசின் வரலாற்றில் ஆட்சி புரிந்த 19 மன்னர்களுள் 8 தமிழ் மன்னர்கள் 81 வருடங்களுக்கு மேல் ஆட்சி புரிந்துள்ளனர். இதில் 44 வருடங்கள் எல்லாளனுக்கும் 22 வருடங்கள் அவனது தந்தை ஈழசேனனுக்கு உரியவை. அத்துடன் இலங்கையை சூரதிச்சன் எனும் சிங்கள மன்னனிடமிருந்து கைப்பற்றி ஆண்டவர்கள் சேனனும் குத்திகனும் என்னும் இரு தமிழ் அரசர்கள். இவர்கள் கி.மு 177 ம் ஆண்டு முதல் கி.மு 155 ம் ஆண்டு வரை இருபத்திரண்டு ஆண்டு காலம் இலங்கையை ஆட்சி செய்திருந்தனர்.

இவ்வாறு நீண்டகால ஆட்சியினை மேற்கொண்ட எல்லாளன், சேனன், குத்திகன் என்னும் தமிழ் அரசர்களை மகாவம்சம் சோழமரபினர், ஆக்கிரமிப்பாளர்கள், அக்கரையைச் சேர்ந்தவர்கள் ,தமிழகத்தில் இருந்து படையெடுத்து வந்தவர்கள் என்று சொல்கிறது. எனினும் இவர்கள் ஈழவூரின் உத்தரதேசத்தை (தற்போதைய பூநகரி) சேர்ந்த சிற்றரசர்களாக இருந்து பின்னர் அனுராதபுரம் மீது படையெடுத்தவர்களா? என்ற ஐயப்பாடுகளை அண்மைய ஆய்வுகள் உருவாக்கி இருக்கின்றன. சமகால வரலாற்றுப் பதிவுகளில் இவர்கள் தமிழகத்தில் இருந்து படையெடுப்புக்களை மேற்கொண்டதிற்கான ஆதாரங்கள் இல்லாதிருப்பதும், இவ்வரசர்கள் தமிழகத்தில் நாடத்திய ஆட்சி பற்றிய குறிப்புகள் ஏதும் கிடைக்காததாலும் இந்த சந்தேகம் வலுக்கிறது.

கி.மு 3 நூற்றாண்டைச் சேர்ந்த அனுராதபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ் வணிகரின் கல்வெட்டு தமிழகத்தைச் சேர்ந்தவர்களைக் குறிக்க தமேட என்றும் ஈழத்தவரைக் குறிக்க ஈள என்ற பதங்கள் பயன்படுத்தப்படும் மரபு அக்காலத்தில் இருந்ததை ஆதாரப்படுத்துகிறது. (6) ஈழ, ஈலா என்ற பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மட்பாண்ட ஓடுகள் பூநகரியில் கண்டுபிடிக்கப்பட்டது. பெரியபுளியங்குளத்திலும் , திருகோணமலைச் சேருவிலவிலும் கண்டுபிடிக்கப்பட்ட தானசாசனங்களில் தமேட என்று தமிழகத்தவரைக் குறிப்பதையும் காணலாம். தமிழ் நாட்டிற்கும் ,ஈழத்திற்கும் இடையே வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலே கலாச்சார பண்பாட்டுத் தொடர்புகள் இருந்து வந்தமை பல ஆய்வுகள் மூலம் நிருபிக்கப்பட்டிருக்கிறது. எனினும் அவ்விரு பகுதியினரும் தமிழகத்தினர் (தமேட), ஈழத்தவர் (ஈழ) என்ற தனித்துவ அடையாளத்துடன் இருந்ததை இச்சாசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. ஆனால் அனுராதபரத்தில் தமிழ் அரசர்களின் ஆட்சி ஏற்படும் சமயங்களில் அவர்களை தமிழகத்தில் இருந்து படையெடுத்தது வந்தவர்கள் என்று சுட்டிக்காட்டும் மாகவம்ச போக்கு ஆராய்வுக்குரியது.

இவற்றுடன் தேவநம்பியதீசன் (கி.மு 247 - 207) அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த கால்த்தில் கதிர்காமம் மற்றும் சந்தணகாமத்தைச் சேர்ந்த தமிழ் சிற்றரசர்கள் தேவநம்பியதீசனின் அழைப்பினை ஏற்று புனித அரசமரக்கிளை நாட்டும் விழாவில் கலந்துகொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதுவரை நாம் பார்த்த ஆதாரங்கள் இலங்கையில் வன்னி அரசுகள் தோற்றம் பெறுவதற்கு முன்பாக பண்டைய காலங்களில் நிலவிவந்த தமிழ் குறுநில சுயாட்சி அரசுகளைப்பற்றி ஆதாரப்படுத்தி நிற்கின்றன.

"வன்னியர்" என்ற சொல் "வலிமை நிறைந்த" என்ற பொருளில் ஒரு குறிப்பிட்ட தமிழ் சமூகத்திற்கு வழங்கப்பட்டு வரும் பெயராகும். தமிழகத்தில் வன்னியர் என்ற சமூகம் மிக நீண்டகாலமாக தனித்துவ அடையாளங்களோடு இருந்து வருகிறது. தமிழகத்தின் வடபகுதியில் பரந்து வாழும் இச்சமூகம் பற்றி இலக்கியங்களில் பல ஆதாரங்கள் உள்ளன. கல்லாடம், சிலைஎழுபது ,வன்னியர் புராணம், வன்னியர் குல நாடகம், வன்னியர் குலகல்யாணக்கொத்து என்னும் நூல்கள் அவர்களது தோற்றம் பற்றிய விரிவான தகவல்களைத் தருகிறது. அத்தோடு அவர்கள் படைக்கலப் பயிற்ச்சிகளில் கொண்டிருந்த சிறப்பான திறமைகளையும் அவை விபரிக்கின்றன.

பெரும்பாலும் இராணுவ அமைப்புகளில் சிறப்பிடம் பெற்றிருந்த வன்னியர்கள் சிறந்த வில்லாளிகளாகவும் இருந்தனர். பண்டையகாலத்தில் பல்லவ, பாண்டிய, அரசுகளில் மாத்திரமின்றி சோழர்கால அரசிலும் வன்னியர்களின் படைத்தொகுதி சிறப்பிடம் பெற்றிருந்தது. சோழப் பெருமன்னர் காலத்தில் படைத்தொழிலில் சிறப்புப்பெற்று விளங்கிய இவ்வன்னியர்கள் அவர்களது இராணுவ சேவைக்கு ஊதியமாக வழங்கப்பட்ட பல பகுதி நிலங்களில் செறிந்து வாழ்ந்தனர். இவ்வாறு வன்னியர்கள் கூட்டமாக நிறைந்திருந்த பிரதேசங்கள் "வன்னிப்பற்றுக்கள்"என்று அழைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஈழத்தில் பொலநறுவைக் காலத்திலும் (கி.பி 993 - 1215), அதன் பின்பும் தமிழகத்திலிருந்து வன்னியர்களின் வருகை நிகழ்ந்தது. ஈழத்தில் சோழர்களுடன் வந்த வன்னிய பிரதானிகள் தலைமையிலான வேளைக்கார பிரிவுகளையும் கொண்டிருந்தனர். சோழர் ஆட்சிக்காலத்தில் ஈழத்தின் நிர்வாகத்தில் வன்னிப்பற்றுக்கள் என்ற பிரிவுகள் காணப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் 13ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் வன்னியரசுகளின் தோற்றம் நிகழ்ந்தது. தமிழகத்திலிருந்து வந்து பல பிரதேசங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களோடு ஆட்சிசெய்த வன்னி அரசுகள் இலங்கையில் நிகழ்ந்த பேரசுகளின் வீழ்ச்சியின் பின்னர் சுயாட்சி அதிகாரம் பெற்றன. அங்கு சிற்றரசர்களாக அரசு புரிந்தவர்களை வன்னி அரசர் அல்லது வன்னிபம் என்றழைக்கும் வழக்கம் உருவானது. அக்காலத்தில் இலங்கையில் ஆறு வன்னிப் பிராந்தியங்கள் இருந்தன. அவை முறையே.

1. அடங்காப்பற்று.(வன்னி)
2. திருகோணமலைப் பிரதேசம்.
3. மட்டக்களப்பு தேசம்.
4. நுகரகலாவிய
5. புத்தளம், சிலாபம்.(தெமள ஹத்பத்து)
6. ஊவா வெல்லஸ்ஸ

என்பனவாகும். இவற்றில் நுவரகலாவிய, ஊவா வெல்லஸ்ஸ ஆகிய இரு வன்னிகளும் சிங்கள வன்னிபங்களால் ஆளப்பட்டவையாகும். இவர்களை ஸ்ரீவன்னி, மகாவன்னி , வன்னிராஜ என அழைப்பது வழக்கமாகும். ஏனைய நான்கு வன்னிப்பிரதேசங்களும் தமிழ் வன்னிபங்களால் ஆளப்பட்டவையாகும். வன்னியர் சுயாட்சியதிகாரம் கொண்ட சிற்றரசர்களாக விளங்கினர். நிர்வாகம், நீதிபரிபாலனம் ,வேளாண்மை, ஆலயத்தொழும்பு போன்ற ஏற்பாடுகளை அவர்கள் கண்காணித்தனர். தமக்கெனப் படைப்பிரிவுகளைக் கொண்டிருந்த அவர்கள் தமது நிர்வாகத்துக்குட்பட்ட பிரதேசங்களில் வரி அறவிடும் அதிகாரம் பெற்றிருந்தனர்.

சுயாட்சி அலகுகளான இவ்வன்னிபங்கள் சிற்சில காலங்களில் யாழ்ப்பாண , கண்டி அரசுகளின் மேலாதிக்கத்திற்கு உட்பட்டிருந்ததும் குறிப்பிடத் தக்கது. இவ்வன்னிமைகள் கண்டி, யாழ்ப்பாண மேலாதிக்கத்திற்கு உட்பட்டிருந்த காலங்களில் அவற்றுக்கு ஆண்டு தோறும் திறை செலுத்தியிருக்கின்றன. அத்துடன் போர்க்காலங்களில் அவ்வரசர்கள் சார்பாக படை திரட்டியதோடு, போர் நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கிச் செயற்பட்டும் இருக்கிறது. பல சமயங்களில் இவ்வரசகள் இராட்சியங்களின் முக்கிய விடயங்களில் வன்னிபங்களுக்கு கௌரவமான பங்கு கொடுத்திருப்பதையும் வரலாற்றாதாரங்கள் மூலமாக அறியக்கூடியதாக உள்ளது.

தொடரும் ..

**வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்**

## குழப்பிய திரிஷா



நடிகை த்ரிஷா சமீபத்தில் அளித்த ஒரு பேட்டியில் தன்னுடன் நடித்த ஐந்து ஹீரோக்களில் அஜீத்துக்குத்தான் முதலிடம் என்று கூறி அஜீத் ரசிகர்களை மகிழ்ச்சியடைய செய்துள்ளார். மேலும் சூர்யாவுக்கு இரண்டாவது இடமும், விக்ரமுக்கு மூன்றாவது இடமும், கமல்ஹாசனுக்கு நான்காவது இடமும் கொடுத்த த்ரிஷா, விஜய்க்கு ஐந்தாவது இடமே கொடுத்துள்ளார். இத்தனைக்கும் விஜய் த்ரிஷா நடித்த கில்லி, திருப்பாச்சி ஆகிய படங்கள் சூப்பர் ஹிட் ஆனவை.

## சிவாவால் தப்பிய தனுஷ்



'வேலையில்லா பட்டதாரி'யை ரொம்பவும் அடிமாட்டு விலைக்கு விநியோகிஸ்தர்கள் கேட்டதனால் அதிர்ச்சி அடைந்த தனுஷ், பின்னர் சிவகார்த்திகேயன் ஹீரோவாக நடித்து சொந்தமாக தயாரித்துக்கொண்டிருக்கும் டாணா படத்தையும் சேர்த்து விலை பேசினார். இம்முறை அவருடைய திட்டம் பலித்தது. சிவகார்த்திகேயனுக்கு நல்ல மார்கெட் இருப்பதால் இரண்டையும் சேர்த்து வாங்கிக்கொள்ள விநியோகிஸ்தர்கள் முன்வந்தனர். இன்னும் பாதிகூட முடியாத நிலையில் இருக்கும் டாணாவை வைத்து 'வேலையில்லா பட்டதாரி' படத்தை விற்பனை செய்துவிட்டார்.

## சூர்யா இல்லை சூர்யா பாய்

அஞ்சான் இன் சமீபத்தில் வெளியான டீஸர் நான்கே நாட்களில் ஒரு மில்லியன் பார்வையாளர்களை சென்றடைந்துள்ளது. ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி இந்த படம் ரிலீஸ் ஆகவுள்ளது.

இதற்கிடையில் இப்படம் பிசினஸ்மேன் கதையைத்தான் கொஞ்சம் தமிழுக்கேற்றவாறு மாற்றி லிங்குசாமி தயார் செய்துவிட்டதாக அவர் மீது தற்போது கடும் குற்றச்சாட்டை தெலுங்கு ரசிகர்கள் தெரிவித்து வருவதால் அஞ்சான் படக்குழுவினர் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்



## மீண்டும் உலக அழகி

குழந்தை பெற்று, அந்த குழந்தையை கவனிப்பதற்காக சினிமாவில் இருந்து விலகி இருந்த ஐஸ்வர்யா, தற்போது குழந்தை ஆராத்யாவிற்கு ஓரளவிற்கு விபரம் தெரிந்துவிட்டதால், மீண்டும் நடிக்க களம் புகுந்துள்ளார்.



சஞ்சய் குப்தா இயக்கும் Jazba என்னும் திரைப்படத்தில் ஜான் ஆபிரஹாமுக்கு ஜோடியாக நடிக்க ஐஸ்வர்யாராய் ஒப்பந்தம் ஆகியுள்ளார். கேங்ஸ்டார் கதையை கொண்ட இந்த திரைப்படத்தில் ஐஸ்வர்யா கிளாமர் மற்றும் ஆக்சன் காட்சிகளிலும் நடிக்கின்றார்.

## சிறந்த ஜோடி, சிம்பு – ஹன்சி

விருது வழங்கும் விழாவில் அழைக்கப்பட்ட பிரியா ஆனந்திடம் விழா தொகுப்பாளினி தமிழ் சினிமாவில் மிகச்சிறந்த ஜோடி யார்? என்ற கேட்டபோது, பிரியா ஆனந்த் சிறிதும் யோசிக்காமல் உடனே சிம்பு- ஹன்சிகா ஜோடி தான் சிறந்தது என்று கூறினார்.



உடனடியாக கேமிரா ஹன்சிகாவை நோக்கி திருப்பப்பட்டபோது அவரது முகத்தில் கடும் அதிர்ச்சி காணப்பட்டது. அவர் கோபத்துடன் பிரியா ஆனந்தை பார்த்ததாக கூறப்படுகிறது. சில மாதங்களுக்கு முன்பு சிம்புவுடனான காதலை பிரேக் அப் செய்த ஹன்சிகாவை இப்படி வம்பில் மாட்டிவிட்ட ப்ரியா ஆனந்த் மீது ஹன்சிகா கோபமாக இருப்பதாக கூறப்படுகிறது.

## கொந்தளிக்கும் ஆன்டி அனுஷ்கா



சமீபத்தில் ஹைதராபாத்தில் உள்ள ராமோஜி பிலிம் சிட்டியில் அனுஷ்கா நாயகியாக நடித்து வரும் "ருத்ரம்மா தேவி" படத்தின் படப்பிடிப்பின் போது அங்கு சில பள்ளிச் சிறுவர், சிறுமியர் சுற்றிப் பார்க்க வந்திருக்கிறார்கள். அவர்களில் சிலர் அனுஷ்காவை "ஆன்ட்டி" என்று அழைத்தார்களாம்.

அதனால் அனுஷ்கா கோபப்பட்டு வருத்தமடைந்து விட்டதாகச் சொல்கிறார்கள். சிறுவர், சிறுமியர் தன்னை "அக்கா" என்று அழைப்பதை அனுஷ்கா எப்படி எதிர்பார்க்கலாம். அவர்கள் எல்லாம் "ஆன்ட்டி" என்றுதானே அழைப்பார்கள் என அங்குள்ளவர்கள் கமெண்ட் அடித்திருக்கிறார்கள்.


## அடுத்த சூப்பர் ஸ்டார் — அஜித்

அடுத்த சூப்பர் ஸ்டார் பட்டம் என்பது ஒருவர் எடுக்கும் முடிவு அல்ல. குமுதம் இதழில் லட்சக்கணக்கான வாசகர்கள் ஓட்டுபோட்டு வாங்கிய பட்டம். இதை கே.எஸ்.ரவிகுமார் அவமானப்படுத்தியதுபோல் "சூப்பர் ஸ்டார் பட்டம் அஜீத்துக்குத்தான் நியாயமாக பொருந்தும்" என்று கருத்து கூறியதை ஏற்க முடியாது என்று விஜய் ரசிகர்கள் கொந்தளித்து கருத்து கூறி வருகின்றனர். மேலும் கே.எஸ்.ரவிகுமார் இயக்கும் "லிங்கா" திரைப்படத்தை விஜய் ரசிகர்கள் அனைவரும் புறக்கணிக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்து வருகின்றனர்.

இதனால் "லிங்கா" படக்குழு அதிர்ச்சி அடைந்து அது அவரது தனிப்பட்ட கருத்து என்றும் இதற்கும் "லிங்கா" திரைப்படத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும் லிங்கா படக்குழு விஜய் ரசிகர்களை சமாதானப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளது.

# சினிமுரசு

## சினிமா குறுஞ் செய்திகள்



- **சூர்யா பிறந்தநாளில் வெளி வருகிறது அஞ்சான் கேம்**

அஞ்சான் படத்தின் விளம்பரத்துக்காக ஆண்ட்ராய்டில் அஞ்சான் கேம் தயாராகி வருகிறதாம்! சூர்யாவின் பிறந்தநாளான ஜுலை 23 அன்று இந்த அஞ்சான் கேமை வெளியிட இருக்கின்றனர்.

- **கமல் விபத்துக்குள்ளானார்**

விஜய் டிவி நடத்திய விஜய் விருதுகள் விழாவில் சிறப்பு விருந்தினராக வருவதற்கு ஒப்புக்கொண்டதாலும், தனது இனிய நண்பர் ஷாருக்கான் கலந்துகொள்ளும் விழா என்பதால் அந்த விழாவை மிஸ் பண்ண மனமில்லாததாலும் வலியுடன் கலந்துகொண்டார்.

- **ஐ – ஓர் முன்னோட்டம்**

ஐ ஒரு விளையாட்டை பற்றிய படம் அல்ல. சாதாரண மனுஷன் அமானுஷ்ய சக்தி பெற்றவனாக மாறி என்ன செய்கிறான் என்கிற கதை. அது மாய மந்திரமோ, தெய்வ சக்தியோ அல்ல, விஞ்ஞான ரீதியாக கிடைக்கும் அமானுஷ்ய சக்தி.

- **ஹரி-சூர்யா இணையும் ஐந்தாவது திரைப்படம்**

கோலிவுட்டில் சூர்யாவும், ஹரியும் இணைந்து கொடுத்த நான்கு படங்களுமே சூப்பர் ஹிட் ஆனவை. இந்நிலையில் அஞ்சான் திரைப்படத்தின் டீஸர் வெளியீட்டு விழாவில் இயக்குனர் ஹரி விரைவில் சூர்யாவுடன் ஐந்தாவது முறையாக இணைய உள்ளதாக தெரிவித்தார்.

- **சௌந்தர்யாவின் புதிய டாட்டு ஏற்படுத்திய பரபரப்பு**

ரஜினிகாந்தின் இளைய மகள் சௌந்தர்யா ரஜினிகாந்த் தனது பெற்றோர்களின் மீதுள்ள பாசத்தை வெளிப்படுத்தும் வகையில் தனது கையில் அவர்களது பெயரை டாட்டூ வரைந்துள்ளார்.

- **கத்தி எதிர்கொள்ளும் அடுத்த பிரச்சினை**

ராஜபக்சேவின் நண்பர் கத்தி படத்தை தயாரிப்பது, பின் நாளடைவில் அப்பிரச்சனை வந்த வேகத்திலேயே போய்விட்டது. இப்போது லைகா புரொடக்ஷன் நிறுவனர் அல்லிராஜாவின் குடும்ப விழாவுக்கு இன்னும் சில நாட்களில் விஜய் உட்பட கத்தி குழுவினர் லண்டன் செல்லப் போகின்றனர். இதற்கு அங்குள்ள தமிழ் மக்கள் கறுப்புக் கொடி காட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

- **மாதவன் தனுஷ் இணைகின்றனரா?**

இயக்குனர் ஆனந்த் எல்.ராய் தற்போது மாதவன்-கங்கனா ரணாவத்தை வைத்து தாணு வெட்ஸ் மாணு படத்தின் இரண்டாம் பாகத்தை எடுத்து வருகிறார். தனுஷ் அதில் கெஸ்ட் ரோலில் நடிக்கவிருப்பதாக நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றது.

## திரை விமர்சனம்: அரிமா நம்பி



சென்னையில் கார் ஷோருமில் வேலை செய்யும் விக்ரம் பிரபு ஒருநாள் தனது நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்த பப் ஒன்றிற்கு செல்கிறார். அங்கு வரும் நாயகி பிரியா ஆனந்தை கண்டவுடன் காதல் கொண்டு அவரிடம் நைசாக பேசி போன் நம்பரை வாங்குகிறார். மறுநாள் நாயகனும் நாயகியும் சேர்ந்து ஒரு ஓட்டலில் மது அருந்துகின்றனர். பின்னர் நாயகி ப்ரியா ஆனந்த் தனது வீட்டிற்கு வருமாறு விக்ரம் பிரபுவை அழைக்கிறார். அவருடைய அழைப்பை ஏற்று அவர் வீட்டுக்கு செல்லும் விக்ரம் பிரபு, பின்னர் இருவரும் சேர்ந்து வீட்டிலும் மது அருந்துகின்றனர்.

இந்நிலையில் விக்ரம் பிரபு பாத்ரும் போய்விட்டு திரும்புவதற்குள் ப்ரியா ஆனந்தை ஒரு மர்ம கும்பல் கடத்த முயற்சி செய்கின்றனர். ப்ரியா ஆனந்தை காப்பாற்றும் முயற்சியில் தோல்வி அடையும் விக்ரம் பிரபு, உடனடியாக அருகிலிருக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்கு சென்று புகார் கொடுக்கிறார்.

இவரது புகாரை நம்பிக்கையில்லாமல் வாங்கிக்கொண்ட போலீஸ் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் எம்.எஸ்.பாஸ்கரை அனுப்பி சம்பவ இடத்தை பார்த்து வர சொல்கிறார். அங்கு பிரியா ஆனந்த் கடத்தப்பட்டதாக விக்ரம் பிரபு கூறும் எந்த அடையாளமும் இல்லை. வீட்டை காவல்காக்கும் செக்யூரிட்டியும் பிரியா ஆனந்த் வெளியூருக்கு சென்றிருப்பதாகவும், அவரை யாரும் கடத்தவில்லை என்றும் கூற என்ன செய்வது என்று தெரியாமல் குழம்புகிறார் விக்ரம் பிரபு.



இறுதியில், பிரியா ஆனந்த் கடத்தப்பட்டாளா? அவளை கடத்தியது யார்? அவளை எதற்காக கடத்தினார்கள்? அவளை விக்ரம் பிரபு கண்டுபிடித்தாரா? இல்லையா? என்பதை விறுவிறுப்பாக திரைக்கதையின் மூலம் படமாக்கியிருக்கிறார் இயக்குனர் ஆனந்த் ஷங்கர். இவர் இயக்குனர் ஏ.ஆர்.முருகதாஸின் உதவியாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிட்டி இளைஞனாக வரும் விக்ரம் பிரபு காதல் காட்சியில் சரிவர நடிப்பை வெளிப்படுத்தவில்லை எனினும் ஆக்ஷன் காட்சிகளில் பின்னி பெடலெடுக்கிறார். கும்கி, இவன் வேற மாதிரி படங்களுக்கு இந்த படமும் இவருடைய வெற்றிப் படங்களில் ஒன்று என்று சொல்லும் வகையில் அமைந்திருக்கிறது.

மத்திய அமைச்சராக வரும் ஜே.டி.சக்கரவர்த்தி வில்லன் வேடத்திற்கு மிகவும் பொருத்தமாக உள்ளார். இவர் தனது நடிப்பில் அனைவரையும் மிரட்டியிருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். போலீஸ் கமிஷனராக வரும் ஜேப்பி, லேகா வாஷிங்டன் ஆகியோரும் சிறப்பாக நடித்திருக்கிறார்கள்.

இயக்குனர் ஆனந்த் ஷங்கர் படம் ஆரம்பம் முதல் கடைசி வரை செம விறுவிறுப்பாக கொண்டு சென்றுள்ளார். இடை [illegible] சில காட்சிகளும், பாடல் காட்சிகளும் போர் அடித்தாலும் மொத்தத்தில் பாஸ் செய்து விடுகிறார் இயக்குனர் ஆனந்த் சங்கர்.

விறுவிறுப்பான திரைக்கதைக்காக ஒருமுறை கண்டிப்பாக பார்க்கலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்தரிப்பை தடுக்கும் சிப்



கடந்த 16 ஆண்டு கால முயற்சியிலும், மைக்ரோசொப்ட் நிறுவுனர் பில்ஹேட்ஸ்ஸின் ஆதரவுடனும் கருத்தரித்தலை தடுக்கக்கூடியதும், ரிமோர்ட் கன்ரோல் மூலம் இயக்கக்கூடியதுமான அதிநவீன சிப் உருவாக்கப்பட்டுள்ளது இதனை பிட்டம், மேல் கை, அடி வயிற்றின் தோல் போன்ற இடங்களில் பொருத்த முடியும்.
இதன் மூலம் வெளியேற்றப்படும் விசேட ஹோர்மோன் கருத்தரித்தலை கட்டுப்படுத்துகின்றது. எனினும் பெண்கள் தமக்கு தேவையான நேரத்தில் வயர்லெஸ் தொழில்நுட்பம் மூலம் இதனை செயலிழக்கச் செய்யவோ அல்லது மீண்டும் செயற்படுத்தவோ முடியும்.

## முப்பரிமாண ரோபோ



பிரித்தானியாவை தளமாகக் கொண்டு இயங்கும் Shadow எனப்படும் ரோபோ உற்பத்தி நிறுவனம் அதிநவீன ரோபோ ஒன்றினை உருவாக்கியுள்ளது. இந்த ரோபோ முப்பரிமாண கமெராக்கள் மற்றும் சென்சார்களை அடிப்படையாகக் கொண்ட செயற்படவல்லது. அதாவது பொருட்களை பார்க்கும் ஆற்றலையும் அவற்றினை தொட்டு உணரும் ஆற்றிலையும் கொண்டுள்ளதுடன் மென்மையான பொருட்களையும் கையாளக்கூடியதாக காணப்படுகின்றது.

# விளையாட்டுப் பையன்

## புதிய smart கைக்கடிகாரம்



Spice நிறுவனம் Spice Smart Pulse M9010 எனும் புதிய ஸ்மார்ட் கைக்கடிகாரம் ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது. 67 டொலர்கள் பெறுமதியான இக்கடிகாரத்தில் 2G வலையமைப்பினைக் கொண்ட இரண்டு சிம் கார்ட்கள் பயன்படுத்தும் வசதி காணப்படுவதுடன், இதில் 4 அங்குல அளவுடையதும் 240 x 320 Pixel Resolution உடைய தொடுதிரை, 1.3 மெகாபிக்சல்களை உடைய கமெரா, 420mAh மின்கலம், FM றேடியோ, 8GB சேமிப்பு நினைவகம் என்பனவும் தரப்பட்டுள்ளது.

## Xiaomi Vs iPad Mini



Xiaomi நிறுவனத்தினால் சில தினங்களுக்கு முன்னர் அறிமுகம் செய்யப்பட்ட புதிய டேப்லட்டான MiPad அறிமுகம் செய்யப்பட்டு 4 நிமிடங்களுக்கும் குறைவான நேரத்தில் 50,000 சாதனங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சாதனம் அப்பிளின் iPad Mini இற்கு போட்டியாக உருவாக்கப்பட்டுள்ளது.


## 71 மொழிகளில் ஜிமெயில்

கூகுள் நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்டு முன்னணியில் திகழும் மின்னஞ்சல் சேவையான ஜிமெயில் சேவையினை மேலும் 13 மொழிகளில் பயன்படுத்தும் வசதி தரப்பட்டுள்ளது.
இதற்கு முதல் 58 மொழிகளில் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்த ஜிமெயில் சேவையை இனி 71 மொழிகளில் பயன்படுத்த முடியும்.




இதன் மூலம் தற்போது உலகெங்கிலும் உள்ள 94 சதவீதமான இணையப்பாவனைப் பாவனையாளர்களை தன்னகத்தே அடக்கக்கூடியதாக இருப்பதாக கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

## mHicon கைப்பட்டி



சமூகவலைத் தளங்கள் பயன்படுத்துபவர்கள் அவற்றின் செயற்பாடுகளை உடனுக்குடன் அறிந்து கொள்வதற்கு புத்தம் புதிய கைப்பட்டி ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. mHicon எனப்படும் இக்கைப்பட்டியின் ஊடாக சமூகவலைத்தளங்களின் அப்டேட், ஏனைய அறிவுப்புக்களை அறிந்துகொள்ள முடியும்.
ஸ்மார்ட் கைப்பேசிகளுடன் வயர்லெஸ் இணைப்பின் மூலம் இணைத்து பயின்படுத்தக்கூடிய இச்சாதனம் 30 மீற்றர்கள் தூரம் வரை இயங்கக்கூடியது. மேலும் இது 100 சதவீதம் நீர் உட்புகாதவாறு வடிமைக்கப்பட்டுள்ளதுடன், தூசு, அதிர்வுகளிலிருந்து பாதுகாப்பினை உடையதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## பறக்கும் விண்வெளி

நாசா விண்வெளி விஞ்ஞானிகள் இதற்காக மாற்றி வடிவமைக்கப்பட்ட போயிங் 747 ரக ஜெட்லைனர் விமானத்தில் 8 அடி விட்ட பரப்பளவில் 17 டன் எடை கொண்ட தொலைநோக்கியை பொருத்தியுள்ளனர். இந்த விமானம் பூமியில் இருந்து 7,624 மைல்களுக்கு அப்பால் அந்தரத்தில் பறக்கும். மேலும் 12 மணிநேரத்திற்கு மேலாக அசையாமல் நிற்கும் திறனுடையது.
சோபியா (ஸ்டிரட்டோஸ்பெரிக் அப்சர்வேட்டரி ஃபார் இன்ப்ராரெட் அஸ்ட்ரானமி) என்றழைக்கப்படும் இந்த அகச்சிவப்புகதிர் தொலைநோக்கியை போயிங் விமானத்தின் பின் பகுதியில் உள்ள ஸ்லைடிங் டோரில் கண்ணாடி மூலம் வானத்தை பார்க்கும் வகையில் நிறுத்தி உள்ளனர். சோபியா அனுப்பும் தகவல்களை வானியல் கருவிகளாலும் நிலத்திலோ அல்லது விண்வெளியிலோ பெற முடியாது. சோபியாவினால் சூப்பர்நோவா, வால்மீன்கள் போன்ற மாறிக் கொண்டேயிருக்கும் விண்வெளியின் நிகழ்வுகளை எளிதாக கண்டுபிடிக்க முடியும்.




# ஒரு கொலையின் கதை

2-20

**ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை...... கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.**

அப்போது அந்த மணவாளனது முகத்தில் தனது சுட்டு விரலை அழுத்திய டொடி இவனது கழுத்தைத்தான் அலிக அறுத்தார் என எனக்குச் சொன்னார். அதற்குப் பின்னர் எனக்கு லேசான நடுக்கம் ஏற்பட்டது... நான் அந்தப் பையை ஏற்க மறுத்தேன்.. ஆனால் சில நாட்களில் தான் அவற்றைத் திருப்பி வாங்கிக் கொள்வதாக டொடி வற்புறுத்தியதால் அவற்றை............. (19)

........................................

நான் பெற்றுக்கொண்டேன்... மது வைத்தியசாலையில் இருந்து வந்ததும் இந்தவிடயங்களைத் தெரியப் படுத்தினேன். அப்போது தான் டொடி தந்து நான் எடுத்துச் சென்ற பொருட்கள் தொடர்பாகவும் அவரிடம் கூறினேன்.

அப்போது மது அப்பையினுள் இருப்பவற்றைப் பார்த்தாயா? எனக் கேட்டார். நான் பார்க்கவில்லை என அவருக்குப் பொய் சொன்னேன். ஏனெனில் நான் பார்த்துத் தான் அவற்றை வாங்கிப் போயிருந்தேன் எனச் சொல்லியிருந்தால் என்னுடனும் மது கோவிப்பார் என்றே எண்ணினேன். அதனால்தான் அவ்வாறு பொய் சொன்னேன்.... அப் பொய்யின் பின் மது அந்தப் பையை எடுத்துவரச் சொன்னார்.அதனை நான் வாரமொன்று கழித்தே எடுத்து வந்தேன் எனக்கு அந்த இடைவெளியில் நல்ல காய்ச்சல் காய்ந்தது. அதனாலேயே நான் உடனடியாக எடுத்துவரவில்லை. பின்னர் இருவரும் அப்பையைத் திறந்து பார்த்தோம்........

எனத் தொடர்ந்த அவனது வாக்குமூலம் எவ்வித மாற்றங்களும் இன்றி அச்சொட்டாகவே மதுவின் வாக்குமூலத்தை ஒத்திருந்தது.

புலனாய்வாளர்கள் அவனிடம இருந்த அனைத்தையும் கறந்து கொண்டார்கள். இனி எஞ்சிக் கிடந்தது அவனிடமிருந்து அந்தப் பையைப் பெற்றுக்கொள்வது மட்டும் தான்.

அவர்கள் இருவர்...அவர்களும் இருவர்.... அந்த அறை இப்போது நிசப்தமாக இருந்தது. அந்தக் கணத்தில்தான் புலனாய்வாளார் தனது காற்சட்டைப் பைக்குள்ளிருந்து அந்தக் ஒலிப்பதிகருவியை வெளியே எடுத்தார். எண்ணியல் சாதனமான அதன் ஓட்டைத் நிறுத்திய பின்னர் அவர்கள் இருவருக்கும் முன்னே அமர்ந்திருந்த இரு சாட்சியாளர்களையும் நோக்கி...

“ சரி... நீங்கள் அளித்த வாக்குமூலத்தில் எவ்வித சந்தேகங்களும் தற்போதைக்கில்லாத படியால் நாங்கள் உங்களை அழைத்துச் செல்லவில்லை. ஆனால் நாங்கள் அழைக்கும் போது நீங்கள் வரவேண்டியிருக்கும். அடுத்து மாவட்டத்தை விட்டு வெளிச் செல்வதானால் எமது இந்தக் கைப்பேசி எண்ணுக்கு சொல்லிவிட்டே செல்ல வேண்டும்” எனக் கட்டளயிட்டார்.

அவர்கள் ஏற்றுக்கொண்டனர்... அதைத்தவிர என்னதான் செய்ய முடியும்......

அந்த காவல்துறை வாகனம் தனது வழியே பயணப்படவில்லை... அதனை செலுத்துபவருக்கு யாரோ வழி காட்டிக்கொண்டிருந்தான்......

அவ. வழிகாட்டியின் வழியின் படி அந்த வாகனம் ஒரு வீட்டின் முன் நிறுத்தப்பட்டது. அவர்கள் இருவரும் அவனுடன் அந்த வீட்டிற்கு வந்தார்கள்....

அங்கிருந்து வெள்ளை நிறப் பையொன்றை இருவரும் பெற்றுக்கொண்டார்கள்.... வாசல்வரை மிலிந்த அவர்களுடன் வந்தான்.... அவ்வாசலில் அவனைத் தனித்து விட்டு விட்டு வாகனம் கரும் புகையைக் கக்கிக்கொண்டு கண்ணுக்குள்ளிருந்து மறைந்தது.... மிலிந்த தலையைத் தொங்கவிட்டவாறே தனது வீட்டிற்குள் புகுந்தான்...

இப்போது அந்த வாகனம் தனது வழியே பயணப்பட்டது. அந்த வாகத்தில் இருந்தவர்கள் இருவரும் அந்தப் பையைத் திறந்து பார்த்தபோது உரு திருமண படக்கதம்பமும், ஒரு வாழ்த்து அட்டையும் குறந்தட்டுகள் சிலவும் அவர்களுக்கு கண்ணில் பட்டது.

அந்தத் திருமண படக் கதம்பத்தின் முகப்பில் அந்த அழகான கள்ளங்கபடமற்ற இளைஞன் தனது வாழ்க்கைத் துணையை இறுகப் பற்றிவாறு அழகான சிரிப்போடு இருந்தான்..... அந்தப் பற்றுதல் என்றும் அவளைத் தனியே விடாது என்பதாய் அவர்களுக்குத் தோன்றியது.....

........................................

அலிகவின் வீட்டில் அந்த மடிக்கணணியைத் திறக்கும் கடவுச் சொல்லின் எட்டு இலக்கங்களையும் அலிகவின் மனைவி சொல்லச் சொல்ல அலிகவின் பிறந்த திம் மற்றும் மாதங்களைக் கொண்ட முதல் நான்கு இலக்கங்களையும் தாண்டி அடுத்த நான்கு இலக்கங்களும் அந்தப் புலனாய்வாளர்களுக்குப் பரிச்சயமானவையாக இருப்பதை அவர்கள் உணர்ந்தார்கள்....

முதல் நான்கு இலக்கங்களையும் பதிந்த பின்னர் ஏனைய நான்கு இலக்கங்களையும் அவர்கள் ஞாபகப்படுத்திக்கொள்ள முயன்றபோது அவர்களின் இதயமும் ஒரு கணம் விட்டுத் துடித்தது.

அந்த நான்கு இலக்கங்களும் கேதீஸின் மனைவியின் பிறந்த நாளும் மாதமும் ஆக இருந்தன...

அவர்களுக்கு என்னவோ பொறி தட்டியது....

அந்தக் கணணி தனது திரையையும் இந்தக் கொலைக்கான முக்கிய சான்றையும் அவர்களுக்காகத் திறந்தது.

அவர்கள் அந்தக் கணணியின் கோப்புக்களின் ஊடே பயணித்தார்கள். மிகக் குறைந்த கோப்புக்களே அந்தக் கணணியில் சேமிக்கப்பட்டிருந்தன..... அந்தக் கோப்புக்களுள் எவ்விதமான முக்கிய தகவல்களையும் அவர்களால் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

ஆசுவாசமாக மறைத்து வைக்கப்பட்டிருக்கும் கோப்புக்களை வெளிக்கொண்டுவர அவர்கள் கணணியின் இயக்கு மென்பொருளின் கட்டளைகளை கணணிக்கு வழங்கினார்கள்.....

அக்கட்டளையின் பேரில் மெல்லி சாம்பல் கவிந்த கணணிக் கோப்பொன்று அவர்களுக்குக் கண்ணில் பட்டது.

அந்தக் கோப்பைத் திறந்த போது சில படங்கள் அவர்களின் முன்னே விரிந்தன..... இந்த வழக்கின் முக்கிய முடிச்சும் அப்போது அவிழ்ந்தது...

அந்தப்படங்கள் அலிகவும் கேதீஸின் மனைவியும் ஒன்றாக இருக்கும் படங்களாக இருந்தன.....

........................................

இக்கொலையின் மிக ஆரம்ப விசாரணைக் கட்டங்களில் புலனாய்வாளர்கள் விசாரணை முக்கோணமொன்றை வரைந் திருந்தார்கள்.

அந்த முக்கோணத்தில் ஒருமுனையில் கேதீஸ் சும் மறு முனையில் அலிகவும் இருந்தனர். அலிகவைக் கேதீசுடன் இணைக்கும் மற்றைய நபர் யாரேன்பதே புலனாய்வாளர்களுக்கு இருந்த மிகப்பெரும் சவாலாக இருந்தது.

அந்த நபர் யாரென்பது தெரிய வந்தபோது அந்த நபரின் உடனான உறவே இக்கொலைக்கு அடிப்படையானது என்பதும் தெரிய வந்தது.....

இப்போது அந்த முக்கோணத்தில் எவருக்கும் இடமில்லை.....

**பாகம் 2 நிறைவுபெற்றது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல்

# எதிரியும் எதிரியின் நண்பனும்

09

நல்ல வேளையாக நாம் இன்னமும் காட்டுவாசிகளாக இல்லை! இருந்தாலும் என்ன?......... எம்மைச்சுற்றி எதிரிகள் என்ற பெயரில் காட்டு மிருகங்கள் எம்மை ஒழித்துவிட கங்கணம் கட்டிக்கொண்டே தான் இருக்கின்றன! யாராவது ஒருவர் தனக்கு எதிரிகள் எவரும் இல்லை என்று அடித்துக் கூறவும் நிருபிக்கவும் முன்வருவாரா? இல்லை. ஒரு பாடசாலைச் சிறுவனுக்கு அவனது வகுப்பில் எதிரிகள் உண்டு. எந்த நாட்டினதும் ஜனாதிபதிக்கோ பிரதம மந்திரிக்கோ எதிரிகள் இல்லை என்று கூற முடியுமா?

சமூகத்தில் கீழ் நிலையில் இருக்கும் ஒருவருக்குக்கூட 'உன்னை நான் ஒழிக்கிறேனா இல்லையா பார்' என்று சவால் விடும் எதிரிகள் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

அரசியல் வாதிகளுக்கும் பொருளாதார நிலையில் மிக மிக உயர் நிலையில் இருப்பவர்களுக்கும் ஏன் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்? எதிரிகள் இருப்பதனால்தான். வாழ்க்கையில் ஒவ்வொருவருக்குமே எதிரிகள் இருக்கத்தான் செய்கின்றார்கள். எனவே நாமும் எமது எதிரிகள் பற்றி விழிப்பாக இருப்பது அவசியம். எதிரிகளை எப்படி இனம் காணுவது?

எமது எதிரிகள் தூர தேசத்தில் இருக்கமாட்டார்கள். எமக்கு அருகில் எம்மைச் சுற்றியே இருப்பார்கள் எமக்கு நேரும் கஷ்ட நஷ்டங்களையிட்டு உள்ளூர மனம் மகிழ்வர். எமக்கு உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களில் மெதுவே நழுவி விடுவார்கள். எம்மைப்பற்றி எவராவது குற்றம் கூறி விமர்சிக்கும் சந்தர்ப்பத்தில் மௌனமாக இருந்து அவதானிப்பர். எமக்கு எதிராக செயல்படுபவர்களை இனம் கண்டு அவர்களுடன் அதிகளவில் நட்பு பாராட்டுவர்.

வாழ்கையில் எமக்கு கஷ்டங்கள் நேரும் போதும் அல்லது நாம் எதற்காகவாவது தண்டிக்கப்படும் போதும் 'அவருக்கு அது வேண்டும்' என்று கூறி நியாயப்படுத்துவர். அனைத்துக்கும் உச்சக்கட்டமாக எவரையாவது தூண்டி அல்லது தானே நேரே முன் வந்து கெடுதல் உண்டு பண்ணுவர். எமக்கு எதிரிகள் உருவாகக் காரணம் என்ன என்பதை எம்மால் புரிந்து கொள்ளக் கூடுமாயின் பலர் எமது எதிரிகளாக மாறுவதை தவிர்க்க முடியும். அது பற்றி ஆராய்வோம்.

உண்மையைச் சொல்லப்போனால் 'இவன் ஏன் நல்லவனாக இருக்கிறான்' என்ற அசூயை வயப்பட்டே சிலர் எமது எதிரிகளாகி விடுகிறார்கள். உங்கள் அழகு, கம்பீரம், வகிக்கும் உயர் பதவி, செல்வாக்கு, பணபலம், ஆள்பலம் இவை பலருக்கு பகைமையை உண்டு பண்ணும். நீங்கள் ஒருவரிடம் உதவி பெறும் நிலையில் இருந்திருப்பீர்கள். இப்போ உங்கள் சுய காலில் நிற்கும் அளவுக்கு முன்னேறி விட்டிருப்பீர்கள். அது போதுமே!

ஒருவருக்கு உங்களிடமிருந்து பெரும் தொகை பண உதவி தேவைப்படுகிறது. உங்களால் அவரது கோரிக்கையை நிறைவேற்ற இயலவில்லை. உறவு முறிவதற்கு வேறு காரணம் வேண்டா!

நீங்கள் நியாயத்திற்கு புறம்பாக நடப்பவரல்ல. ஆனால் ஒருவர் சட்டத்திற்கு புறம்பாக உங்களிடம் ஒரு உதவியை நாடுகின்றார். நீங்கள் மறுப்பதை உங்கள் தவறாகவே அவர் கருதுவர். கௌரவமான உங்கள் குடும்பத்துடன் விவாக பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள ஒருவருக்கு விருப்பம். உங்களுக்கு அவர் விருப்பத்தை நிறைவேற்றும் படியான சந்தர்ப்ப சூழ்நிலை இல்லை. உறவே அறுந்து விடுமளவுக்கு பகை உண்டாகும்.

சரி, இனி உங்கள் எதிரிகளை நீங்கள் வெற்றி கொள்ள கடைப்பிடிக்கக் கூடிய உத்திகள் பற்றி ஆராய்வோம்.

'துஷ்டனைக்கண்டால் தூர விலகு' என்று எம் மத்தியில் ஒரு பழ மொழி உண்டு. எதிரியை வெல்வதற்கு மிக மிக சிறந்த வழி இதுவேயாகும்! எதிரி இயன்றவரை மறைந்திருந்தே செயல்பட முனைவான். அவனை நாம் இனம் கண்டு விட்டதை எவர் வாயிலாகவாவது அவனுக்கு தெரிவிக்க வேண்டும்.



(வி.என்.சந்திரகாந்தி)

எம்மைப்பற்றிய எந்த செய்தியும் அவனுக்குப் போகாதபடி தடுத்து விட வேண்டும்.

எம்மிலும் எமது முன்னேற்றத்திலும் ஆர்வமுள்ளவர்களுக்கு எமது எதிரிகள் யார் யார், என்ன காரணத்திற்காக அவர்கள் எமக்கு எதிராக திரும்பினர் என்பதை முற்கூட்டியே தெளிவுபடுத்தி விட வேண்டும்.

எதிரிகள் அடாவடித்தனம் புரியுமளவுக்கு வளர்ந்து விட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக எச்சரிக்கலாம். அதற்கும் பணியாவிட்டால் சட்ட நடவடிக்கையை முன்னெடுத்தல் எந்த வகையிலும் தவறாகாது!

இவை யாவற்றுக்கும் மேலாக நீங்கள் பயனடையக் கூடிய ஒரு முக்கிய தகவலை தருகின்றேன். உங்கள் எதிரிக்கு பல நண்பர்கள் இருக்கலாம். அவர்களிலொருவராவது உங்களுடனும் பழகிக் கொண்டிருக்கிறாரென்றால் அவர் பற்றி மிக மிக அவதானத்துடன் இருங்கள். எதிரிக்கு எதிரி உங்கள் நண்பனாக இருக்கக்கூடும். ஆனால் எதிரிக்கு நண்பன் உங்கள் நண்பனாக இருக்கமுடியாதல்லவா?

நான் பண்டாரவளை பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் பணிமனையில் கடமைபுரிந்து கொண்டிருந்த போது பாலசுந்தரம் என்பவர் நிர்வாக உத்தியோகத்தராக இருந்தார். அவரது வயதிற்கேற்ப அனைவரையும் தனது பிள்ளைகளாக கருதி அன்பு செலுத்தும் இயல்பினர்.

சுசாந்திக்கா என்ற இளம் யுவதி அவர் மேல் அன்பு பாராட்டி நடந்து கொண்டிருந்தாள். அவளது விருப்ப பிரகாரம் அவளது ஊருக்கு இடமாற்றம் பெற அவர் உதவி செய்தார். இடமாற்ற கட்டளையும் வந்து விட்டது. அவளது விடுதியில் புதிதாக இரு இளைஞர்கள் வருகை தந்திருந்தார்கள். அவர்களை தனது அண்ணன்மார் என அறிமுகம் செய்தாள்.

அன்றைய தினம் நிர்வாக உத்தியோகத்தர் தனது மதிய உணவுக்காக 'ஹோட்டல்' ஒன்றை நோக்கி நடந்து சென்று கொண்டிருந்த போது சுசாந்திக்கா அவர் பின்னால் ஓடி வந்து அவரது கையில் ஒரு பண நோட்டை திணித்து விட்டாள்.

அவளை தொடர்ந்து வந்த இளைஞர்களில் ஒருவன் அவரது கையை கெட்டியாகப் பிடித்து பண நோட்டை வாங்கிக்கொண்டான். அந்த தாளில் இருந்த இலக்கம் அவர்களிடமிருந்த இல்க்கத்துடன் ஒத்துப்போவதை அவருக்கு உறுதி செய்த பின் அவருக்கு விலங்கு மாட்டி கைது செய்தார்கள். அவர்கள் இலஞ்ச ஊழல் அதிகாரிகள் என்று பின்னர் தெரிய வந்தது!

# குறுக்கெழுத்து புதிர் 017

முடிவுத் திகதி : 18.07.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 அ | | | | |
| | ■ | 3 | | | 17 | | | ■ |
| 4 | 18 | | ■ | 5 | ப | | | 19 |
| 6 | | 20 | | 7 | | | ■ | |
| 8 | | | ■ | | ■ | 9 | | |
| ■ | | வா | ■ | 10 | | | ■ | |
| 11 | | 12 | | தா | 21 | 13 | | 22 |
| 14 | ண | | | ■ | | ■ | | |
| 15 | | | ■ | ■ | 16 | | | |

## மேலிருந்து கீழாக

1. உறுதியைக் குறிக்கும்
3. ஏமாறியவர்கள் உண்பதாகச் சொல்லப்படும் உணவு
5. பாம்பின் ஒத்தசொல்
9. தீமை நடந்தால் எண்ணத்தில் தோன்றுவது
11. பின்புறத்தை ஆட்டி நடக்கும் பறவை - குழம்பியுள்ளது
12. மனைவியைக் குறிக்கும் சொல்
17. இனிய முடிவு
18. காற்றில் வாழும் கந்தர்வர்கள்
19. மனவுறுதி - கீழிருந்து மேலாக
20. வாழ்க்கையைக் கொண்டு நடத்த துணையாயிருப்பது
21. மீனைக் குறிக்கும் சொல்
22. வழிப்போக்கர் தங்குவது

## இடமிருந்து வலமாக

1. நெற்றியில் இடுவது
2. அற்புத விளக்கை வைத்திருப்பர்
3. பாண்டவரில் மூன்றாமவன்
4. பெண் மீது கொண்ட ஆசை
5. குற்றச்செயல்
6. தளர்ச்சியின் போது முகம் வெளிக்காட்டுவது- குழம்பியுள்ளது
7. தேவலோகப் பெண் 8. வஞ்சகம் - குழம்பியுள்ளது
9. கண்ணமிடுவது
10. தவமிருந்து பெறுவது - வலமிருந்து இடமாக
11. பாட்டியின் கணவன் - குழம்பியுள்ளது
12. மட்டக்களப்பிலுள்ள பிரசித்தமான மலைக்கோவில்
13. மதர்ப்பான பெண்- வலமிருந்து இடமாக
14. மனிதனைத் தோற்றுவித்த மிருகம்
15. இராசிகளில் ஒன்று 16. மரணவீட்டில் இடிப்பது

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :
மலைமுரசு. இல - 159அ,
கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50

## குறுக்கெழுத்து புதிர் 016 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 வ | ண் | ணா | த் | 18 தி | ■ | 2 அ | 12 ல | 19 கு |
| 3 ரு | வா | ண் | டா | க் | ■ | ஜி | ■ | ச |
| ட | மா | ர | ம் | 4 வி | ப | த் | து | ன் |
| ம் | ■ | ■ | ■ | 5 ஜ | ன | 13 க | ரா | ஜ் |
| ■ | 6 ர் | ன | வ | ய | ■ | ப் | ■ | ■ |
| 7 ஆ | ல | ம | ர | ம் | ■ | 8 பு | 14 ணா | னை |
| 9 வா | னோ | ட | ம் | 15 கா | ற் | றா | லை | ■ |
| 10 ர | ம் | ப | ம் | ற் | ■ | 11 ளை | து | 16 மா |
| ம் | ■ | 17 க | ன் | று | ■ | ■ | ன் | சு |

# தேசிய SMS செய்திகள்

- **போலி நாணயத் தாள்களுடன் ஐவர்**

300 போலி 5000 ரூபா நாணயத்தாள்களை வைத்திருந்த ஐவர் வெள்ளவத்தை பகுதியில் குற்றப்புலனாய்வுத் திணைக்கள உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

- **குடிநீர் தட்டுப்பாடு**

போரதீவுப்பற்று பிரதேசத்தில் பல கிராமங்களில் கடும் வரட்சி நிலவுகின்றமையால் பொது மக்கள் தமது அன்றாட தேவைக்கான நீரைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக போரதீவுப்பற்று பிரதேச சபை செயலாளர் சீ.குபேரன் தெரிவித்தார்.

- **அரசு தடயங்கள் சேகரிப்பில்**

பொதுபலசேனாவிற்கு நாம் பயப்படவில்லை. அதனை தடை செய்யவும் பின் நிற்கமாட்டோம். அதற்கான தடயங்களை அரசு ஆராய்ந்து வருவதாக ஆளும் தரப்பு எம்.பி. ஏ.எச்.எ.எம். அஸ்வர் வியாழனன்று சபையில் தெரிவித்தார்.

- **தடுப்பிலிருந்தவர் வயிற்றைக் கிழித்தாரா!**

யுவதி ஒருவரின் தங்கச் சங்கிலியை அறுத்த குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டு அளுத்கம பொலிஸ் விளக்கமறியலில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சந்தேக நபரே நேற்று தனது வயிற்றை ரியூப் லைட்டினால் கிழித்துள்ளார்.

- **நுளம்புப் பொறி - சிக்குமா நுளம்பு!**

டெங்கு மற்றும் நுளம்புகளால் பரவும் நோய்கள் அதிகரித்திருக்கின்ற நிலையில் நுளம்பைக் கட்டுப்படுத்தும் வகையில் நுளம்புப் பொறி ஒன்றை மட்டக்களப்பு பழுகாமத்தைச் சேர்ந்த சேமசூரியம் திருமாறன் கண்டுபிடித்துள்ளார்.

- **ஊவா மாகாண சபை கலைப்பு**

ஊவா மாகாண சபை 11.07.2014 நள்ளிரவுடன் கலைக்கப்படவுள்ளதாக ஊவா மாகாண சபை முதலமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார்.

- **த.தே.கூ வின் சதித்திட்டமே**

சர்வதேச விசாரணைக்குத் தேவையான மேலதிக ஆதாரங்களை சேகரிக்கும் நோக்கிலேயே தென்னாபிரிக்க பிரதிநிதிகள் குழு இலங்கை வந்தனர். இவை அனைத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சதித்திட்டம் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர குற்றம் சுமத்தியுள்ளார்.

- **மலையகத்துக்கு 3000 ஆசிரியர்கள் நியமனம்**

மலையக பெருந்தோட்டப் பிரதேசங்களை உள்ளடக்கிய வகையில் வழங்கப்படவுள்ள மூவாயிரம் ஆசிரிய நியமனங்களைப் பெற்றுக்கொள்ளும் பயனாளிகளை தெளிவுபடுத்தும் விசேட செயலமர்வு ஒன்று இன்று ஊவா மாகாண சபை கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

- **ஹஜ் யாத்திரிகர்களுக்கு கோட்டா மறுப்பு**

சவுதிக்கு பயணம் செய்யும் ஹஜ் யாத்திரிகர்கள் தொடர்பில் தமது நிறுவனத்துக்கு வழங்கும் கோட்டா முறையில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக செரண்டிப் ஹஜ் உம்ரா சங்கம் தெரிவித்துள்ளது. இதன்படி எதிர்வரும் 14ஆம் திகதி வரை எந்தவொரு ஹஜ் யாத்திரிகர்கள் சங்கத்திற்கும் கோட்டா வழங்க வேண்டாம் என பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

- **ராவுப் ஹக்கமுக்கு எதிராக ஜா.ஹெ.உ போர்க்கொடி**

அளுத்கம மற்றும் பேருவளை பிரதேசங்களில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பில், சிங்கள பௌத்த மக்களை சர்வதேச ரீதியில் அவமானத்திற்கு உள்ளாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டவர்களில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் பிரதான நபர் என ஜாதிக ஹெல உறுமய குற்றஞ்சாட்டியுள்ளது.

- **முறைப்பாடு செய்ய புதிய திட்டம்**

தனியார் பஸ் வண்டிகள் தொடர்பில் முறைப்பாடு செய்வதாயின் 071 6550000 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக முறையிட முடியும் என தனியார் போக்குவரத்து சபைகள் அமைச்சு அறிவித்துள்ளது. .

- **இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக நடவடிக்கை**

ஐ.எஸ்.ஐ. அமைப்பால் பயிற்சி பெற்ற இலங்கைத் தமிழர்கள் தமிழகத்திற்குள் அதிக அளவில் ஊடுருவியுள்ளனர். இந்த விவகாரத்தைக் கையாள கடுமையான நடவடிக்கைகள் எடுக்க தமிழக அரசுக்கு உத்தரவிடுமாறு இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியை அவரது மாளிகையில் சுப்பிரமணியன் சுவாமி நேற்று நேரில் சந்தித்து கலந்துரையாடிய போது கேட்டுக் கொண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

1. பின்வரும் இலை வகைகளிடையே எண்ணெய் பெற உதவும் இலைவகை எது?
   1. மிளகு இலை 2. ராபு இலை 3. கறுவா இலை

2. பௌத்த மதத்தினர் புனித மரமாக கருதி வழிபடும் வெள்ளரசுமரம் காணப்படும் புராதன நகரம் எது?
   1. மிகுந்தலை 2. தம்புள்ள 3. கண்டி

3. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டி, சைக்கிள் ரியூப் போன்ற பொருட்களை கொள்வனவு செய்யும் போது, அவற்றின் தரத்தை எவ்வாறு அறியலாம்?
   1. ISO சான்றிதழ் 2. ISBN சான்றிதழ் 3. SLS சான்றிதழ்

4. மனிதருக்கும், பயிருக்கும் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை விரட்டுவதற்கு கிராமப் புறங்களில் பயன்படுத்தப்படும் தாவரம் எது?
   1. ஆமணக்கு 2. வேம்பு 3. கீழ்க்காய் நெல்லி

5. உணவு உண்ணும் வேளை கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார பழக்கவழக்கம் எது?
   1. வாயிலிருந்து சத்தம் எழாதவாறு உண்ணுதல்
   2. உடன் உணவு வகைகளை உண்ணுதல்
   3. உணவை மெல்லாது விரைவாக விழுங்குதல்.

6. "சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது" என்பதன் கருத்து என்ன?
   1. சூடு அதிகமுள்ள இடங்களை பூனை விரும்புவதில்லை
   2. எதையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும்
   3. அனுபவம் ஆபத்து வராமல் தடுக்கும்.

7. இலங்கையின் குருநாகல் மாவட்டத்தில் அதிகளவு கோதுமை பயிரிடப்படுவதால், கோதுமை மாவின் விலை குறைவடையும். இக்கூற்று பிழையானது இதற்குக் காரணம்?
   1. கோதுமை மாவின் விலை அதிகரித்துச் செல்லும்
   2. கோதுமை மாவின் விலையை குறைக்க முடியாது
   3. இலங்கையில் கோதுமையை பயிரிடமுடியாது.

8.
உயிர்கள் தூங்கும் இரவில்
உலகை காவல் காக்க
உயர்ந்த வானில் தோன்றி
உலவும் விடியும் வரை

இப்பாடலில் எதைப்பற்றி விவரிக்கப்படுகிறது?
   1. சூரியன் 2. சந்திரன் 3. இரவு

9. புத்தகமொன்றில் எப்போதும் இருப்பவை
   1. எழுத்து, சொற்கள், பக்கம் 2. எழுத்து, இலக்கம், படம்
   3. எழுத்து, பக்கம், கருத்து

10. "எனது கிராமத்திலுள்ள அனைவரும் மிக உயரமானவர்கள். விமலா உயரமானவள். எனின், விமலா எனது கிராமத்தைச் சேர்ந்தவள்" என்ற இக்கூற்று பற்றி யாது கூறலாம்?
   1. உண்மை 2. பொய் 3. கூறமுடியாது

11. இலங்கையில் அண்மைக் காலமாக பொருட்களின் விலை அதிகரித்து வருகின்றது. இதற்குக் காரணம்?
   1. எரிபொருட்களின் விலை அதிகரித்தமை
   2. பொருட்களின் இறக்குமதி அதிகரித்தமை
   3. பொருட்களின் கேள்வி அதிகரித்தமை

12. தமிழ் இலக்கியம் தொடர்பான வினாக்களுக்கு விடையளிக்கும் போது முதலாவதாக செய்யவேண்டியது?
   1. கேட்கப்பட்ட வினாக்களுக்கு பாடலைத் தொடர்பு படுத்தி விடை எழுதுதல்
   2. இலக்கியப் பாடலை நன்றாக வாசித்து விளங்கிக் கொள்ளல்
   3. வினாக்களை நன்றாக வாசித்து விளங்கிக் கொள்ளல்.

13. "சிறு வயதில் கற்கும் கல்வியானது மனதில் நன்றாகப் பதியும்." இக்கருத்தைத் தரும் பழமொழி எது?
   1. விளையும் பயிரை முளையிலே தெரியும்
   2. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்
   3. இளமையிற் கல்வி சிலையிலெழுத்து

நான்கு மாணவர்கள் பரீட்சையொன்றில் பெற்ற புள்ளிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

மாலா, விமலாவை விட 15 புள்ளிகளை கூடுதலாக பெற்றாள். எனினும் சர்மிளாவை விட 15 புள்ளிகள் குறைவாகவும் பெற்றாள். கலா, சர்மிளாவை விட 25 புள்ளிகள் குறைவாகப் பெற்றாள், விமலா பெற்ற புள்ளிகள் 60 எனில்,

14. கலா பெற்ற புள்ளிகள் எத்தனை?
   1. 60 2. 65 3. 75

15. ஆகக் கூடுதலாக புள்ளிகள் பெற்ற மாணவி யார்?
   1. சர்மிளா 2. கலா 3. விமலா

16. ஒரு சதுர வடிவான காணியின் சுற்றளவு 240மீ ஆகும். இக்காணியின் ஒரு பக்க நீளம் எவ்வளவு?
   1. 120மீ 2. 90மீ 3. 60 மீ



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# பலமும் பலவீனமும்

குட்டிக் கதை

சிங்கமும் கழுதைப்புலியும் பசுவைப் பிடித்து வைத்திருந்தன. ஒரு நாள் சிங்கம் பசுவைக் கொன்றது. கழுதைப்புலி தன் குட்டியை சிங்கத்திடம் அனுப்பி தன் பங்கைக்


கேட்டது. கழுதைப்புலியின் பங்காக பசுவின் குடலை மட்டும் கொடுத்து அனுப்பியது சிங்கம்.

கழுதைப் புலியோ, "நீ ஏன் குடலைக் கொண்டு வந்தாய்? அரைவாசிப் பங்குதானே நமக்கு உரியது!?" என்று கேட்டது.

குட்டி கழுதைப்புலி சொல்லியது: "நான் சின்னப்பயல். பெரியவர்கள் கொடுப்பதைத்தான் கொண்டு வர முடியும். நான் எப்படி சிங்கத்தோடு விவாதிக்க முடியும்".

அதைக்கேட்டு கோபமான கழுதைப்புலி அந்தக் குடலோடு சிங்கத்தைப் பார்க்கப் போனது. சிங்கம் உணவை உண்டு குகைக்குள் ஓய்வெடுத்துக் கோண்டிருந்தது. கழுதைப்புலி வந்ததைக் கண்டு கண்களை அச்சமூட்டும் வகையில் வைத்திருந்தது. "ஏன் இங்கே வந்தாய்?" - கர்ஜித்தபடி சிங்கம் கேட்டது.

பசுவில் பாதி கேட்க வந்த கழுதைப்புலி தற்போது தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டு பேசியது: "ராஜ சிங்கமே! நீங்கள் குடல் அனுப்பியதற்கு மிக்க நன்றி. ஆனால் அதனை உங்களிடமே சேர்க்க முடிவு செய்து விட்டோம்".




குடலை சிங்கத்திடம் கொடுத்து விட்டு திரும்பிய கழுதைப்புலியிடம் குட்டி கேட்டது: "பசுவில் பாதி கேட்கப்போன நீங்கள் குடலையும் கொடுத்து விட்டு வருகிறீர்களே?"

"மகனே! சிங்கம் மிகக் கொடூரமாக இருந்தது. அதைக்கண்டு நடுங்கி விட்டேன். எனவே எனது பங்கையும் கொடுத்துவிட்டுப் பாராட்டி விட்டு வந்தேன். எல்லாம் நன்மைக்காக" என்றது தாய் கழுதைப்புலி.

**- நம்மை விட வலிமையானவர்களைக் கோபப்படுத்துவதை விட அவர்களை சாந்தப்படுத்துவதே பாதுகாப்பானது. -**

இவ்வுருவில் யானைக்கு எத்தனை கால்கள் காணப்படுகின்றன?




## சிந்திக்க .. ..

**விதைத்துக் கொண்டேயிரு,**
**முளைத்தால் மரம் :**
**இல்லையேல் உரம்!!!**

## என் பொம்முகுட்டிக்கு

- நாகூர் கனி -

அல்லி இதழ் விரித்து
அன்பு தங்கை சிரித்திடுவாள்
அண்ணன் என்வருகை கண்டு
அவள் உள்ளமெல்லாம் பூரித்திடுவாள்... !

பஞ்சு விரலாலே பிஞ்சவள்
என்தலையில் செல்லமாய் குட்டிடுவாள்
கொஞ்சி விளையாடிட குழந்தையவள்
பூங்காவுக்கு கூட்டிச்செல்ல
அழைத்திடுவாள்... !

கடைக்குச்சென்று மிட்டாய் வாங்க
சில்லறை காசும் கேட்டிடுவாள்
அதைவாங்கி தின்ற மறுகணமே
மீண்டும் வேண்டுமென்று அடம்பிடிப்பாள்... !

மழலையவள் கையில் பொம்மையோடு
அன்பாக எப்பொழுதும் விளையாடிடுவாள்
அவளே குழந்தை அவள்பொம்மைக்கு
தாலாட்டு ஒன்றைப் பாடிடுவாள்... !

என் கையைப் பிடித்து
ஊரு சுற்றி மகிழ்ந்திடுவாள்
செல்லமாய் கன்னத்தில் முத்தங்களிட்டே
மொத்தக் காரியத்தையும் முடித்திடுவாள்...!

# சிறுவர் முரசு



## Grammar

We use the present simple to talk about things in general.
Eg: I usually go away at weekends.
Nurses look after patients in hospitals.

We use Do/ Does to make questions and negative sentences.
Eg : Where do you come from?
He doesn't do anything to help me.

Ex: - 1. I never ................. coffee.
2. My parents ............. in a very small flat.
3. I .......... the piano but I .............. (not/ play) very well.
4. Rice ........... (grow) in Britain.
5. I won't tell anybody What you said. ................... (promise)

Your friend's father met an accident yesterday and admitted in General hospital.
**Write a note to your friend who is in Jaffna to say.**
What happend to him / When / He needs O+ blood immediately / If can collect it from Jaffna. (25 - 35)

## நற் பழக்கங்கள்

நீங்கள் ஒரு பொய் சொன்னால், குழந்தைகளும் பொய் சொல்லத் தொடங்கும். எனவே அவர்களுக்கு முன் கவனமாக இருங்கள். முடிந்த அளவு பொய் பேசாமல் இருப்பதுதான் நல்லது. இல்லாவிடில் குழந்தைகள் மற்றொரு பொய் சொல்லுமளவிற்கு சூழ்நிலைகளை ஏற்படுத்தாதீர்கள்.



குழந்தைகளுக்கு விருந்தினரை வரவேற்கவும் அவர்களோடு நன்கு பழகவும் கற்றுக் கொடுக்கவும். விருந்தினரைப் பார்த்ததும், வணக்கம் சொல்லும் பழக்கம் வர வேண்டும்.

உங்களை பிறர் எப்படி நடத்த வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அதே மாதிரி நீங்கள் பிறரை நடத்துங்கள். இத்தகைய கருத்தை பெற்றோர் தம் குழந்தைகளுக்கு கற்றுத் தர வேண்டும். பிறர் விரும்பத்தக்க வகையிலும், பண்பாடு உள்ள வகையிலும் பிறரிடம் நடந்துகொள்ள கற்றுத்தர வேண்டும். நாகரிகமான நடத்தை, பெருமையும் புகழும் தரும். நன்னடத்தை இல்லாவிடில் வேண்டா விளைவுகள் வரும். ஒவ்வொரு குழந்தையும் தான் வளரும்போது சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்றவாறு வளர்கிறார்கள். குழந்தைகளுக்கு நல்ல ஆடை அணியும் பழக்கத்தை சொல்லித் தர வேண்டும். ஆடை மனிதனை முழு மனிதன் ஆக்குகிறது. குழந்தைகளுக்கு மேற்கூறிய நல்லொழுக்கங்களை எப்படிப் பெறுவது என்பது தெரியாமல் இருக்கலாம். இவற்றை தெரிவிக்க வேண்டியது பெற்றோரின் கடமை.

ஒரு குழந்தையையும் மற்றொரு குழந்தையையும் வித்தியாசப்படுத்திப் பார்க்காதீர்கள்.

தொடரும்.. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

1. மாணவன் ஒருவன் 39 தீக்குச்சிகளைப் பயன்படுத்தி ஒழுங்கான ஐங்கோணிகளையும் ஒழுங்கான அறுகோணிகளையும் அமைத்தான். அவன் அமைத்த ஒழுங்கான பல்கோணிகளின் எண்ணிக்கை 7 ஆகும்.

1. அம்மாணவன் அமைத்த ஐங்கோணிகளை x எனக் கொண்டு ஓர் எளிய சமன்பாட்டை அமைக்க.

2. எளிய சமன்பாட்டை தீர்ப்பதன் மூலம் அவன் அமைத்த பல்கோணிகளின் எண்ணிக்கையை தனித்தனியே காண்க.

2. A, B என்னும் நகரங்களுக்கிடையிலான தூரம் 210கி.மீ ஆகும். A என்னும் நகரத்தில் இருந்து பேருந்து ஒன்று 30Km/h கதியில் நகரம் B ஐ நோக்கியும், B என்னும் நகரத்திலிருந்து பேருந்து ஒன்று 40Km/h கதியில் நகரம் A ஐ நோக்கியும் ஒரே நேரத்தில் பிரயாணத்தை ஆரம்பிக்கின்றது.


1. பிரயாணம் ஆரம்பித்து 1 மணித்தியாலத்தில் அவ்விரு பேருந்துகளுக்கிடையிலான தூரம் எத்தனை Km?

2. A என்னும் நகரத்திலிருந்து x Km தூரத்தில் இரு பேருந்துகளும் ஒன்றையொன்று சந்திக்கின்றது. இரு பேருந்துகளும் சந்திக்குமிடத்திலிருந்து நகரம் B இற்குள்ள தூரத்திற்கான கோவையை எழுதுக.

3. இரு பேருந்துகளும் ஒன்றையொன்று சந்திக்கும் போது இயங்கிய நேரங்களிற்கான கோவையை x இன் சார்பில் தருக?
A யிலிருந்து புறப்பட்ட பேருந்து இயங்கிய நேரம் - $T_A$
B யிலிருந்து புறப்பட்ட பேருந்து இயங்கிய நேரம் - $T_B$ எனக் கொள்க.

4. $T_A$, $T_B$ ஆகிய நேரங்களிற்கிடையிலான தொடர்பை பயன்படுத்தி தூரம் x ஐயும் இரு பேருந்துகளும் ஒன்றையொன்று சந்திக்க எடுக்கும் நேரத்தையும் காண்க?

3. உருவைப் பயன்படுத்தி $BD^2 - BC^2 = AD^2 - AC^2$ எனக் காட்டுக.



4. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு செவ்வகத்தினதும் அகலம் மாறாத 3செ.மீ உம் அதன் நீளம் 4செ.மீ, 5செ.மீ, 6செ.மீ என அதிகரித்துக் கொண்டு செல்கின்றது.

1. இச்செவ்வகங்களின் பரப்பளவுகளை ஒழுங்காக எழுதும் போது எவ்வகையான விருத்தி பெறப்படும்?
2. இதில் பதினோராவது செவ்வகத்தின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர் எனக் காண்க.
3. $36cm^2$ பரப்பளவுள்ள செவ்வகம் எத்தனையாவதாக காணப்படும்?
4. முதல் 10 செவ்வகங்களின் பரப்பளவுகளின் கூட்டுத்தொகையைக் காண்க.


5. $-6xy + 8xy^2$ என்பதை மறைப் பொதுக்காரணியாக வேறாக்குக.

6. சமன்பாடு $3x + y = 2$ இனால் காட்டப்படும் நேர்கோட்டின் படித்திறனையும், வெட்டுத்துண்டையும் காண்க.

**திருமலையின் பிரபல ஆசிரியர் T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
Personal Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
G.C.E (O/L) பிரதி சனி தோறும் பரீட்சைக்குச் சகல மாணவர்களும் பங்குபெற்றலாம்.

## பாடம் : விஞ்ஞானம்

1. மின் அழுத்த வேறுபாட்டிற்கும் மின் ஓட்டத்திற்கும் இடையே வரைபு ஒன்று வரையும் போது பெறப்படுவது யாது?




2. தெசுத்தொசுத்தெரோன் ஓமோனின் தொழில் யாது?
   1. உடலின்வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல்
   2. குருதிக் குளுக்கோசு மட்டத்தை மாறாது பேணுதல்
   3. பெண்களில் துணைப்பால் இயல்புகளைக் கட்டுப்படுத்துதல்
   4. ஆண்களில் துணைப்பால் இயல்புகளைக் கட்டுப்படுத்துதல்

3. கடத்தியினூடாக ஆடலோட்டம் பாயுமெனின், இலத்திரன் பாய்ச்சல் பற்றிய பின்வரும் கூற்றுக்களிடையே சரியானது
   1. இரு பக்கங்களுக்கும் பாய்தல் 2. ஒரு பக்கத்திற்கு பாய்தல்
   3. பாயும் திசை நேரத்துடன் மாறுதல்
   4. பாயும் திசை பற்றிக் கூற முடியாது.

4. கழித்தல் என்பதன் வரைவிலக்கணம்?
   1. அனுசேபத் தொழிற்பாடுகள் மூலம் தோன்றும் கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதாகும்.
   2. சமிபாடடைந்த உணவை வெளியேற்றுவதாகும்.
   3. நீரையும் உப்புக்களையும் வெளியேற்றுவதாகும்.
   4. நீரையும் காபனீரொட்சைட்டையும் வெளியேற்றுவதாகும்.

5. சிறிது காலம் வரை வளியில் திறந்து வைக்கப்பட்டால் பின்வரும் எந்த உலோகத்தின் மீது பச்சை நிறமான பொட்டுக்கள் தோன்றக்கூடும்?
   1. செம்பு 2. வெள்ளியம் 3. அலுமினியம் 4. இரும்பு

6. ஒட்சிசன் வாயுவைக் கண்டுபிடித்த விஞ்ஞானி யார்?
   1. போயில் 2. டோல்ரன் 3. லவொய்சியர் 4. பர்சீலியஸ்

7. 8ப ஒட்சிசனிலுள்ள மூலக்கூறுகளின் எண்ணிக்கையைச் சரியாகக் குறிப்பது எது?
   1. $3.011 \times 10^{23}$ 2. $6.023 \times 10^{23}$ 3. $2 \times 6.023 \times 10^{23}$ 4. $½ \times 6.023 \times 10^{23}$

8. 100ே விசையைப் பிரயோகித்து பொருள் ஒன்றை 5அ தூரம் அசைத்தால் செய்த வேலை என்ன?
   1. 500Kg 2. 100J 3. 500J 4. 20J

9. மின்காந்தம் பயன்படுத்தும் சந்தர்ப்பம்
   1. நுண்மின்னுடைப்பான்களில் 2. தொலைபேசி செவிபன்னியில்
   3. மின் மணியில் 4. மேற்கூறிய மூன்றும் சரியானவை

10. கைத்தொழில் ரீதியில் இரும்பைப் பரித்தெடுப்பதற்கு இரும்புத் தாதைப் பெறுவதற்கு உகந்த இரும்புத் தாது படிவில் இருக்க வேண்டிய இயல்பாக அமையாதது?
    1. நெடுங்காலத்திற்கு அதிக அளவில் பெறத்தக்கதாக இருத்தல்.
    2. எளிதாக அடையக் கூடிய இடத்தில் இருத்தல்
    3. போதிய தூய்மையுடன் இருத்தல்.
    4. கைத்தொழில் நகரத்தை அண்டியிருத்தல்.

## பாடம் : வரலாறு

1. இலங்கையினல் ஆங்கிலேயர் ஆட்சினால் ஏற்பட்ட விளைவு அல்லாதது
   1. பெருந்தோட்டபயிர்ச் செய்கை அறிமுகம்
   2. ஏற்றுமதி இறக்குமதி பொருளாதார கோலம் உருவாக்கம்
   3. மத்தியதர வர்த்தகம் உருவாக்கம்
   4. பரீஷ் பாடசாலை(கோவில்பற்று)தோற்றம்

2. இந்திய சுகந்திர போராட்டத்தில் பஞ்சாப் சிங்கம் என வர்ணிக்கப்படும் தேசிய வீரர்
   1. லாலா லஜ்பதிராய் 2. தாதாபாய் நபுரோஜி
   3. பாலகங்காதரதிலகர் 4. சுபாஸ் சந்திரபோஸ்

3. இந்தியாவில் முஸ்லீம்களுக்கு தனிநாடு வேண்டும் என முதன்முதலில் பாடிய கவிஞன்
   1. அல்லாமா இக்பால் 2. M.C. சித்திலெப்பை
   3. தாதாபாஸ் நபுரோஜி 4. அலி ஜின்னா

4. இனவாதி பிரதி நிதித்துவம் அறிமுகம், கட்டாய இராஜகாரிய முறை ஒழிப்பு, அரசு வர்த்த ஏகபோக உரிமை நீக்கல். மேற்படி விடயங்களுடன் தொடர்புடைய யாப்பு
   1. டொனமூர் 2. கோல்புறுக் கமரன் 3. மனிங் 4. சோல்பரி

5. கொழும்பை மையமாகக் கொண்டு செயற்பட்ட மிசனரி இயக்கம்
   1. பட்டிஸ்ட் 2. வெஸ்லியன் 3. அமெரிக்கன் 4. லண்டன்

6. பின்வரும் கண்டு பிடிப்பாளர்களின் தொகுதியில் பொருந்தாதது
   1. மோட்டார் வாகனம்- டெம்லர்
   2. ஆகாய விமானம்-றைட்சகோதரர்கள்
   3. பாதுகாப்பு விளக்கு-ஜோர்ஜ் ஸ்ரீவன்கன்
   4. நீராவி கப்பல்-றொபர்ட் புல்டன்

7. 1818 ஆம் ஆண்டு கிளர்ச்சியை முன்னெடுத்த தலைவர் அல்லாதவர்
   1. ஹெப்பட்டிப்பொல 2. மடுகல்ல 3. வீரபுரன் அப்பு
   4. 2ம் பிலிமத்தலாவ

8. சரசவிசந்தரெஸ, த புடிஸ்ட் என்ற பத்திரிகையின் ஆசிரியர்
   1. ஹென்றி ஸ்ரீல் ஓல்கொட் 2. அநகாரிக தர்மபால
   3. டி.பி ஜாயா 4. M.C.சித்திலெப்பை

9. 1 ஆம் உலகமகாயுத்த காலத்தில் மத்திய ஐரோப்பிய நாடுகளின் நட்பு கூட்டு அணியில் இணைந்து கொண்டு பின் பிரிந்து சென்று முக்கூட்டு நட்பு அணியில் இணைந்து கொண்ட நாடு
   1. சிரியா 2. ஜேர்மனி 3. ஆஸ்திரியா 4. பிரான்ஸ்

10. 1 ஆம் உலகமகாயுத்த கால முடிவில் உலக சமாதானத்தை நிலைநாட்ட உருவாக்கப்பட்ட சர்வதேச சங்கத்தை தோற்றுவிக்க முன்னின்ற தலைவர்
    1. தியோடர் ரூஸ்வெல்ட் 2. பிராங்ளின் ரூஸ்வெல்ட்
    3. ஜோசப் ஸ்டாலின் 4. வூட்டோ வில்சன்

11. சீனா முதலாளித்துவ பாதையில் செல்வதை தடுக்க மாவே சேதுங் முன்னெடுத்த செயல்திட்டம்
    1. முன்னோக்கிய பெரும் பாய்ச்சல்
    2. நீண்ட நடைப் பயணம் 3. கலாசாரப்புரட்சி
    4. கோமின்டாங் படை அமைப்பு



ஆசிரியர் : அகிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எஞ்சிய எண்ணெய் ...

கூட்டுத்தாபனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு அமையப் பயன்படுத்திவருகின்றது. இந்தப் பதினைந்து குதங்களுக்கான ஒப்பந்தங்களும் அண்மையில் மீள உருவாக்கப்பட்ட நிலையிலேயே எஞ்சிய குதங்களையும் பெற்றுக்கொள்ள இந்தியா முயன்றுவருகின்றது.

சீனன்குடா வான்படைத்தளத்தில் சீனாவினால் வான் பராமரிப்புக் கட்டிடத் தொகுதியொன்று நிறுவப்படும் என்று கசிந்துள்ள ஊர்ஜிதமற்ற செய்தியை அடுத்து இந்தியா இந்த எண்ணைக் குதங்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயல்வதாகத் தெரிகின்றது.

எஞ்சிய 84 குதங்களையும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து நிர்வகிக்கும் ஒப்பந்தமொன்றுக்கான முன்மொழிவே தற்போதுவரை பதிலளிக்கப்படாமல் இருப்பதாகத் தெரிகின்றது.

## கடத்தப்பட்ட குழந்தை...

மற்றும் பெண் ஒருவர் உட்பட அன்று காவல் துறையால் கைதாகி தடுப்பிலிடப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே முதல்முறை நீதிமன்றால் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட பின்னரே இத் தாக்குதல் நடைபெற்றதாகக் காவல்துறையால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தெளிவுபடுத்தியிருக்கின்ற வேளையில் தற்போது அவர்களின் குழந்தை கடத்தப்பட்டுள்ளது.

குழந்தையைக் கடத்தியவர்கள் அக்குழந்தையைக் கையில் வைத்திருந்த 15 வயதுச் சிறுமியின் உறவினர்கள் என்பதால் சிறுமி மிகத் தெளிவாக அவர்களை அடையாளம் காட்டக்கூடிய நிலையில் உள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் நடந்த தாக்குதல் தொடர்பான வழக்கு கடந்த 08ம் திகதி நீதிமன்றில் முன்நிலைப்படுத்தப்பட்ட போது அவ்வழக்கிற்குச் செல்ல வேண்டாம் என எதிராளி இவர்களை அச்சுறுத்தியதாகவும் அவ்வெதிராளியும் குழந்தைக் கடத்தலில் சம்பந்தப்பட்டவர் என்றும் உறவினர் தெரிவித்தனர். இவர்கள் கைத்துப்பாக்கியுடன் ஒருமுறை கண்ணாடியை உடைத்து வீட்டிற்குள் புக முயற்சித்தாகவும் இவ்விடயங்கள் அனைத்துமே தெரிந்தும் காவல்துறை நடவடிக்கை எடுக்கத் தயங்குவது ஏன்? எனவும் கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

இதேவேளை இக்கடத்தலில் குறித்த அயலவர்கள் சம்பந்தப்படவில்லை என்றும் இக்கடத்தலுக்கு குற்றஞ்சாட்டப்படும் அயலவர் அன்றை தினம் தனது மகனை பிணையெடுப்பதற்காக கடத்தப்பட்ட நேரத்தில் இருந்தமைக்கு ஆதாரங்கள் உண்டென்றும் தெரிவித்த அயலின் உள்ள பள்ளிவாயல் செயலாளர் குழந்தை கடத்தப்பட்டிருப்பதை நம்பமுடியவில்லை என்றும் குறித்த அயலவரை மேலும் சிக்கலுக்குள்ளாக்கவே அவரது பெயர் சேர்க்கப்படுவதாகத் தெரிவித்தார்.

## கடற்கரைச்சேனைக் சுடலை...

பாவனைக்கு விடுவிப்பது தொடர்பாக எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கூடவுள்ள கிழக்கு மாகாண சபை அமர்வின்போது சபையின் கவனத்திற்கும் கொண்டுவரவுள்ளதாக குறிப்பிட்டார்.

அந்த பகுதியில் மீள்குடியேற்றத்தின் பின்னர் 4 வருடங்களுக்கு மேலாக சம்புக்கழி, கடற்கரைச்சேனை, சந்தோசபுரம் உட்பட ஐந்து கிராமங்களை சேர்ந்த மக்கள் இது தொடர்பாக பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக கூறப்படுகின்றது.

கடற்படை முகாம்க்கு அருகாமையிலுள்ள இந்த மயானம் உயர் பாதுகாப்பு வலயமாக இல்லாதபோதிலும் தற்போது கடற்படையினரின் கட்டுப்பாட்டிலே இருப்பதாக குமாரசாமி நாகேஸ்வரன் தெரிவிக்கிறார்.

இந்த கிராம மக்களை பொறுத்தவரை தற்போது தமது சொந்த நிதியில் கொள்வனவு செய்துள்ள அரை ஏக்கர் காணியிலே இறந்தவர்களின் இறுதிக்கிரியைகளை நடத்துகிறார்கள். அந்த நிலம் கூட அவர்களுக்கு போதுமானதாக இல்லை என்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினரான குமாரசாமி நாகேஸ்வரன் சுட்டிக்காட்டுகின்றார்.

இவ்வியடம் தொடர்பாக கடற்படையின் ஊடகப் பேச்சாளரான கோசல வர்ணகுலசூரிய தெரிவிக்கையில், குறித்த காணி தொடர்பாக ஆராய்ந்த பின்னரே பதில் கூற முடியும். திருகோணமலை துறைமுகத்திற்குரிய நுழைவாயில்களில் துறைமுகத்தின் பாதுகாப்புக்காக கடற்படை நிலை கொண்டுள்ளது. அதுவும் தனியார் காணிகளில் அல்ல. அரச காணிகளிலேயே நிலை கொண்டுள்ளது என தெரிவித்தார்.

## ஊடகவியலாளருக்கு...

குச்சவெளி பிரதேச சபைத் தலைவர் தொலைபேசி மூலம் தனக்கு அச்சுறுத்தல் விடுத்ததாக காவல்துறை முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் செய்தியாளர் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் முன்னாள் தலைவராகவும், தற்போது பொருளாளராகவும் கடமையாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து விசாரணைக்காக கடந்த 10ம் திகதி காவல்துறைக்கு அழைக்கப்பட்ட பிரதேசச சபைத்தலைவர் வருகைதராமல் மறுநாள் காவல்துறைக்கு வருகை தந்ததாகவும் விசாரணைகளின் பின்னர் விடயத்தை நீதிமன்றுக்குச் சமாப்பிக்கும் முடிவைக் காவல்துறை எடுத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இவ்வச்சுறுத்தல் தொடர்பாக எவ்வித நடவடிக்கையை திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் மேற்கொள்ளவுள்ள தென்பதை இன்று நடைபெறவுள்ள ஊடகவியலாளர் சங்கப் பத்தாண்டு நினைவு நாளின் பின்னரே தீர்மானிக்க முடியும் என சங்கத்தின் செய்திகள் தெரிவிக்கின்றன.

## அழியும் அபாயத்தில்....

கடந்தகால தமிழர் குடித்தொகை வளர்ச்சிவீதத்தையும் ஏனைய தரவுகளையும் அடிப்படையாகக்கொண்டு இதனைக் கணிக்க முடிவதாகத் தெரிவித்த அவர் 2008 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வு மதிப்பீட்டின்படி உலகில் 50 நாடுகளில் 75 மில்லியன் தமிழர்கள் பரந்து வாழ்வதாக அறியப்பட்டுள்ளது. ஆயினும் ஒரு இனத்தின் எதிர்காலம் அவர்களின் கருவளத்திலேயே பிரதானமாக தங்கி இருக்கிறது. ஒரு இனம் தன்னைதக்கவைத்துக்கொள்ள வேண்டுமெனின் அவ்வினத்தின் மொத்தகருவள வீதம் 2.1 இலும் அதிகமாக இருக்க வேண்டும். அதாவது சராசரியாக ஒரு பெண் 2 பிள்ளைகளுக்கு மேலாக 2.1 அளவில் பெற்றால் மாத்திரமே அதை மாற்றீடு செய்யும் கருவளவீதம் அதாவது குடித்தொகை குறையாமல் இருக்கும் ஒருநிலை என்று கூறமுடியும்.

ஏனெனில் ஒரு குறிப்பிட்ட இனத்தில் ஒரு சோடி பெற்றோர் 2 பிள்ளைகளுக்கு அதிகமாக பெறுவரெனில் மாத்திரமே இரு பிள்ளைகள் ஆவது இளம்வயதை அடைந்து குடித்தொகையை தக்க வைக்கமுடியும் என்றும் தெரிவித்தார்.

வடகிழக்கில் 89000 பெண்கள் ஆண் துணையை இழந்துள்ளதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. தமிழ்ச் சமூகம் இவர்களுக்கு கோழிவளர்ப்பு முதலான சுயதொழில் வாய்ப்புப் பற்றியே சிந்திக்கிறது. 18 – 40 வயது வரையான பெண்களுக்கு மறுவாழ்வு அழிப்பது பற்றி சமூக சமயத் தலைவர்களோ அரசியல் வாதிகளோ சிந்திப்பதில்லை. இப்பெண்களுக்கான இயற்கையான பாலியல் தேவை பற்றி தமிழ்ச் சமூகம் சிந்திக்க மறுக்கிறது. இப்பெண்கள் மாற்று இனத்தவர்களால் விபசாரத்துக்கு உட்படுத்துவது பற்றி கதைப்பது சமூகத்தின் பொறுப்பற்ற தன்மையே காண்பிக்கிறது என்றும் அவர் ஆதங்கப்பட்டுக்கொண்டார்.

## கடலில் தத்தளிக்கும்.....

அரசாங்கம் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த முற்பட்டதாக கூறப்படுகிறது.

எனினும் இவ்வாறான பேச்சுவார்த்தைக்கேனும் இந்தியா இணங்கவில்லை என்று அவுஸ்திரேலிய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

ஏற்கனவே இந்த படகில் உள்ள அகதிகளை நாடுகடத்துவதற்கு 72 மணித்தியாலத்துக்கு முன்னர் முன்னறிவிப்பு வழங்க வேண்டும் என்று அவுஸ்திரேலிய உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வர்ணத்தில் பர்தா...

ஒன்றை முன்னெடுத்துள்ளது. முஸ்லிம் பெண்கள் கறுப்பாலான பர்தாக்களையும் முழு உடைகளையும் அணிந்திருப்பது ஏனையவர்களுக்கு அச்சத்தை அளிப்பதாலேயே இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாக சிறீலங்கா முஸ்லிம் கவுன்சில் தெரிவித்துள்ளது.

கறுப்பு நிறத்தைத் தவிர்த்து நிறமுடைய முழு ஆடைகளையும் பர்தாக்களையும் அணிவது பெரும்பான்மைச் சமூகத்தின் அச்சத்தைப் போக்கிவிடும் எனவும் அனைவரும் கறுப்புடைகளை அணிந்திருக்கும் போது கோலஉடையணிந்த படையணியொன்றாக முஸ்லிம் பெண்கள் தோற்றமளிப்பதாலேயே இவ்வச்ச உணர்வு மேலிடுகினறது என்றும் தெரிவித்துள்ள முஸ்லிம் கவுன்சில் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள திட்டமானது "கறுப்பு நிற உடைகளைக் கொண்டுவாருங்கள், நாம் வர்ண உடைகளைத் தருகின்றோம்" என்ற தலைப்பில் முன்னெடுக்கப்படுவதாகவும் அறிவித்துள்ளது.

## கையளிக்கப்படுபவரின்....

சார்பில் வண.பிதா வி. யோகேஸ்வரன் மேற்கொண்டுள்ளார். அக் கடிதம் வருமாறு - உங்களது நாட்டில் இருந்து சிறீலங்காவிற்கு நாடுகடத்தப்படும் அகதி அந்தஸ்த்துக் கோரிக்கையாளர்கள் தொடர்பாகக் கடும் கரிசனையை நாம், திருகோணமலைத் தமிழ்ச் சிவில் சமூக அமைப்பானது கொண்டுள்ளது.

பல்வேறு ஊடகச்செய்திகளின் ஊடாக அகதி அந்தஸ்த்துக் கோரிய படகொன்றிலுள்ள 153 கோரிக்கையாளர்களும், மற்றொரு படகிலுள்ள 50 கோரிக்கையாளர்களும் சிறீலங்கா அரசிடம் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இவ்விடயத்தில் நாம் பல்வேறுபட்ட கரிசனைகளைக் கொண்டுள்ளோம்

பல்வேறு ஊடகங்களின் ஊடாக எழுந்த செய்திகளின்பாலும், இவ்விடயம் தொடர்பாக கருத்துக்கூறவேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ள இருநாட்டு அலுவலர்களின் ஆரம்பக்கட்ட மௌனம் மற்றும் மறுதலிப்புக்களாலும் இவ்விடயம் தொடர்பாக மர்மநாடகமொன்று அரங்கேறுவதாக உள்ளது.

இரண்டு நாடுகளும் இவ்விடயத்தைக் கையாளும் விதமானது சர்வதேசச் சட்டங்களை மீறுவதாக இருப்பதுடன், அகதிகள் அல்லது புகலிடக்கோரிக்கையாளர் தொடர்பான உரிமையினையும் மீறுதாக இருக்கின்றதோ? என்ற ஐயப்பாடு எழுந்துள்ளது.

ஊடகச்செய்திகளின் அடிப்படையில் இம்மனிதர்கள் ஏற்கனவே இந்தியாவில் அகதி அந்தஸ்த்துக் கோரியிருந்ததாகவும் அங்கிருந்தே அவர்கள் உங்களது நாடு நோக்கி அகதிகளாக பெயர்ந்துள்ளதாகவும் நாம் அறிந்துகொண்டோம்.

இத்தகவல் உண்மையானால், அவர்கள் தமது பயணத்தை ஆரம்பித்த இந்திய நாட்டுக்குத் திருப்பியனுப்பப்பட வேண்டும். சிலகாலங்களுக்கு முன்னர் இவர்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளவும், உயிர்வாழவும் ஆசைகொண்டே இந்தியாவிற்குச் சென்றிருக்கின்றார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் இன்றும் அவர்கள் சிறீலங்காவின் நிலையானது தற்போதுவரை அவர்கள் பாதுகாப்புடன் வாழ வழியற்றிருப்பதாக எண்ணுவதால் சிறீலங்காவிற்குத் திரும்பிவரும் அச்சத்தையுடையவர்களாக இப்போதும் இருக்கின்றார்கள்.

இந்நாட்டில் போர் மட்டுமே நிறைவுபெற்றுள்ளது என்பதையும் இன்றுவரை சிறுபான்மைச் சமூகங்களின் பிரச்சனைகள் தீரவில்லை என்பதையும் அண்மையில் நடைபெற்று முடிந்த சம்பவங்களின் ஊடாக மேன்மைதகு உயர்ஸ்தானிகர் அவர்கள் அறிந்திருப்பீர்கள் என்பதில் ஐயமில்லை. இந்நாட்டில் வாழும் சிறுபான்மைச் சமூகங்கள் பாதுகாப்பற்ற சூழலிலேயே தற்போதும் வாழ்கின்றன.

இந்நிலையில், தங்களது நாட்டின் பிரதமமந்திரி சிறீலங்காவில் சமாதானம் நிலவுவதாக சொல்லியிருப்பதை மனக்கவலையுடன் நாம் கருத்திற்கொள்கின்றோம். அவருக்கு வழங்கப்படுகின்ற தகவல்கள் சிறீலங்காவில் வாழும் சிறுபான்மைச் சமூகங்கள் எதிர்கொண்டுள்ள உண்மைநிலையினை உணர்த்தப் போதுமானவையாக இல்லை அல்லது தவறானவையாக இருக்கின்றன என்பதையே அவரது கூற்று காட்டியிருக்கின்றது.

மேற்போந்த விடயங்களின் அடிப்படையிலும், தங்களது நாடு அகதிக்கோரிக்கையாளர்களை சிறீலங்கா கடற்படையிடம் கையளிக்க எடுத்துள்ள நடவடிக்கையாலும் நாம் நீதியின்பேரால் தங்களிடம் மிகத் தாழ்மையுடன் வேண்டிநிற்பது என்னவென்றால்-

சிறீலங்கா கடற்படையிடம் கையளிக்கப்படுபவர்களின் பெயர் விபரங்களை உங்களது நாடு வெளியிட வேண்டும்

இவ்வாறு கையளிக்கப்படும் நபர்களின் உறவினர்கள், அவர்கள் இந்தியாவில் இருந்தாலென்ன இலங்கையில் இருந்தாலென்ன, கைதுசெய்து தடுத்துவைத்திருக்கும் நபர்கள் தொடர்பாகத் தகவலைத் தெரிந்துகொள்ளும் உரிமையைப் பெற்றுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

சட்டத்தின் அடிப்படையில், தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்பாடல் தடைகளை எதிர்கொள்ளக் கூடாது.

இவ்வாறு தடுக்கப்பட்டுள்ளவர்களில் சிறுவர்கள் இருப்பாராயின் அவர்களுடைய சிறுவர் உரிமைகள் மீறப்படலாம்.


அவ்வாறே இவ்வணியில் பெண்கள் இருப்பார்களாயின் அவர்கள் இச்சந்தர்ப்பத்தில் கடும் ஆபத்துக்களை எதிர்நோக்க நேரிடும்.

ஆதலால் சிறீலங்கா அரசிடம் கையளிக்கப்படுபவர்களின் பெயர்கள் தங்களது அரசினால் வெளியிடப்பட வேண்டும் என நாம் கோருகின்றோம். இவ்வாறு வெளியிடப்படுமானால் நடுக்கடலில் கைதாகித் திருப்பியனுப்பட்டவர்களின் பேரில் சட்ட உதவிகளை வழங்கும் வாய்ப்பு உருவாகுவதுடன், அவர்களின் உறிவினர்கள் அடையும் மனக்கிலேசத்திற்கு மருந்தாகவும் அமையும் என்பதைத் தங்களது தயவான கவனத்திற்கு அறியத்தருகின்றோம். எனத் முடிகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முஸ்லிம்களின் கடமையான குளிப்பு



பிறகு உடம்புக்குத் தண்ணீர ஊற்றட்டும். அதன் பின்னர் கஸ்தூரி தடவப்பட்ட பஞ்சுத் துண்டு ஒன்றை எடுத்து சுத்தம் செய்து கொள்ளட்டும் என்று சொன்னார்கள். அதற்கு அஸ்மா (ரழி) அவர்கள் 'அதை வைத்து அவள் எவ்வாறு சுத்தம் செய்வாள்? என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் ஸுப்ஹானல்லாஹ், அதனால் சுத்தம் செய்துகொள்ளட்டும் என்று கூறினார்கள்.

உடனே நான் இரத்தம் படிந்த இடத்தில் தடவிக் கொள் என்று பிறர் காதில் விழாதவாறு அதை இரகசியமாகச் சொன்னேன். மேலும் அஸ்மா (ரழி) நபி (ஸல்) அவர்களிடம் பெருந்துடக்கிற்காகக் குளிக்கும் முறை பற்றிக் கேட்டார். அதற்கு நபியவர்கள் தண்ணீர எடுத்து நன்கு சுத்தம் செய்துக் கொள். பிறகு தலைக்குத் தண்ணீர ஊற்றி தலையில் சருமம் நனையும் அள வுக்கு நன்கு தேய்த்துக் கொள். பின்னர் உன் (மேனியின்) மீது தண்ணீர ஊற்று என்றார்கள். (அறிவிப்பர்: ஆயிஷா (ரழி) நூல்: முஸ்லிம்-552)

உங்களில் ஒருவர் தம் மனைவியுடன் உடலுறவு கொண்டு, மறு முறையும் உடலுறவு கொள்ள விரும்பினால், வுழு செய்து கொள்ள வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: அபூ ஸயீத், ஆதாரம்: முஸ்லிம்-308, இப்னுமாஜா-587, நஸாயீ-262)

எங்களில் ஒருவர் குளிப்புக் கடமையான நிலையில் தூங்கலாமா? என்று உமர் (ரழி) நபி (ஸல்) அவர்களிடம் கேட்டபோது, ஆம் வுழூச் செய்து விட்டு தூங்கலாம் என்றார்கள். (அறிவிப்பவர்: உமர் (ரழி), ஆதாரம்: புகாரி-280, முஸ்லிம்-306, நஸாயீ-259)

முற்றும் .. ..

# கடவுளுக்கு இதுவும் வேனும் இன்னமும் வேனும்




வேட்டையாடுவதற்காக அடர்ந்த கானகத்திற்குள் நுழைந்த நான்கு நண்பர்கள்

திசை மாறி நீண்டதூரம் சென்று இரவாகியும் வெளியேற முடியாமல் செய்தவறியாது திகைப்படைந்து தங்களை காத்தருளுமாறு இறவனை வேண்டினர். நேரமோ நள்ளிரவை நெருங்கிக்கொண்டிருக்க பலன் ஏதும் கிடைக்காத நிலையில் மேலும் குழப்பமடைந்த நண்பர்கள் இறைவனை வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்க்கத் தொடங்கினார்கள்.

இவர்களின் தொல்லை பொறுக்க முடியாத நிலையில், வேறு வழியின்றி இறைவன் அவர்கள் முன் தோன்றி அழைத்த காரணத்தினை வினவினார்.

முதலாமவன் இறைவனின் பாதம் தொழுது நான் என் தாய்க்கு ஒரே வாரிசு எனவும் தன்னை தாயாரிடம் சேர்ப்பிக்குமாறு அழுது புலம்பினான். இறைவனும் அவன் விருப்பத்தை நிறைவேற்றினார்.

ஏனைய மூவரும் அதிகமாக அழத்தொடங்கவே அவர்களுக்கும் தான் எவ்வகையில் உதவ வேண்டும் என அன்புடன் வினவினார்.

அதில் இருவர் தங்களுக்கு திருமணமாகி ஒரு சில நாட்களே ஆனதெனவும் நண்பனின் கதையைக் கேட்டு அவர்களை விட்டு வந்து இவ்வாறு மாட்டிக் கொண்டதாகவும் தங்களையும் தத்தமது மனைவியரிடத்தில் சேர்த்து விடுமாறும் வேண்ட அவ்வாறே ஆகட்டும் என இறைவனும் அவர்களை நோக்கி வரமருள அவ்விருவரும் அக்கணமே அங்கிருந்து மறைந்தனர்.

இறுதியாக நின்றவனோ மேலும் அதிகமாக அழ தொடங்கினான். அவனை சமாதனப்படுத்துவது இறைவனுக்கு 'இப்பவே கண்ணக்கட்டுதே' என்பதைப் போல் ஆனது. இறுதியில் அவனை தனது மார்புடன் அணைத்து மகனே கவலை வேண்டாம். நீயும் விரும்பியதைக் கேள் என இறைவன் கனிவுடன் பகன்றார்.

இதனால் ஓரளவு சமாதானமான அவன் தன் கண்ணீரை துடைத்தவாறு இவைனிடம் கூறினான். இறைவா, எனக்கு தனியாயிருக்க பயமா இருக்கு! எனது மூன்று நண்பர்கயைும் மீண்டும் .இங்கு அழைத்து வரவேண்டும் என்றான்.

இறைவனுக்கு வை திஸ் கொல வெறி என தன் தலையில் கைவைத்தார். **ஹா! ஹா! ஹா!**

- அருணன் -




## ஸ்பிரிங் றோல்



**தேவையான பொருட்கள்**

கோதுமை மா - 1 கப், பட்டன் காளான் - 12, பசலைக்கீரை - 1 கட்டு, வேகவைத்த சோளமுத்துக்கள் - அரை கப், சிஸ் துருவல் - கால் கப், பால் - 1 கப், வெண்ணெய் - 1 மே.கரண்டி, சோள மா - ஒன்றரை கப், உப்பு - தேவைக்கு, எண்ணெய் - தேவைக்கு.

**செய்முறை**

கோதுமை மாவுடன் சிறிது உப்பு சேர்த்து, சற்று இறுக்கமாகப் பிசையுங்கள். காளானையும் பசலையையும் பொடியாக நறுக்கிக் கொள்ளுங்கள். பின்னர் வெண்ணெயை உருக்கி, பசலைக்கீரை, காளான் இரண்டையும் சேர்த்து வதக்குங்கள். நன்கு வதங்கியதும், வேகவைத்த சோளம், மிளகுத்தூள், சிஸ் சேருங்கள். அத்துடன், பாலில் சோள மாவைக் கரைத்துச் சேர்த்து நன்கு கிளறுங்கள். இறக்கி ஆறவிடுங்கள். பின் பிசைந்த மாவிலிருந்து சிறிய உருண்டை எடுத்து மெல்லிய சப்பாத்தியாக தட்டுங்கள். காளான் கலவையை ஒரு கரண்டி எடுத்து, ஒரு ஓரத்தில் நீளவாக்கில் வைத்து ஒரு முறை சுருட்டுங்கள். பின், பக்கவாட்டில் இருபுறமும் மடித்து, மீண்டும் சுருட்டி தண்ணீர் தொட்டு ஓரத்தை ஒட்டுங்கள். எண்ணெயைக் காய வைத்து, இரண்டிரண்டாக போட்டு நன்கு பொரித்தெடுங்கள்.

## கறுப்பை நீக்க சில டிப்ஸ்



மேலும் சில டிப்ஸ்

- 2-3 டேபிள் ஸ்பூன். பால் மற்றும் 1 டேபிள் ஸ்பூன் தேன் சேர்த்து நன்கு கலந்து, முகத்தில் தடவி ஊற வைத்து முகத்தில் குளிர்ந்த நீரில் அலசி வந்தால், முகத்தில் இருக்கும் கரும்புள்ளிகள் போவதோடு, முகமும் பளிச்சென்று இருக்கும்.
- சந்தன பவுடர் ஒரு சிறந்த சரும பராமரிப்பிற்கு ஏற்ற பொருள். அதனை தண்ணீரில் குலைத்து, கருமை அதிகமாக இருக்கும் இடத்தில் தடவ வேண்டும். வறண்ட சருமம் உள்ளவர்கள், அதோடு பால் மற்றும் சிறிது தேனை சேர்த்து கலந்து தடவி, 10-15 நிமிடம் ஊற வைத்து செய்யுங்கள். அதனை நாள்தோறும் செய்து வந்தால், நாளடைவில் நிறமி செல்களான மெலனின் அளவு குறைந்துவிடும்.
- கோக்கோ வெண்ணெய் ஒரு நல்ல மாஸ்சுரைசர் மற்றும் ஆன்டி-ஆக்ஸிடன்ட் நிறைந்த பொருள். அது விரைவில் மெலனின் அளவை சரிசெய்யும். மேலும் எந்த இடம் அதிகமான அளவு கருப்பாக உள்ளதோ, அந்த இடத்தில் தடவி, 10 நிமிடம் ஊற வைத்து கழுவி வந்தால் நல்ல பலன் கிடைக்கும். அதுவும் அதனை செய்தால் உடலில் இரத்த ஓட்டத்தின் அளவு அதிகரிக்கும்.

மேலும் இவை செல்கள் பாதிப்படையாமல் உடலில் அதிகமாக இருக்கும் மெலனின் அளவை குறைப்பதோடு, முகமும் அழகாக பொலிவோடு இருக்கும்.

முற்றும் .. ..

# கொட்டியாபுரத்து சிங்கம்

**கொட்டியாபுரம்**
வரலாற்றுக் குறுநாவல்
கி.பி 1600 - 1700 ம் ஆண்டுகளில்
கொட்டியாபுரத்தில் கோலோச்சிய வன்னிமையின் கதை

**சம்பூர் சதீஸின்**

கடந்த வார தொடர்ச்சி .. ..

கண்டி மன்னனுக்கு இயல்பாகவே கொட்டியாரப் பற்றின் மேல் ஒரு தனிப்பார்வையுண்டு.

இதனால் காரளசிங்கனிடம் கொட்டியாரப்பற்றில் பறங்கியரின் நடவடிக்கைகளை உடனுக்குடனே தனக்கும் தெரியப்படுத்துமாறு வன்னிபத்துக்கு கூறவும். சொன்னார். வன்னிபம் தனக்கனுப்புவித்த முத்துப் பதித்த தங்கப் பதக்கத்தைப் பெற்ற செனரத் மன்னன் அதற்கு நன்றி கூறியதோடு, தனக்குப் பின் கண்டி இராசதானியை ஆளும் தன் புதல்வர்களுக்கும் கொட்டியார வன்னிபம் துணையாகவிருக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்தான். பின் வன்னிமைக்காக வைத்திருந்த மடலையும் கொடுத்து நாளை பொழுது புலர்ந்ததும் பயணத்தைத் தொடருமாறு கூறி வன்னிமைக்கு தனது அன்புப் பரிசாக தனது முத்திரை பதித்த இரத்தின மாலையொன்றையும் கொடுத்தனுப்பினான்.



பொழுதும் புலர்ந்தது. இதற்காகவே காத்திருப்பவன் ஆகையால் தனது வீரர்களுடன் புரவி மீதேறி கண்டியழகை அள்ளிப் பருகி ஆனந்த மேலீட்டினால் மிக விரைவாக புரவியைச் செலுத்தியவாறு இரண்டாம் நாள் அந்தி நேரத்தில் மாமனாரான வன்னிபத்தைச் சந்தித்து நடந்தவைகளைக் கூறி கண்டியரசன் கொடுத்தனுப்பிய இரத்தினமாலையையும் கொடுத்து தன் துணைவியைத் தேடி மாளிகைக்குள் நுழைந்தான்.

ஆனந்த மேலீட்டினால் அவனை ஆரத் தழுவி அன்பு முத்தங்களைப் பதித்து இளையவல்லி மார்பில் முகம் புதைத்தாள். இருவரும் ஒருவரையொருவர் பார்த்தவாறு இவ்வுலகம் மறந்து காதலேகிக் கண்ணீர் மல்கி கசிந்துருகினர்.

### கோயில் தகர்ப்பு

காலம் பல உருண்டோடியது. இளஞ்சிங்கனுக்கு இளவரசுப் பட்டங்கட்டி கொட்டியாபுரப்பற்று வடக்குப் பிரதேசத்தின் நிர்வாகத்தையும் கொடுத்தார். வன்னிபம் அகவை ஐந்தாயிருக்கும் போதே நாட்டுப்பற்று மிகுந்து காணப்பட்ட இளஞ்சிங்கனின் மனமும், பறங்கியர் மேலான வெறுப்பும் வளர்ந்து கொண்டேயிருந்தது. இதற்கு சிகரமாய் அமைந்தது போல திருகோணமலையில் நிகழ்ந்த ஒரு சம்பவம் அவன் மனதை வெகுவாகப் பாதித்தது. அது கோணேசர் கோயிலை பறங்கியர் இடித்தழித்த செய்தியாகும்.

செய்தி கேட்ட இளவரசன் இளஞ்சிங்கன் நம்பவும் முடியாமல் இப்படிப்பட்ட ஒரு கெடுதியான காலத்தில் வாழ்கின்றோமே என எண்ணங் கொண்டவனாய், தனது வெண்புரவி மீதேறி காற்றிலும் கடுதியாய் தோணிக்கல் கடற்கரையை நோக்கி விரைந்தான். ஏனெனில் அவன் அங்கிருந்தவாறே திருக்கோணேஸ்வரப் பெருமானை வணங்குவது வழக்கம். இங்கிருந்து பார்க்கும் போது தெட்சண கைலாசத்தின் தோற்றம் மிகத் தெளிவாகத் தெரியும். அதிலும் மூன்று இராஜகோபுரங்களும் வண்ணமயமாக சோலைக்குள் இருப்பது போலத் தோன்றும்.



இன்று அவனால் அக்காட்சியைக் காண முடியவில்லை. வெறும் மரங்கள் மட்டுமே தெரிந்தன. கோபுரங் களைத் தேடினான். அப்போது தான் கேள்விப்பட்ட சம்பவங் களை நினைத்துப் பார்த்து குளக்கோட்டன் ஆணை என்று கூறப்படும் பட்டயமும் நினைவுபடுத்திப் பார்த்தான். கோணேசப் பெருமானை மனதார வணங்கி விட்டு கலங்கிய கண்களில் நீரைத் துடைத்துவிட்டு நிமிர்ந்தவன் அலைமேவும் ஆழியிலே துரும்பு தென்படுவது போன்று தூரத்தே சிறிய வத்தைகளில் மக்கள் ஒருசிலர் வருவதைக் கண்டான்.



வத்தையானது அருகே வரும் போது அதிலே பெரியவர்களும் சிறியவர்களுமாய் ஐந்தாறு பேர் இருப்பதைக் கண்டான். அவர்களிடம் நீங்கள் யார்? என்ன நடந்தது, ஏன் இவ்வாறு ஆழ்கடலிலே உயிரைப் பணயம் வைத்துப் பயணம் செய்கின்றீர்கள்? என வினாக்களைத் தொடுத்தான். அவர்களுள் முதியவரொருவர் முன் வந்து, இளவரசனை அடையாளங் காண முடியாமல் குழந்தாய் என விழித்து தழுதழுத்த குரலில் திருகோணமலையில் சில தினங்களுக்கு முன் நிகழ்ந்த சம்பவங்களை கண்ணீருடன் கூறத் தொடங்கினார்.

அன்று உச்சிகாலப் பூசை திருக்கோணேஸ்வரப் பெருமானுக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது சிவனடியார்கள் வேடத்தில் புகுந்த கயவர்கள் சில கோயிலைக் கொள்ளையடித்துச் சூறையாடினர். இது நிகழ்ந்து சில நேரத்துக்குள் பெரும்படை யொன்றுடன் கோயில் மலைக்கு வந்த பறங்கிக் கூட்டத்தினால் கோயில் கட்டடங்கள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. அத்தோடு அங்கு வழிபாடியற்றிக் கொண்டிருந்த மக்கள் பறங்கிப் படையினரால் வாளால் வெட்டியும், சூடுகலன்களால் சுட்டும் துன்புறுத்தப்பட்டனர்.

மக்கள் கூட்டம் கூட்டமாக கையில் அகப்பட்ட கோயில் திருவுருவச் சிலைகளை எடுத்துக் கொண்டு ஓடினர்.

... பாகம் 07
தொடரும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கில தின நாடகப் போட்டிகளில் புனித மரியாள் வலயமட்டத்தைச் சுவீகரித்தது

2014ம் ஆண்டிற்கான வலய மட்ட ஆங்கில தினப் போட்டியில் நான்கு பிரிவுகளிலும் நடைபெற்ற நாடகப் போட்டியில் புனித மரியாள் கல்லூரி நான்கு பிரிவு நாடகத்திலும் முதலிடம் பெற்றுள்ளது.




**உங்களது ஊரின் விளையாட்டுச் செய்திகளை எங்களுக்குச் சொல்லுங்கள்**

**075 4252042**

## வித்தியாபிரபா 2014 - வெற்றியாளர்

கல்வி அமைச்சு மற்றும் தொழிநுட்ப ஆராச்சியும் அமைச்சு ஆகியவற்றின் அனுசரணையுடன் Srilanka Accreditation Board இனால் தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூட வித்யாபிரபா 2014 போட்டியின் பரிசளிப்பு விழா ஜுன் 09ம் திகதி பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. இதில் மட்/ வின்சன்ற் மகளிர் உயர்தர பாடசாலையின் இரசாயனவியல் மாகாண மட்ட வெற்றியாளராகவும், பௌதீகவியல் ஆய்வுகூட வலய மட்ட வெற்றியாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.





# ஒக்டோபரில் தயாராகும் வெபர் மைதானம்

150 மில்லியன் ரூபா செலவில் நவீனமுறையில் புனரமைக்கப்பட்டு வரும் மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தின் நிர்மாணவேலைகள் பூர்த்தியடைந்து வருகின்ற நிலையில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை மாலை ளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அழுத்கமகே பார்வையிட்டார்.மட்டக்களப்புக்கு வருகைதந்த அமைச்சர் மைதானத்தின் நிர்மாண வேலைகள் குறித்துக் கலந்துரையாடியதுடன் வேலைகளை விரைவு படுத்துமாறும் ஒப்பந்தகாரரைப்பணித்துள்ளார்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் வெபர் மைதானம் திறந்து வைக்கப்படவுள்ளதுடன் அது மாநகர சபையிடம் ஒப்படைக்கப்படும் வெபர் விளையாட்டு மைதானம், சுமார் 10 ஏக்கர் விசாலமான காணியில் உள்ளக அரங்கு, வெளி அரங்கு கொண்ட சகல வசதிகளும் அமைந்த நவீன விளையா ட்டு அரங்காக நிர்மாணிக்கப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## தங்கப்பதக்கம் வென்ற பெண்கள் அணி

கடந்த 04.07.2014 தொடக்கம் 06.07.2014 வரை மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பல்கலைக்கழகங்களுக்கான கூடைப்பந்தாட்ட போட்டியில் முதன் முறையாக கிழக்குப் பல்கலைக்கழக பெண்கள் அணியினர் தங்கப்பதக்கத்தை வென்றுள்ளனர். வெள்ளிப்பதக்கத்தை ஆண்கள் அணியினர் பெற்றுள்ளனர். கடந்த காலங்களில் இப்போட்டியில் கிழக்குப் பல்கலைக்கழக ஆண்கள் அணியினர் தங்கப்பதக்கம் பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.










## தென்னாபிரிக்கா Vs இலங்கை

0?.07.2014 இலங்கையின் கண்டி மாகாணத்தில் பல்லேகல வில் நடந்த இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி மிக அபார்ரமாக விளையாடி 87 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.



டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த இலங்கை அணி 49.2 ஓவர்களில் 267 ரன்கள் எடுத்து அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. தென்னாப்பிரிக்கா தரபில் மெக்லாரன் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பின்னர் 268 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தென்னாப்பிரிக்க அணியில் ஆம்லா மட்டும் 101 ரன்கள் எடுத்தார். தென்னாப்பிரிக்க அணி 38.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 180 ரன்கள் மட்டுமே எடுத்து படுதோல்வி அடைந்தது.

## அஸ்மி பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

திருகோணமலை அஸ்மி பாலர் பாட்சாலையின் விளையாட்டு போட்டி ரொட்டவெவ மஸ்ஜிதுல் "ஹதா ஜும்மா பள்ளிவாசலுக்கு முன்னால் மிக குதூகலமாக கொண்டாடப்பட்டது.

அஸ்மி பாலர் பாடசாலையின் ஸ்தாபகர் அப்துல்சலாம் யாசீம் அவர்களின் 31 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடும் முகமாக இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலையின் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

(கதிரவன்)



# சர்வதேசச் செய்திகள்

## புதிய நோட்டுக்கு எதிர்ப்பு



ரஷ்யாவில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் புதிய 100 ரூபிள் கரன்ஸி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த கரன்ஸியில் கிரேக்க கடவுள் நிர்வாணமாக ரதத்தில் செல்வது போன்ற புகைப்படம் இடம்பெற்றுள்ளது. இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்படுகின்றது. இந்த கரன்ஸியில் இருக்கும் கிரேக்க கடவுளின் சிலை ஏற்கனவே மாஸ்கோவில் உள்ள Bolshoi Theatre என்ற பகுதியில் இருப்பதாகவும், அதனால்தான் கரன்ஸியில் இந்த கடவுளின் படத்தை போட்டதாகவும் விளக்கம் கொடுத்துள்ள ரஷ்ய அரசு, திரும்பப்பெறுவது குறித்து ஆலோசனை செய்யும் என்று கூறியுள்ளது.

## இஸ்ரேல் ஆலை நோக்கி ஏவுகணைகள்

பாலஸ்த்தீனத்திலிருந்து ஏவுகணைகள் இஸ்ரேலின் அணு ஆலையை நோக்கி ஏவப்பட்டுள்ளது. ஏவப்பட்ட ஏவுகணைகளில் ஒன்று தடுப்புப் பொறிமுறையால் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது. ஏவப்பட்ட மற்றைய ஏவுகணைகள் அணு ஆலைக்கு அருகாமையிலுள்ள பகுதியைத் தாக்கியுள்ளது.

## கை சும்மாவே இருக்காது!

சீனாவில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய தலைவர்களுள் ஒருவரான றுயபெ ஞமையபெ அவர்கள் சமீபத்தில் ரயில் பயணம் ஒன்று மேற்கொண்டார். அவர் உட்கார்ந்திருந்த இடத்தின் அருகே நின்றுகொண்டிருந்த ஒரு பெண்ணின் தொடையில் கை வைத்து லேசாக கிள்ளியுள்ளார். இந்த சம்பவத்தை எதிரே உள்ள ஒரு பயணி தற்செயலாக தனது மொபைலில் வீடியோ எடுத்து இணையதளங்களில் உடனே பதிவு செய்துவிட்டார்.



## ஐ.நா அங்கீகாரம் அளித்தது

உலகம் முழுவதும் உள்ள ஐநா ஊழியர்களின் ஓரின சேர்க்கை திருமணத்திற்கு ஐநா அங்கீகாரம் வழங்கியுள்ளது. அவர்கள் பணிபுரியும் நாடுகளில் ஓரின திருமணத்துக்கு சட்ட அனுமதி இல்லாத போதும் ஐநா அங்கீகாரம் வழங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



உலகம் முழுவதும் தற்போது ஓரின சேர்க்கையாளர்களின் திருமணம் குறித்து விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. ஆண், பெண் திருமணத்துக்கு உரிய அனைத்து உரிமைகளும் தங்களுக்கும் வழங்க வேண்டும் என்று ஓரின சேர்க்கையாளர்கள் போராட்டம் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## பாவப்பட்ட தந்தை?

பிரிட்டனில் உள்ள ஒரு பெண் நிர்வாண புகைப்படம் ஒன்றை ஆண் நண்பருக்கு அனுப்புவதற்கு பதிலாக தவறுதலாக தந்தைக்கு அனுப்பிவிட்டதால் பெரும் பதட்டம் அடைந்து டுவிட்டரில் ஆலோசனை கேட்டு தனது நண்பர்களிடம் டுவிட் செய்துள்ளார்.

## இது தண்டனையா

ஜார்க்கண்ட் மாநிலம் பொகாரோ மாவட்டத்தில் உள்ள ஸ்வாங் குல்குலியா தவ்ரா கிராமத்தைச் சேர்ந்த 25 வயது வாலிபர் கடந்த திங்கட்கிழமை இரவு மது அருந்திவிட்டு பக்கத்து வீட்டுக்குள் புகுந்து அங்கிருந்த பெண்ணிடம் தகாத முறையில் நடக்க முயற்சி செய்துள்ளார்.

இதை பார்த்த அந்த பெண்ணின் கணவர் குடிகாரரை அடித்து வெளியே விரட்டிவிட்டார். இதையடுத்து அந்த நபர் போதை தெளிந்ததும் பஞ்சாயத்தை கூட்டி பக்கத்துவீட்டுக்காரர் தன்னை தாக்கியதாக கூறினார்.

இதை கேட்ட பஞ்சாயத்து தலைவர் போபால் பாசி பக்கத்துவீட்டுக்காரர் தாக்கியதற்காக அவரது 10 வயது மகளை பாலியல் பலாத்காரம் செய்யுமாறு உத்தரவிடடுள்ளார்.

## ஏழைக்கு உதவாத பட்ஜெட்

நரேந்திர மோடி தலைமையிலான அரசு தாக்கல் செய்துள்ள முதல் பொது பட்ஜெட் குறித்து மக்களவை காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே கூறுகையில், “ஒருபுறம் முந்தைய அரசின் வரிக் கொள்கைகளின்படி வரி வசூல் நடவடிக்கையை தொடர்வதாக கூறிவிட்டு, அழுத்தம் காரணமாக பெரிய தொழில் நிறுவனங்களுக்கு தள்ளுபடி வழங்கியிருக்கிறார்கள்.

மகாத்மா காந்தி ஊராக வேலை உறுதி அளிப்புத்திட்டம் போன்ற எந்த நலத்திட்டங்களும் பட்ஜெட்டில் இல்லை. அதிக பணவீக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள சாதாரண

## சீனாவில் அபாயம்

சீனாவில் உள்ள Chengdu என்ற பகுதியில் உள்ள கார் பார்க்கிங் செய்யப்பட்டிருந்த இடத்தில் திடீரென ஏற்பட்ட 30 அடி பள்ளத்தில் பார்க்கிங் செய்யப்பட்டிருந்த கார்கள் பூமிக்குள் புதைந்தன. இதனால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடற்கரைச்சேனை சுடலை கடற்படை வசம்

## சுங்கான்குழிச் சுடலை தனியார் வசம்

திருகோணமலை கிண்ணியாப் பிரதேசத்திலுள்ள தமிழரின் வரலாற்றுக்கால சுடலையான சுங்கான்குழிச் சுடலையை முஸ்லிம் ஒருவர் தனதாக்கிக் கொள்ள முயற்சிக்கும் இவ்வேளையில் சேனையூர் கடற்கரைச்சேனைச் சுடலையைத் தகனக் கிரியைகளுக்காகப் பயன்படுத்துவதை கடற்படை மறித்துள்ளது.

திருகோணமலை மாவட்டம் சம்பூரை அண்மித்த கடற்கரைச்சேனை இந்து மயானத்தில் இறுதிக்கிரியைகளை நடத்த கடற்படை தொடர்ந்தும் அனுமதி மறுப்பதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினரான குமாரசாமி நாகேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

கடற்கரைச்சேனை கடற்படை முகாமின் கட்டுப்பாட்டிலுள்ள இந்து மயானத்தை மக்கள்......

⇦13

# பாரதிபுரத்திற்கு 10 லட்சம் ஒதுக்கு ஆனால் 05 லட்சம் மட்டுமே பகிர்வு

பொருளாதார அபிவிருத்தி இமைச்சின் கீழ் கிராமத்திற்கொரு திட்டம் என்ற தலைப்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மூதூர் பாரதிபுரம் கிராமதிற்கு ஒதுக்கப்பட்ட 10 லட்சம் ரூபாத் தொகையில் தற்போதுவரை 5 லட்சம் ரூபாத்தொகையே பகிரப்பட்டுள்ளதாக பாரதிபுரம் கிராம அபிவிருத்திச் சங்கச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வைந்துலட்சம் ரூபாவைக் கொண்டு பாடசாலை வீதியைப் பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எஞ்சிய தொகையான ஐந்து லட்சம் ரூபாவும் பாரதிபுரம் கிராம அபிவிருத்திக்குப் பகிரப்படுமா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இவ்வியடம் தொடர்பாகப் பொருளாதாரப் பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமேயின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது (ஸ்ரீ)

# அழியும் அபாயத்தில் ஈழத் தமிழினம்



வைத்திய கலாநிதி முரளி வல்லிபுரநாதன்

ஈழத்தமிழினமானது அழிவடைந்து விடும் அபாயத்தை எதிர் கொண்டிருப்பதாக வைத்திய கலாநிதி முரளி வல்லிபுரநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் யாழ் பல்கலைக்கழகத்தில் ஒழுங்கு செய்த 'தமிழரின் எதிர்காலம்: ஒரு குடித்தொகையியல் நோக்கு' என்ற கருத்தரங்கில் உரையாற்றியபோதே சமுதாய மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி முரளி வல்லிபுரநாதன் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

⇦10

# கடலில் தத்தளிக்கும் தமிழ் அகதிகளை இந்தியாவும் ஏற்க மறுப்பு???


அவுஸ்திரேலியாவுக்கு அகதி அந்தஸ்த்து கோரி சென்ற இலங்கையர்களை மீண்டும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று இந்திய அறிவித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவுஸ்திரேலியாவின் ஊடகம் ஒன்று இதனைத் தெரிவித்துள்ளது.

153 இலங்கையர்களுடன் அவுஸ்திரேலியா சென்றுள்ள படகு தற்போது சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது.

எவ்வாறாயினும் குறித்த 153 பேருடனான படகு, தமிழ் நாட்டில் இருந்தே அவுஸ்திரேலியா சென்ற நிலையில், அவர்களை இந்தியாவுக்கே திருப்பி அனுப்புவது தொடர்பில் அவுஸ்திரேலிய.....

⇦13




# போராட்டத்தை ஆரம்பித்ததும் முடித்ததும் இந்தியா

எமது போராட்டத்தை வளர்த்து விட்டதும் இந்தியா, இன்று மௌனிக்கச் செய்ததும் இந்தியா என்றால் வேதனையாக உள்ளது. ஆனால் எமது தீர்வில் இந்தியாவிற்கு தார்மீகக் கடமை உள்ளது என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார். இன்று பல வித இன்னல்களுக்கு உள்ளாகியுள்ள எமது மக்களை மீட்கும் தார்மீக கடமை இந்தியாவிற்கு உண்டு காரணம் எமது போராட்டத்தை ஆரம்பித்தது இந்தியா என்பதை யாரும் மறந்து விட முடியாது என ரெலோ அமைப்பின் உப தலைவரும் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) லங்காசிறி வானொலியின் விசேட செவ்வியில் தெரிவித்தார்.

### கிழக்கு மாகாண நியமனங்களால் தமிழர்கள் வஞ்சிக்கப்பட்டார்கள்

கிழக்கு மாகாணசபையின் நிமனங்களால் தமிழ் மக்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என அச் செவ்விக்குத் தெரிவித்த ஜனா தமிழர்களைத் தவிர்த்து மேற்கொள்ளப்படும் நிமனங்களுக்கு எதிராகத் தமது சொந்தக்கைக்காசைச் செலவு செய்து தமிழத் தேசியக் கூட்டமைப்பு வழக்குத் தாக்கல் செய்துள்ளது எனத் தெரிவித்தார்.




கடந்த ஜூன் மாதம் 21ம் திகதி மொன்ரோ பார்க் கரோலினா அவுஸ்திரேலியாவில் - அகதிகளின் மீதான போரை நிறுத்து- என்ற முனைப்பில் அவுஸ்திரேலியர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போது அவுஸ்திரேலியக் குடிவரவுத்துறை அமைச்சர் ஸ்கொட் மொரிசன் இனவாதத்துக்கான அமைச்சர் எனக் குறிக்கப்பட்ட பதாகையைத் தாங்கி நிற்கும் அவுஸ்திரேலியக் குடிமகள் ஒருத்தி...

# டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த எளிய பொறி

## மட்டக்களப்பு இளைஞன் திருமாறன் சாதனை

டெங்கு மற்றும் நுளம்புகளால் பரவும் நோய்கள் அதிகரித்திருக்கின்ற நிலையில் நுளம்பைக் கட்டுப்படுத்தும் வகையில் நுளம்புப் பொறி ஒன்றை மட்டக்களப்பு பழுகாமத்தைச் சேர்ந்த சேமசூரியம் திருமாறன் கண்டுபிடித்துள்ளார்.

அவர் கண்டுபிடித்த இந்த நுளம்புப் பொறியையும் அதன் செயற்பாடுகள் குறித்தும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்கு அவர் கடந்த வியாழக்கிழமை விளக்கமளித்தார்.

குறித்த நுளம்புப்பொறி சாதாரணமான வெற்று நீர் போத்தல்களைக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளதுடன், மிகவும் செலவு குறைந்ததும், வீடுகளில் பாவிக்கக் கூடியதுமாகும். இதன் மூலம் நுளம்பு பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும் என சேமசூரியம் திருமாறன் தெரிவித்தார்.

புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவரான சேமசூரியம் திருமாறன் குண்டசாலையில் விவசாய டிப்ளோமா பெற்றவராகும்.

இயற்கை முறையிலான ஒருங்கிணைந்த பண்ணை ஒன்றை செயற்படுத்தி வரும் இவர், இது போன்ற பல்வேறு தொழில்நுட்ப ரீதியான உபகரணங்களை செய்து பயன்படுத்தியும் வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

(தவி)



மட்டு செய்திகள் 3ம் பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org